CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஸ்ரீ விடயபுரம் மகான் சரிதமும்

மகாமாயா விலாச விளக்க உரையும்

சட்டாம்பிள்ளை சுவாமிகள் ஆராதித்த "மஹா மாயை" விடயபுரம் ஸ்ரீ மாரியம்மன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஸ்ரீ விடயபுரம் மகான் சரிதமும் மஹாமாயா விலாச விளக்க உரையும்

[தலைப்பைக் கண்டு திகைக்க வேண்டாம்—
இந்நூல் இளைஞர்க்கும் உரியதே]

Vidyapuram Mahan Charithamam

கல்யாண்
எழுதியது

(எல்லா உரிமைகளும் ஆசிரியர்க்கே)

த்ரிசக்தி பதிப்பகம்
6, அந்தோனி தெரு, ராயப்பேட்டை,
சென்னை-600014.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Title : Sri Vidayapuram Mahan Charithamum Mahamaya Vilasa Vilakka Uraiyum.

Author : 'KALYAN'

Rights : © Copyright with the Author

Published by : Thrisakhthi Padhippagam,
6, Antony Street,
Madras—600014.

Sole Agents ; Lalitha Agency,
95, Kutchery Road, Madras—600004.

Printed at : M/s Ramon's Printing Press,
Madras—600017.

First Edition : January, 1980.

Price

Ordinary copy
Rs. 7.00 each.

Plastic jacketed copy
Rs. 8.00 each.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சமர்ப்பணம்

என்னுள்ளே தோன்றாத் துணையாய் ஒளிரும்

* காஞ்சி முனிவர் பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதிகள் அவர்கள்,

* குடந்தை ஸ்ரீ அண்ணாஸ்வாமி பகவான் அவர்கள்,

* விடயபுரம் ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகள் அவர்கள்,

ஆகியோரின் புனிதப் பாதக் கமலங்களுக்கு
இந்நூலில் காணும் சிந்தனை மலர்கள்

சமர்ப்பணம்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அஞ்சலி

என்னை வழி நடத்திச் சென்ற உபாசக சிரேஷ்டர்களான:—

1. ஸ்ரீ திரிவேணிகிரி சுவாமிகள், தபோவனம்,
2. மறைந்த சிக்கல் சோமாஸ்கந்த சாஸ்திரிகள்,
3. மறைந்த தேப் பெருமாநல்லூர் ராமய்யா பிரும்மம்,
4. ஸ்ரீ எம். ஆர். துரைராஜ அய்யர் குஹானந்த மண்டலி
5. சுபஸ்ரீ ராஜம்மாள் சேஷாத்ரி ,,
6. ஸ்ரீ வேலவன் ,,

ஆகியோருக்கு என் சாஷ்டாங்க நமஸ்காரங்கள் உரித்தாகும்.

இன்னும்

வாழ்வில் நிமிர்ந்து நடக்கும் ஆற்றலை ஊட்டிய, குடந்தை, சோலையப்ப முதலி தெரு ராமபஜனை மடம், தலைவர் மறைந்த T. S. பஞ்சாபகேசய்யர் அவர்களையும், எழுதுகோலைத் தூக்கும் துணிவைத் தந்த குடந்தை, தாராசுரம், நாடகாசிரியர், கவிஞர் என். எஸ். வாசன் அவர்களையும், வணக்கத்துடன் நினைவு கூர்கிறேன்.

தவிர

அரியஸியத்திமாளுகைத் திகழ்ந்து மறைந்த, ஸாரகல்லு ராமதேவுடு எனும் S. R. செங்கல் ராவ் குமாரர், எனது உடன் பிறவா சகோதரராக விளங்கும் உடுமலைப்பேட்டை, மகாசக்தி பாததூளி T. நாகசுப்ரமண்யம் அவர்களுக்கும் எனது இனிய உறவினர் பிடில் வித்வான் பராசக்தி பாததூளி P. நாகராஜ சர்மா அவர்களுக்கும் இந்நூலெழுதும் முயற்சியினை வெற்றியாக்கித் தந்தமைக்கு நன்றிக் கடன் பட்டுள்ளேன்.

முடிவாக

ஸ்ரீ அண்ணுஸ்வாமி பகவான் அவர்களின் பூரண கடாக்ஷம் கிடைக்கப் பேருதவியாக இருந்த (மறைந்த) நடேசய்யர் அவர்களையும், அன்னாரது துணைவியார் மாது ஸ்ரீ ஜயலக்ஷ்மி அம்மாள் அவர்களையும் மிகுந்த நன்றியுடன் இந்த கட்டத்தில் நினைவு கூர்வது அவசியமே.

என்னை ஈன்றெடுத்த அன்னைக்கும், மறைந்த என் தந்தைக்கும் நமஸ்காரம் செய்து கொள்வதோடு இவ்வஞ்சலி முழுமை பெறுகிறது.

சென்னை
1-1-1980

த்ரிசக்தி பாததூளி
T. V. கல்யாணசுந்தரம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அடக்கம்

குரல்	—	11
பொருள்	—	17
அருள் :-	—	33
திரு அருள்	—	33
திரு உருவம்	—	34
திரு நோக்கு	—	35
திரு ஆற்றல்	—	37
திருவின் கரு	—	38
திருத் தவம்	—	42
திரு விளையாடல்	—	45
திருத் தலம்	—	47
திருத் தோற்றம்	—	51
திரு ஐக்கியம்	—	53
திருச் சாதனை	—	57
திருத் தியானம்	—	60
திருத் தொண்டு	—	62
திரு முயற்சி	—	68
திரு விழா	—	71
திரு லீலைகள்	—	78
திருப் பேராற்றல்	—	85
திரு யோகம்	—	90
திருப் பயிற்சி	—	95
திரு மார்க்கம்	—	99
திரு மோனம்	—	107
திருப் பேரொளி	—	117
திரு உலா	—	123
திருப் பேரியக்கம்	—	125
திருப் பரிவு	—	127
திருப் பேருணர்வு	—	128
திருவுக்குச் சிறு ஒய்வு	—	130
திருச் சுழல்கள்	—	132
திரு மகிமை	—	135
திருச் சிறப்பு	—	140
திருவின் உரு	—	142
திருவின் வருகை	—	143
திருப்பணி	—	145
அனுபந்தம்	—	147

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

முகவுரை

ஸ்ரீமுகம் அளித்து ஆசிதந்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள் திருப்பாதங்களுக்கு எமது சாஷ்டாங்க நமஸ்காரங்கள்.

இந்நூலுக்கு மதிப்புரைதந்து உதவிய கவிஞர் கண்ண தாசன் அவர்களுக்கும். சிறப்புரை தந்து உதவிய 'அண்ணு' சுப்ரமண்ய அய்யர் அவர்களுக்கும் பராசக்தி பாததூளி, மகாசக்தி பாததூளி ஆகியோருக்கும் எமது நன்றி உரித் தாகும்.

உண்மையைத் தரிசனம் செய்ய தாக விடாய் கொண்டு வளைய வரும் சிந்தனைச் சீலர்களுக்கு இந்நூல் நிச்சயம் கானல் நீரல்ல.

அதே போல் வாழ்க்கை ஒரு புதிராகவே, அவிழ்க்க முடியாத முடிச்சாகவே தோற்றும் சுழலில் சிக்கி அச்சம் கொண்டு எதிர்காலத்தை நினைந்து குழம்பும் மெல்லிதயம் கொண்டோர்க்கு இந்நூல் ஒரு தெளிவான வழியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளும் திண்மையை அளிக்கு மென்று நம்பலாம்.

பிரசுரிப்புப் பணியில் ஒத்துழைப்பு நல்கிய கலைஞன் திரு மாசிலாமணி அவர்களும் ராமன்ஸ் பிரிண்டிங்பிரஸ், திரு ராமன் அவர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

இந்நூலைப்பற்றித் தமது அபிப்ராயங்களைப் பகிர்ந்து கொள்ள விழையும் அன்பர்கள், கடித மூலம் தொடர்பு கொள்வதை வரவேற்கிறோம்.

இந்நூல் யாருக்கும், யாவருக்கும் இசைவாக இருக்கும் என்பதே எமது கருத்து. இறை விருப்பமும் அவ்வாறுகவே இருக்கப் பிரார்த்திக்கும்,

சென்னை 14. பிரசுரிப்பாளர்கள்.
17. 1. 80.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம;

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ மட ஸம்ஸ்தானம் காஞ்சீபுரம் - 631592

யாத்ராஸ்தானம் :- புனு நகரம் (மஹாராஷ்ட்ரம்)

தேதி 27-12-1979

திருவாரூருக்கு ஸமீபத்திலிருக்கும் விடயபுரத்தில் விளங்கும் ஸ்ரீ மஹாமாயாதேவியின் (மாரியம்மனின்) உபாஸகராக விளங்கிய ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமியைப் பற்றிக் கும்பகோணம் ஸ்ரீ கல்யாணம் எழுதியிருக்கும் சரித்திரத்தில், மாரியம்மனின் மஹிமை, மனிதர்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள், மஹான்களின் தெய்வீக, பரோபகார சிந்தனைகள், அத்வைத தத்வம், இந்த ஸ்வாமியின் மஹத்வம் மூதலிய விசேஷங்கள் எளிய தமிழ் நடையில் நன்கு விளக்கபட்டிருக்கின்றன.

ஆஸ்திகர்கள் இந்நூலைப் படித்து இதிலுள்ள வழி முறைகளை வாழ்க்கையில் கடைப்பிடித்தும், விடயபுரத் திருப்பணிகளுக்கு தாராளமாக உதவி செய்தும், அம்பாளின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

நாராயண ஸ்மிருதி:

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சிறப்புரை

இந் நூலாசிரியர் நூலை அச்சேற்றுவதற்குமுன் படித்துப் பார்க்க என்னிடம் கொடுத்தார். படித்தேன். பேருவகை எய்தினேன். இன்றைய கால ஓட்டத்தில் இம் மாதிரி நூல்கள் ஒவ்வொரு வீட்டிலும் வரவேற்கப்பட வேண்டும். அவற்றைப் படித்ததின் பயனாக, சமூகத்தில் ஒரு புது விழிப்பு ஏற்பட வேண்டும், ஆன்மீக தாகம் வளர வேண்டும் என்பது என் அவா.

சிக்கல் நிறைந்த இன்றைய வாழ்க்கை முறையில் எழும் அநேகம் கேள்விகளுக்கு விடைகளை இந்நூலைப் படிப்பவர்கள் காண்பார்கள்.

பெயரிட்டுக் குறிப்பிடாமலேயே கர்மயோகம், பக்தி யோகம், ராஜயோகம், ஞானயோகம் ஆகிய சீரிய மார்க்கங்களின் உயிர்நிலைகள் அங்கங்கே விளக்கப்பட்டுள்ளன.

விடயபுரம் மகான் ஸ்ரீசட்டாம்பிள்ளை சுவாமிகளுடைய சாதனைகளைப் பற்றிக் கூறுமிடங்களில், சாதனங்களின் பொதுவான இலக்கணத்தையும், சிறப்பையும், நுட்பமான தன்மைகளையும், எளிதில் புரியும்படி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

அம்மகானுடைய நடை, தெய்வ வழிபாட்டுமுறை, ஏழைகளுக்கு உதவி புரியும் பண்பு, ஆன்ம குணங்கள் எல்லாம் ஒவ்வொருவராலும் போற்றிப் பின்பற்ற வேண்டியவை.

இந்நூல் பிற இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்ப்பாகி வெளிவர இருக்கிறது என அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலைத் திறம்பட எழுதியிருக்கும் எனது அன்பிற்குகந்த சிந்தனைச் செல்வன் கல்யாண சுந்தரத்திற்கும், இதை வெளியிடுவோர்க்கும் எனது உளங்கனிந்த ஆசிகள்.

சென்னை-4 "அண்ணா"

29-11-'79 அண்ணாசுப்ரமண்ய அய்யர்

Funding by IKS-MoE

தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவரில்லம்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மதிப்புரை

இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ள விடயபுரம் மகான் யார் என்பது பற்றியோ, "மகாமாயா விலாசம்' என்பது என்ன என்பதைப்பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் திரு. கல்யாணம் அவர்கள் எழுதியுள்ள இந்த நூலைப் படித்துப் பார்த்தபோது இவை இரண்டுமே தெரிய வேண்டிய விஷயங்கள் என்பதைக் கண்டு கொண்டேன்.

விடயபுரம் மகான் அவர்கள் வேளாளர் வகுப்பிலே பிறந்தவர். எளிமையாகவும், அடக்கமாகவும், தன்னலம் கருதாதும் வாழ்ந்து மக்களுக்குப் பெருந்தொண்டாற்றினார். குறிப்பாக ஏழை மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடு பட்டார். இவர் இறைவன் கருணை கைவரப் பெற்றவர் என்று இந்நூல் கூறுகின்றது. சித்திகள் பல பெற்றவர் என்றும் குறிப்பிடுகின்றது. உன்னதமான மனிதர்கள் எங்கெங்கோ எவ்வெப் பொழுதோ அவதரிக்கின்றார்கள். அவர்களில் சிலருக்கு மட்டுமே விளம்பரம் கிடைக்கிறது. பலர் குடத்தினுள் விளக்காக இருந்து மறைந்து விடுகின்றனர். இருந்தபோதிலும் திரு கல்யாணம் அவர்களைப் போன்ற சில பக்தர்களை, சில சீடர்களை அவர்கள் பெற்று விடுகிறார்கள். இவர்கள் மூலம் செய்தியறிகின்ற நம்மைப் போன்றவர்கள் 'நாம் இத்தகைய மகானைக் காணும்ற் போனோமே' என்று வருந்துகின்றோம்.

இந்தச் சரித்திரத்தில் பல அதிசய சம்பவங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு ஸ்ரீ விடயபுரம் மகானின் சக்தியை யாரும் அறிந்து கொள்ள முடியும்.

மகாமாயா விலாச விளக்கங்கள் ஆங்காங்கு இணைந்து, சமய நம்பிக்கை யுள்ளவர்களுக்கு பெரிதும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

இது ஒரு ஆழ்ந்த தத்துவ நூல். சொல்லப் போனால் இதில் கண்டுள்ள இரண்டு செய்திகளும், தமிழக மக்கள் அனைவருக்கும் புதுமையானவை. 'இது என்ன' என்ற ஆவலோடு படிக்கத் தொடங்கினால் ஒரு மனநிறைவோடு படித்து முடிக்கலாம். இதை எழுதியுள்ள திரு. கல்யாணம் அவர்கள் நமது பாராட்டுக்கும், மதிப்புக்கும் தகுதியுடையவர்.

சமயநம்பிக்கை மிக்க தமிழக மக்கள் இதனை வரவேற்று எழுதிய ஆசிரியரை வாழ்த்தியருள வேண்டும்.

'கவிதா,'
சென்னை, 30—11—79

அன்பன்
கண்ணதாசன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அணிந்துரை

இந்நூலில் அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கும் முக்கியக் கோணம், நடப்புக்கள் யாவிலும் ஊடுருவி, உறைந்து நிறைந்து நிற்கும் ஈசுவரசங்கல்பத்தை (Will Divine இறை விருப்பம்) அறியும் பயிற்சி பற்றியதே.

இந்நூலைப்பற்றி அபிப்ராயம் எழுதும் நிலையில் நான் இல்லை. எனது தவத்தந்தையார் சொன்ன அநேகம் உபாசனா இரகசியங்கள், கருத்துக்கள், திரு கல்யாண் அவர்களின் எழுதுகோல் வாயிலாக வெளிவந்துள்ளமை கண்டு பேராச்சர்யம் எய்தியுள்ளேன். தெய்வரகசியங்களை இவ்வாறு வெளியிட தெய்வமே சங்கல்பம் கொண்டுள்ளதால்தான் இப்படி ஒரு அரியநூல் நம் தலைமுறைக்குக் கிடைக்கிறது என்று எனக்குப் புரிந்தபோது ஸ்ரீ ஜகன்மாதாவின் கருணையை நினைந்து நெகிழாமல் இருக்கமுடியவில்லை.

மகான்கள் மனம் வைத்தால் தமது சித்திகள் மூலம் அதிசயிக்கும் விதமாய் எதையும் ஈடேற்றித் தருவார்கள் எனும் அர்த்தமற்ற மயக்கத்தை முறியடித்து, நேரம் பாழாவதையும், காலம், இயக்கச் சக்தி இவை விரயமாவதையும் தடுக்க, அநேகம் விஷயங்கள் இதன்கண் ஆழமாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

இளைஞரிடையே இந்நூலுக்கு நல்ல வரவேற்பிருக்கும் என்று எண்ணுகின்றேன். பிரசுரிப்பாளருக்கும், ஆசிரியருக்கும் வாழ்த்துக்கள்.

பெங்களூர்
10—1—80

மகாசக்தி பாததூளி
T. நாகசுப்ரமண்யம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

முன்னுரை

எழுதுவோனின்

குரல்

காப்பு

ஆனைமுகமும் ஆறுமுகமும் ஆடுபதமும் ஆயிதுணையும்
ஆனமுதலாய் ஆவதற்கே ஆன்றோர்தாள் அடைவோமே

எண்ணித் துணிந்தபின் எழுதத் துணிவோமெனக் காத்திருந்தால் காலம் காத்திராதே எனும் எண்ணத்தில், நல்லதைத்தானே செய்கிறோம் எனும் ஆர்வத்திலே, மிகுந்த அச்சத்துடனும் எச்சரிக்கையுடனும் ஸ்ரீ சட்டாம் பிள்ளை சுவாமிகள் எனும் ஸ்ரீ விடயபுரம் மகான் அவர்களின் சரிதத்தை, எனது உறவினரான பிடில் வித்வான் திரு நாகராஜ சர்மா அவர்களது அன்புக் கட்டளைக்கு இசைந்து எழுதலானேன்.

திரு சர்மா அவர்களது கூட்டுறவு எனக்குப் பிள்ளைப் பிராயத்திலிருந்து ஏற்பட்டவொரு ஆன்மீகப் பிணைப்பு. புதுச்சேரியில் வாழ்ந்த இவர் சிதம்பரம் ராஜா அண்ணாமலை சர்வகலாசாலையில் இரண்டு வருடக் கல்லூரிப் படிப்பின் முடிவில் கும்பகோணம் சென்று பிடில் மேதை இராச மாணிக்கம் பிள்ளையிடம் சிக்ஷை பெற்றவர். திருவண்ணாமலையில் இவரது தந்தை K. பஞ்சாபகேச அய்யர் உத்யோகமாயிருந்தபோது, சர்மா சிறுவனாக இருந்தார். அந்த வயதிலேயே இவர் பகவான் ரமணர், ஸ்ரீசேஷாத்திரி ஸ்வாமிகள் இன்னும் பலப்பலப் பெரியோர்களை அடிக்கடி தரிசனம் செய்யவும் அதிக நேரத்தை அவர்கள் சந்நிதியில் கழிக்கும் நல்வாய்ப்பினையும் பெற்றார். இவரது தந்தைக்கு மதுரை ஸ்ரீ குழந்தையானந்த ஸ்வாமிகளின் உபதேசம் கிடைத்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திருந்தது. அந்தப்புண்யப் பாரம்பர்யம் காரணமாகவும், பூர்வ புண்யவசத்தாலும் இவரது வாழ்க்கை அவ்வப்போது யாராவது ஒருமகானுடன் இணைந்தேஇியங்கி வந்திருக்கிறது. கும்பகோணத்தில் சுமார் 1930ம் ஆண்டுமுதல் 1959 வரை வாழ்ந்த ஸ்ரீ அண்ணுஸ்வாமி பகவான் எனும் பெரியாரின் தொடர்பு இவருக்கு இருபது வருடத்திற்கும் மேலாக இருந்திருக்கிறது. பூர்வாசிரமத்தில் வெங்கட்டராமன் எனும் பெயர் கொண்ட ஸ்ரீ அண்ணுஸ்வாமி பகவான் மதுரையில் பிறந்தவர். இவருக்கும் இளவயதிலேயே சமாதி கைகூடியது. ஈடிணையில்லா சித்தி விளையாட்டுக்கள் நிகழ்த்திய ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகளுக்கும் அண்ணுஸ்வாமிகளுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என எண்ண இடமுண்டு.

ஸ்ரீ அண்ணுஸ்வாமி பகவான் அவர்களது நிலையும் வழியும் மற்றப் பெரியோர்களின்றும் மாறுபட்டவொன்று. புயலென நடப்பார். என்னென்னவோ பேசிக் கொண்டே இருப்பார். அவரது பேச்சின் அர்த்தம் மற்றவர்களுக்கு விளங்குவது கடினம். சித்தமும் பார்வையும் எப்போதும் அண்ட சராசரங்களில் உலவும் நிலை. அங்கே காண்பவை களை ரசித்தவாறே இவர் உதிர்க்கும் வார்த்தைகள் எங்கோ நடக்கும் அமானுஷ்யமான நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனை யாக இருக்கும். அதைக் கேட்போர் இவருக்குச் சித்தப் பிரமை என்றே கொள்வர். சில சமயம் மணமென்றும் நாற்றமென்றும் பாராமல் உடலிலே எதை எதையோ பூசிக் கொள்வார். அடங்காமல் அங்கு மிங்கும் ஓடுவார்.

இவருக்குப் பைத்தியம் முற்றிவிட்டதென்று கருதி இவரைத் திருவண்ணமலை பகவான் ரமண மகரிஷிகள் முன்னிற்கு அழைத்து வந்தார்கள்.

மகரிஷிகள் இவரை அழைத்து வந்தவர்களிடம் சொன்னாராம், 'கெட்டிக் காரன். தன்னைச் சுற்றி கெட்டி யாக ஒரு வேலி போட்டுக் கொண்டு விட்டான், தன் வேலைக்கு எந்த வித தொந்திரவும் அணுகாதவாறு. அப்படி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஒரு வேலி இல்லாததினால் நான் இப்படி உங்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். வீணாக அவனை அங்கு இங்கு அழைத்துச் சென்று அலைக்கழிக்காதீர்கள், அவன் போக்கிலேயே விட்டு விடுங்கள்' என்று.

அண்ணா ஸ்வாமிகளை அழைத்துக் கொண்டு அவர்கள் திரும்பும் வழியில் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தது. திடீரென்று ஸ்ரீ சேஷாத்திரி பிரும்மம் எதிர்ப்பட்டார். இருவரும் ஒருவரை யொருவர் கண்டனர். நின்றனர். ஓரிரு வார்த்தைகளுக்கிடையே ஒருவரை ஒருவர் வெகு நேரம் நோக்கியவாறிருந்தனர். பின்னர் அவரவர் வழியே சென்றனர்.

இதன் பின்னர் மகான் ஸ்ரீ அண்ணாஸ்வாமிகளை 1930ம் ஆண்டு அளவில் கும்பகோணத்தில் மடத்தெரு ஸ்ரீ சங்கர மடத்தின் திண்ணையில் காணலாமாம். பூஜ்ய ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதிகள் அவர்கள் ஜகத்குரு பீடத்தை அலங்கரித்த காலம் அது. அங்குதான் அவர்களது முகாம் இந்த காலக் கட்டத்தில் நடந்து வந்தது.

பின்னர் ஸ்ரீ அண்ணாஸ்வாமிகள் அங்கிருந்து மகாமகக் குளம் மேல் கரையில் பலப்பலப் பெரியார்கள் அடிக்கடி வந்து போகும் பாக்கியம் பெற்றிருந்த நடேசய்யர் என்பாரின் இல்லத்திற்கு அழைத்து வரப் பெற்றார்.

ஸ்ரீ அண்ணாஸ்வாமிகள் அதுமுதல் 1959 வரை அந்த வீட்டிலேயே தங்கி சமாதியடைந்தார். ஜகத்குருவின் யோசனைக் கிணங்க இவரது உடல் நடேசய்யர் அவர்களால் தகனம் செய்யப்பட்டது. மடத் தெரு வடகோடியில், காவேரிக்கரை பகவத் படித்துரையில் உள்ள காசிவிச்வநாதர் கோயில் வடப்பிராகாரத்தில் துர்கைக்கு எதிரே இம் மகானின் நினைவுச்சின்னம் ஒரு தீப மாடமாக நிறுவப் பட்டுள்ளது.

ஸ்ரீ அண்ணாஸ்வாமி பகவான் அவர்களுடன் திரு சர்மா அவர்கள் தொடர்பு கொண்ட அண்மையிலேயே ஸ்ரீ விடய

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
புரம் மகான் அவர்களின் தொடர்பும் கூடியது. அடிக்கடி சர்மா விடயபுரம் சென்று வரலானார். சில சமயம் ஸ்ரீ அண்ணுஸ்வாமி பகவான் அவர்களையும் விடயபுரம் அழைத்துச் சென்றிருக்கிறார்.

ஸ்ரீ விடயபுரம் மகானும் கும்பகோணம் வந்து ஸ்ரீ அண்ணுஸ்வாமிகளைச் சில தடவை தரிசித்துள்ளார்.

அந்தக் காலக்கட்டங்களில் ஸ்ரீ அண்ணுஸ்வாமிகள் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் அநேகம். அவ்வற்புதங்களில் பிணைப்புண்ட பலர் நாட்டில் பல பாகங்களில் இன்றும் உள்ளனர்.

இவ்விரு பெரியார்களுக்கும் இருந்த தொடர்பின் ஓரிரு விவரங்களை, இச்சரித்திரத்தோடு இணைந்து வரும் பின் சம்பவங்கள் உரிய இடத்தில் வந்து பிணைத்துக் கொள்ளும்.

திரு நாகராஜசர்மா, ஸ்ரீ விடயபுரம் மகான் அவர்களிடம் தனக்கேற்பட்ட ஈடிணையில்லா அனுபவங்கள் காரணமாகவும், பொது ஜனங்கள் அம்மகானைப் பற்றி விரிவாக அறிந்து பயனடைய வேண்டும் என்ற தாக மேலீட்டாலும், அம்மகானைப் பற்றித் தான் அறிந்த, கேட்ட எல்லாத் தகவல்களையும் விரிவாகக் கூறி என்னைக் கொண்டு இச்சரித்தை எழுதவைத்திருக்கிறார்.

நானும், என்னை அவரது எழுது கோலாக ஆக்கிக் கொண்டு இயன்ற வரை குறைபுக இடங்கொடாமல் எழுதியுள்ளேன், வேறு பலச் சிந்தனைச் சிதறல்களையும் சேர்த்து.

இந்நூலின்கண் காணும் தத்துவ விளக்கங்கள் அனுமானத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டவை. பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்டவை என்று கொள்ளக் கூடாது. ஆனால் அனுமானம் என்பது பிரமாணத்தின் முன்னோடியே தவிர அதனின்றும் வேறு பட்டதல்ல என்று சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இதன்கண் வடமொழிச் சொற்கள் நிறைய இடம் பெற்று விட்டதை நான் உணர்கிறேன். ஆனுல் அது தவிர்க்க முடியாத ஒன்ருக எனக்குப்பட்டது. மொழியுணர்வை விட ஆன்மீக உணர்வுக்குத் தான் இதில் முதலிடம் என எண்ணி னேன். மேலும் எனக்குள்ள மொழிவளம் அப்படி ஒன்றும் வலிமையானதல்ல. சொல்ல வந்ததை ஆழமாகவும், தெளி வாகவும் வடிக்க நினைத்தேன். அந்த தாகம் தான் இத் தவறுக்குக் காரணம். மன்னிப்பை வேண்டுகிறேன்.

இதன் கண் உள்ள மகான் அவர்களின் சரித்திரப் பகுதிக்கு முழுப் பொறுப்பு ஸ்ரீ சர்மா அவர்களைத் தான் சாரும்.

நான் ஸ்ரீ விடயபுரம் மகான் அவர்களைத் தரிசித்ததே இல்லை. சர்மா அவர்களின் தொடர்பிருந்தும் இவ்வாய்ப்பு ஏனே எனக்கு நேரவேயில்லை, பலர் அவரைப் பற்றிச் சொல்லக் கேட்டது, அவரது காலத்திற்குப் பிறகு. ஸ்ரீ சர்மாவின் விடாமுயற்சியாலும், ஆழ்ந்த தூண்டுதலாலும், ஸ்ரீ மகான் அவர்களையும், அவரது சரிதத்தையும் என் சக்தித் திறனுக் கேற்றவாறு உருவகப் படுத்தி எழுதி வடித்திருக் கிறேன். கற்றறிந்த, அனுபவமிகுந்த ஆன்ருேர்கள் இந் நூலைப் படிக்கும்போது இதன் கண் விரிவு படுத்தப்பட்டுள்ள தத்துவப் பிதற்றல்களை ஒரு ஆர்வமுள்ள குழந்தையின் மழலை எனும் நோக்குடன் காண்பார்களாக. பரந்த உள்ளம் கொண்ட பெரியோர்களின் ஆசியை விழைந்தவாறு என் பணியைப் பணிவோடு தொடர்கிறேன்.

ஆசிரியன்,
த்ரிசக்தி பாததூளி,
T. V. கல்யாண சுந்தரம்

சென்னை
1—1—1980

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பரிந்துரை

சித்தி விளையாட்டுக்கள் நிகழ்த்துவதற்காக, அரிய நோன்புகள்,பெரும் தியாகங்கள்,யோகங்கள் மூலம் சித்திகள் பெறப்படுவதில்லை. அப்படியொரு நோக்கத்துடன் ஆற்றும் எந்தத் தவமும் சித்தியாவதைப்போல ஒரு தற்காலிக உயர்வைப் பெற்று, அந்த உயர்வின் காரணமாகவே வீழ்ச்சியை அடையும் அவலத்தைத்தான் பலனாக அடையும்—அசுரர்கள் தவம் செய்து வரம் பெற்று அந்த வரத்தின் செறுக்காலேயே அழிந்தது போல்.

சித்திகள் பெறுவதற்காக ஆற்றுவதல்ல, தவம். உயிருடன் வாழும்போதே இறைத்தன்மையை அடைய ஆற்றும் நோன்பே தவம். அத்தவத்தின் சிறப்பே, தானே அவர்களை வந்தடையும் சித்திகள்.

ஸ்ரீ விடயபுரம் மகான் சட்டாம்பிள்ளை சுவாமிகளின் வாழ்க்கையிலே மேற்சொன்ன உண்மைகள் தெளிவாகும் வண்ணம் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவைகளை அழகும் ஆழமும் ஒளிர அபார சிந்தனா சக்தியோடு இந்நூலைச் செல்வன் கல்யாணம் திறம்பட எழுதியுள்ளார்—வால்மீகி தான் பங்கு பெற்றிராத இராம காதையை அமரகாவியமாக வழங்கியதுபோல். இந்நூல் வருங்கால சந்ததிக்கு ஒரு பொக்கிஷம். இன்றைய சமூகத்திற்கு ஒரு அதிர்ஷ்டம். வாழ்க ஈசுவரசங்கல்பங்கள்!

சென்னை :
15—1—80

பராசக்தி பாததூளி
P. நாகராஜ சர்மா

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உ

பொருள்

i

பெரியவர்களின் சரிதத்தைப் பொதுமக்களின் பிரயோஜனத்திற்காக எழுதுவது கத்திமேல் நடப்பது போலாகும். அதில் உண்மைகள் மட்டுமே இடம் பெற முடியும். கற்பனைச் சிறகடித்துக் கண்டபடி எழுதுகோலை இயக்கி, அசத்தியம் புக இடமேற்பட்டு விட்டால் அதை விடப் பேரபசாரம் வேறில்லை.

நமக்குப் பிடித்தமான ஒன்றைப்பற்றி மிகைப்படுத்திக் கூறுவதோ அல்லது பிடிக்காத ஒன்றைக் குறைவுபடுத்திப் பேசுவதோ, நம்மைச் சுற்றி நாம் கேட்கும் அன்றாட அனுபவமாகும். இவ்விதக் குறைக்கு ஆட்பட்ட எந்தச் சரித்திரமும் என்றென்றைக்குமே சர்ச்சைக்குரிய ஒரு பலவீன நிலையை அடைந்து விடும். அப்படியொரு குறைபாடின்றி உண்மையை அதன் முழுப் பரிமாணத்தில் காணும்படி வடிப்பதற்கு, யாரைப்பற்றி எழுதுகிறோமோ, அப்பெரியாரின் பூரண ஆசியும், அன்னாரிடம் நமக்குள்ள தூய்மையான பக்தியுமே துணை செய்யமுடியும். இம்முயற்சி சரிவர நிறைவு பெற அன்னாரின் கருணை உள்ளம் அருள் புரிய வேண்டுமென இறைஞ்சுவோமாக.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நம்மிடையே இயல்பாக நிலவி வரும் சில தவருன சிந்தனைகளை இங்குச் சற்று ஆராய்வோம்.

ii

ஒரு பெரியாரை, 'அவர் ஜீவ சமாதி அடைந்தவர். சமாதியான தினத்திலிருந்து இத்தனை நூற்றுண்டுகளுக்கு நினைத்த நேரத்தில் சமாதியிலிருந்து வெளிப்பட்டுப் பலதையும் ஆற்றிக் கொண்டே இருப்பார். அவருக்கிணையாக வேறு யாரையும் சொல்ல முடியாது,'—இது அவரது அபிமானிகளின் கூற்று.

இன்னெரு பெரியார் அவரது இறுதி நாட்களில் ஏதோவொரு நோய்க்காளாகி இறையெய்தி இருந்தால், 'நாளாவட்டத்தில் அவரது சித்தெல்லாம் குறைந்து போய், தவவலி தேய்ந்து போனதால் தான் அவர் அவ்வித முடிவெய்தினுர், எனச் சிலர் பேசுவதும் பழக்கமாக இருந்து வருகிறது.

அறிவுப் பஞ்சத்தால் அவசர முடிவிலே பிறக்கும் இவ்வகைப் பிதற்றல்களுக்குச் செவிசாய்த்து நம்மை நாம் தாழ்த்திக் கொள்ளக் கூடாது. பெரியோர்களின் வாழ்க்கையை, தரத்தை, தவத்தை, சாதனைகளை மதிப்பீடு செய்து விமர்சிக்க நமக்கு என்ன தகுதி இருக்கிறது எனச் சற்றுச் சிந்தித்தோமானுல், மடமை மயக்கத்தால் நாம் செய்யவிருக்கும் அபசாரத்தையும், அதனுல் நமக்கேற்படவிருக்கும் நஷ்டத்தையும் தவிர்க்கலாம்.

பெரியோர்களை மதிப்பீடு செய்வதென்பது அவர்களையொத்த பெரியோர்களுக்கு மட்டுமே சாத்தியமானவொரு சாதனை. ஆனுல் பெரியோர்களோ, இம்மாதிரி சில்லரைத்தனமான மதிப்பீடு செய்யும் பயனற்ற வேலைகளில் தம் பொன்னுன நேரத்தைப் பாழ் செய்ய மாட்டார்கள்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பெரியோரைப் பெரியோர்கள் நேரிலோ, மனத்தளவிலோ சந்தித்துக் கொள்வது மாபெரும் ஆனந்தமயமான நிகழ்ச்சிகளாகும். இருவரும் தம்தம் சாதனையால் எய்திய இறை நிலையில் சென்று நின்று ஒருவரையொருவர் தூய்மையான மனநிறைவோடு போற்றி மெய்மறந்து ஆனந்தப் பெருக்கடைவர்.

அன்றி, 'இவர் அவரைக் கண்டார், அவர் இவரை முதலில் வணங்கினார், இவர் அவரை ஏதோ கேட்டார் அதற்கவர் திணறிப் போனார்' எனப் பேசுவதெல்லாம் பேரபசாரம், பொய் வதந்தி. மாறாக அப்படி ஒரு சம்பவம் நடந்தது உண்மையானால் அவ்வாறு சந்தித்துக் கொண்டோர் பெரியோர்களே அல்லர்; நம்மைப் போன்றே இருட்டில் அலையும், ஆனால் அறிந்தே பெரியோரெனப் பட்டை கட்டிக் கொண்டு திரியும். வேடதாரிகள்—வியாபாரிகள்.

எதையும் குறை கூறாத, எதைக்கண்டும் வியப்புறாத யாவற்றையும் விருப்பு வெறுப்பு இன்றி வரவேற்கும் சமநிலை எய்தியோரே பெரியோர்களாவர்.

ரமணர், ராமகிருஷ்ண பரமஹம்சர், போன்ற சில பெரியோர்கள் தமது இறுதிக்காலத்தில் ஏதோவொரு நோய்க்காளாகித்தான் இறையெய்தினர். அதனால் அவரது நிலைகளை விமர்சிக்க நமக்கு உரிமை வந்து விடுமா? ஸித்திகள் கைவரப்பெற்ற பெரியோர்களுக்கு, கருணைகாரணமாக யாருடைய நோயையும் தாம் வாங்கி அனுபவித்துத் தீர்த்து உதவ முடியும். ஒரு சமயம் அவ்வாறான ஒரு அரிய செயலை அவர்கள் செய்தனரோ என்னவோ? யார் அறிய முடியும்.

எடுப்பு, இருப்பு, முடிப்பு எனும் முடிச்சுக்கள், தேவ ரகசியம், மாயையின் லீலை. அதை விளக்க யாருக்கும் திறன் வராது. அதை விமர்சிக்க யாருக்கும் உரிமையும் கிடையாது.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஒரு நல்லதைக் கேட்கும் நமக்கு இசைவாக இருந்தால் போற்றிப் பயனடையலாம். அன்றி இசைவில்லையெனில் குறை சொல்லி விமர்சிக்க முற்படாமல் விலகிக் கொண்டாவது நஷ்டப்படாமல் தப்பலாம். இதைக் கடைப்பிடிப்பதில் சிரமமில்லை. நஷ்டத்திலிருந்து தப்பும் ஆதாயம் நிச்சயமாக உண்டு.

iii

துரதிர்ஷட வசமாக, நாம் வாழ்வது விளம்பர யுகத்தில் அமைந்து விட்டது. ஒரு பொருளின் மதிப்பை அனுபவத்தால் அறிந்தோ, அனுபவித்தவர் கூறக்கேட்டோ, அணுகுவது என்ற பாரம்பர்ய நிலை அடியோடு மாறிப்போய், பொருளுக்குச் சொந்தமானவர்கள் ஆரோக்கியமற்ற கொள்ளைலாப வியாபார நோக்கோடு, போட்டி மனப்பான்மை தலைவிரித்தாட, எதையும் சந்திரன், இந்திரன் என்றோ, சுவர்க்கம் என்றோ, அமுதம் என்றோ பகட்டாக விளம்பரப்படுத்தி நம்மை ஏமாளிகளாக்கும் தாக்குதல்தான் தற்கால நியதியாகி இருக்கிறது.

iv

மேலும் இப்போதெல்லாம் "பத்திரிகை தர்மம்" என்ற புனிதச் சொல் அளவுக்கு மீறி உபயோகப் படுத்தப் பட்டு நம்மை எதையும் நம்பவைக்கும் முயற்சி தீவிரமாகி இருக்கிறது.

உண்மையில் "பத்திரிகைதர்மம்" என்ற இப்புனிதச் சொல்லின் 'சத்திய நோக்கம்' இன்றைய நடப்புக்களில் ஐயத்திற்கிடமின்றிச் சிதைந்து, நலிந்து தான் காண்கிறது. ஒரு பத்திரிக்கையின் சொந்தக் கருத்து, 'தலையங்கம்' என்ற

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வட்டத்தினுள்ளேதான் இருக்கலாம். செய்திப் பகுதியில் நுழையவே கூடாது. ஆனால் நாம் காண்பதோ, உண்மை பல்வேறு நிறங்களில், பல்வேறு அளவில், மிகைப் படுத்தப் பட்டோ, சிதைக்கப்பட்டோ அல்லது திரித்துக் கூறப் பட்டோ, தன்சுய உருவை இழந்து, பலப்பல உருவத்தோடு ஒரே உண்மை அநேகம் பத்திரிக்கைகள் வாயிலாக வெளி வந்து, நம்மை வெவ்வேறாகப் பிரித்து, அதனின்று சில கோஷ்டிகளாக ஆக்கி, எந்நேரமும் நாம் சந்தேகமும், பயமும், துவேஷமும் கொண்டு வாழ்பவர்களாகி ஒரு ஸ்திரமற்ற தன்மையில் இயங்கும் தாழ்மையை இன்று அடைந்துள்ளோம். என்ன அவலம்! செய்திகளைத் திரித்துக் கூறித் தாம் சார்ந்திருக்கும் கொள்கைக்கு ஆதரவு திரட்டும் இழிநிலை மாறினால்தான் நமது பழைய மாண்புக்கு மீட்சி. இல்லையேல் எஞ்சி நிற்கும் யாவற்றுக்குமே வீழ்ச்சிதான்.

குற்றுயிராகிக் கிடக்கும் நமது பாரம்பரிய மரபுகள் புத்துயிர் பெற்றுப் பேரொளி வீச வேண்டுமானால், எழுத்துச் சிற்பிகள், சிந்தனைச் செல்வர்கள், சமூகஅமைப்பின் தர்மகர்த் தாக்கள், அறம் வளர்க்கும் ஆன்மிகப் பெரியோர், தர்மத் தைப் பேணிக்காக்கும் தூயோர், முடிவாக வருங்கால சந்ததிகளின் பெற்றோர், யாவரும் ஒருங்கிணைந்து கண்டிப் புடனும், கண்காணிப்புடனும் களையெடுத்து முடித்து, ஒரு புதிய வழியை வகுத்துக் கடைப்பிடித்தால்தான், இப்போது புரையோடிப்போய் ஆக்கிரமித்துள்ள நச்சு நீங்கி, உண்மை தழைக்கும் நிலை உருவாகும்.

V

வாழ்க்கைக்கு ஆரோக்கியமான வாழ்வுமுறை இன்றிய மையாத அஸ்திவாரம். இதைச் செம்மைப்படுத்தும் வேலை முதல் பணியாகும். இந்தப் பணி ஒழுங்காக முடிந்து விட்டாலே பாதிநோய் தீர்ந்து விடும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பிறர் பொருளை அபகரித்தல், அயலான் மனைவிழைதல், புறங்கூறல், பொய் சொல்லல், வம்பு பேசுதல், இச்சகம் பேசி வஞ்சகம் செய்தல், பகை வளர்த்தல், வீண் சண்டையிட்டு வன்முறையைக் கையாளல், வெட்டியாய்த் திரிதல் போன்ற புல்லுருவிக் குணங்கள் எந்த மூலையிலும் முளைவிடாமல் பாதுகாத்து எச்சரிக்கையோடு நடப்பதை வாழ்க்கையின் பழக்கமாகக் கைக் கொள்ள வேண்டும்.

கொள்கையளவில் வேறுபாடுகள் இருந்தாலும், சிந்தனையளவில் ஒருமைப் பாட்டுடன் இயங்கும் தனிமனிதர்களைக் கொண்ட சமூதாயமாக நாம் மாறவேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனும் தனது தனித்தன்மையான நேர்மையால் தழைத்தோங்கித் தன்னை இனம் காட்ட வேண்டும்—ஒரு கொள்கையின் உறுப்பினனாக அல்ல.

கொள்கை காலப்போக்கில் மடிந்தாலும், ஒருவனது தனித்தன்மை சிரஞ்சீவித்வம் பெற்று நின்று அவனது சந்ததிக்கு வழிகாட்டியாக ஒளி வீச வேண்டும்.

எந்த முறைக் கேட்டினை எங்கு கண்டாலும், தனிமனிதர்கள் ஒருமனிதராகி, ஒரு மனத்தினராய் அதை எதிர்த்து வீழ்த்த வேண்டும். இப்படி ஒன்று சேரும் சம்பவங்களே நமக்குள் ஓர் புதிய இன்ப உணர்வை ஊட்டி, நாம் இமயமென உரம் பெறும் ஆற்றலை வளர்க்கும்.

தவறிழைக்காத யாரும் தன்னிச்சையாய் யாரையும் சிபாரிசோ அறிமுகமோ இன்றி, அணுகி இணைந்து செயல் படும் வாய்ப்புக்கள் மலிய வேண்டும். தவறு செய்ய நினைக்கவே கூசும் இயல்பு தோன்றி, வளர்ந்து, தவறான வழியே தோன்றாத நிலை மலர வேண்டும்.

மாயையால் சூழப்பட்டு, மயக்கத்தால் கட்டுண்ட நிலையில், நமது தேவைகளில் புதுப்புது மாயநிலையினைத்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தோற்றுவிக்கப் பாடுபடும் சுவை நம்மிடம் இருக்கவே கூடாது. அச்சுவை நமக்கு மாபெரும் எதிரி. நமது தேவைகளைக் குறுக்குவதன் மூலம்தான் அந்த எதிரியை வெற்றி கொள்ள முடியும்—தேவைகளை மேலும், மேலும் வளர்த்துக் கொள்வதால் அல்ல.

சமூக விரோத சக்திகள், அதற்குத் துணை போகும் லாகிரி வஸ்துக்கள், அதன் போலிக்குதூகல நிலையினை அனுபவிக்கத் துணை நிற்கும் கேளிக்கைப் படைப்புக்கள் இவைகளை ஒன்றன்பின் ஒன்ருய் ஒடுக்கி, முறியடித்து, மூளையோடு கிள்ளியெறிய வேண்டும்.

" கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக"

எனும் ராமலிங்க அடிகளாரின் வாக்குப் பலிக்கும்படி செய்ய வேண்டும்.

அந்த நாளில் பாலுணர்ச்சிப் பசியடக்க நினைத்தவன், தன்னை முக்காடிட்டு மறைத்துத் தன் குற்றச் செயலுக்கு வெட்கினுன்.

மது மயக்கத்திற்காளானவன் தலைகுனிந்து தன்னை ஒளித்துத் தன் தவறைத் தாழ்மையாய் எண்ணினுன்.

ஆனுல் இந்த நாளிலோ அத்தவறுகளை வீறுடன் செய்து தம்மை வெளிப்படுத்திக் கொள்வதே ஆண்மை என எண்ணுகின்றனர். என்ன பேடித்தனம்!

இப்பலவீனங்களை அறவேயொழித்து நம் சந்ததியினை இந்நச்சரவம் தீண்ட முடியாத அமைப்பை நிர்மாணிக்க வேண்டும். இதைச் செய்து முடித்தால் ஒரு மாபெரும் யக்ஞம் நடத்தியவர்களாவோம்.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பெண்கள் என்ற எண்ணம் வரும்போது நம்முள் புனித உணர்வு மட்டுமே தோன்ற வேண்டும். அப்போது தான்,நமது தாய்,தாரம்,தமக்கை, தங்கை, தங்கச் செல்விகள் யாரும் தயக்கமின்றித் துணிவுடனே தளிர்நடை போட முடியும். அப்போதுதான் அவர்கள் நம்வாழ்வு தழைக்கவும் தூய்மையாகவும், துணைநிற்க முடியும்.

பரோபகாரம் என்ற நமது பெருமை மிகுந்த பாரம்பர்யம் இன்று மிகவும் நலிந்து மூச்சு விடக்கூடச் சக்தியற்றுக் கிடக்கிறது. அதற்குப் புத்துயிரூட்டி, வலுவு சேர்த்து, நம்மை வழி வழியாகக் காக்கும் சக்தியினை மீண்டும் நல்க வேண்டும்.

எந்த உயிருக்கு நேரும் இன்னலும் நம்மை உடனே ஒரு கடமை வீரனுக்கி, அத்துன்பத்தின் பரிமாணத்திற் கேற்ப, ஒருவரோ அல்லது பலரோ இணைந்து பரிகாரம் காணும் பரந்த உள்ளம் மீண்டும் நமது பாரம்பர்யமாக நிலைக்க வேண்டும்.

iv

யாரும் தன்னை ஒரு பணக்காரன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது, பலசாலி என்று நினைத்துக் கொள்ளக் கூடாது, அறிவாளி என்று நினைத்துக் கொள்ளக் கூடாது, வசதிகள், தகுதிகள், வளங்கள், எதுவாயிருந்தாலும் சரி. நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவையே தவிர, நாமாக எதையும் தோற்றுவிக்கவில்லை, அடைந்து விடவில்லை, ஐச்வர்யங்கள். (இயற்கை வளங்கள்)யாவும் என்றோ தோற்றுவிக்கப்பட்டுவிட்டன, பிரபஞ்சம் தோன்றும்போதே.

ஜீவராசிகள் உயிர்வாழ்வதற்காக, வாழ்க்கைக்குத் தேவையானவைகளை உரிய காலங்களில் அடைவதற்காக,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அடைவதைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தோன்றிய ஐச்வர்யங்கள், பொருட் செல்வமென்றும், அருட் செல்வமென்றும். உண்மையில் நாம் தர்மகர்த்தாவாக இருந்து பரிபாலனம் செய்யவே இவை நம்மை அடைவிக்கப் படுகின்றன. அன்றி, நமது சொத்து, நினைத்தவாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையே அல்ல ஐச்வர்யங்கள்.

பொருளாற்றல், வலிவாற்றல், அறிவாற்றல் யாவுமே நம்மை வந்தடையும் ஐச்வர்யங்கள்தாம்; நடைமுறையில் நம் ஆற்றலால் வளர்க்கப்பட்டு, பெருக்கப்பட்டு அடையப் படுகிறது என்று தோன்றும் மாயய், நம்மால் ஆழ்ந்து சிந்திக்கப் பெற்று, உண்மையிலேயே இவையாவும் தர்மகர்த்தா நிலையில் பரிபாலனம் செய்வதற்காக ஈசுவர சங்கல்ப்பத்தின் படி நம்மை வந்தடைந்திருக்கும் தெய்வப் பிரசாதம் என்ற அதன் உண்மைக் கோணம் தெளிவாக வேண்டும், நமது உணர்வாக வேண்டும். தேவைக் கேற்ப ஐச்வர்யங்கள் ஒழுங்காகப் பங்கீடு ஆவதற்கே அறிவுச் செல்வமும் ஆற்றல் செல்வமும் தோற்றுவிக்கப்பட்டது.

ஐச்வர்யங்கள் எடுக்க எடுக்கத் திரும்ப நிரப்பப் பெறுவதற்காகவே அறிவும் பலமும் பயன்பட வேண்டும்; பிறரை அடிப்பதற்காக அல்ல; அடித்துப்பிடுங்கித் தனக்கெனச் சேர்த்து வைப்பதற்காக அல்ல. அன்றி இவ்வுண்மைகளைப் புறக்கணித்து அகந்தையால், இவை நான் ஈட்டியவை, எனக்கே சொந்தம், யாருக்கும் இதில் உரிமையில்லை எனச் சாடுகிறவன் உண்மையில் ஒரு கொள்ளைக்காரனே.

மாயநிலையின் மயக்கத்திலே தோற்றுவிக்கப்பட்ட அபரிமித விலைப்பட்டியலிடப்படாத, உண்மையான, உருப் படியான, பயனுள்ள, உழைப்பால் ஒருவன் எவ்வளவு சம்பாதிக்க முடியும்?

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அப்படிச் சம்பாதித்தத்தில் அவன் தர்மகர்த்தா நிலையில் வரவிற்கேற்ற அளவில் ஒழுங்கானப் பங்கீட்டு முறையிலே தன் குடும்பத்தைப் பேணிக்காக்கும் வினைக்குஉபயோகித்தது போக எவ்வளவு மீதம் பிடிக்க முடியும்?

அப்படி மீதமாவதிலும் இவன் தன்னுடையது எனத் தனி உரிமை கொண்டாடக்கூடிய அளவு, முன்சொன்ன ஒழுங்கானப் பங்கீட்டு முறைப்படி மிகமிக அற்ப அளவு தானே எஞ்சி நிற்கும்?

அச்சிறிய அளவினைக் கவனமாகச் சேமித்து வைத்துத் தனது நெருக்கடிக்கால அவசர நிலைக்குத்தானே அதைப் பாதுகாப்பாக எண்ண முடியும்?

இவ்வாறான, மனிதனின் உண்மைப் பாரம்பர்யச் சீரிய சிந்தனைகளுக்கும், இயல்பான நெறிகளுக்கும் நமது இன்றைய இறக்குமதி செய்யப் பெற்றக் கலாசாரங்களின் கலப்படத்தால் ஈன்றெடுத்துச் சீராடப்பெறும் வாழ்வுமுறை இடங் கொடுக்குமா? நிச்சயம் கொடுக்காது.

காரணம்—ஐச்வர்யம் எனும் மதிப்பிலா நிதியை, பணம் எனும் ஆபத்தான அடையாளச் சீட்டை அளவு கோலாக நிறுவி, அடியோடு மதிப்பிழக்கச் செய்து விட்டோம்.

எந்த ஐச்வர்யத்தையும் பணம் விலை பேசும் அவல நிலை!

எந்த உறவையும் பணத்தால் வாங்கிவிடக்கூடிய இழிநிலை!!

பணம் குவிந்திருக்குமிடத்திற்கு, அப்பணம் எவ்வாறு அங்கு குவிய நேர்ந்தது எனும் சிந்தனைக்கிடமில்லாமலேயே தனி மரியாதை, பயம் என்கிற போலி நிலை!!!

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

குணம் எவ்வளவு உன்னதமானதாக இருந்தாலும் பணத்துடன் பிணைந்ததாக இல்லாவிடில் வரவேற்பே கிடைக்காத கடைநிலை!!!!

இவ்வாருகக் கட்டுக்கு மீறிய வேக நிலையில் காட்டாற்று வெள்ளமென, நமது எல்லாப் பாரம்பர்யங்களையும், பண்புகளையும், மதிப்புள்ள வாழ்க்கை முறைகளையும், பணம் என்ற இந்தப் புதிய அளவுகோல், வீழ்த்தி அடித்துக் கொண்டு போய், நம்மால் மீட்கமுடியாத பள்ளத்தில் தள்ளி விட்டது,

இனி எப்படி இந்த ஆபத்தான அளவு கோலை மாற்றியமைப்பது? முடியாது, முடியவே முடியாது. ஆனால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நிச்சயமான ஒரே வழி உண்டு. அது நம்மை நாமே திருத்திக் கொள்வதுதான்.

பணத்தின் மதிப்பை. நமது ஆன்மீக பலத்தால், பண்பான பழக்க வழக்கங்களால், நெறியான நடப்பால், வலுவிழக்கச் செய்ய வேண்டும். பணம் என்பது ஒரு மாபெரும் அசுரபலம் வாய்ந்த தத்துவமாக இல்லாமல், எந்த நேரத்திலும் பரிசீலனைக்கு உரிய வெறும் அடையாளச் சீட்டு நிலைக்குக் குறைக்கப்பட வேண்டும். நியாயமானத்தகுதிகள் மூலமே அளவான முறையில் இவ்வடையாளச் சீட்டைப் பெறும் கட்டுப்பாடு அமலாக வேண்டும். நாநயத்திற்குத் தான் மதிப்பு, நாணயத்திற்கல்ல எனும் விதி தோன்ற வேண்டும். அதற்கு நம்மில் சத்தியத்திற்காகப் போராடி அதனை முடிசூட்டி வைக்கப் பாடுபடும் நோக்கம், தியாகதாகமாக, தீராமோகமாக வளரவேண்டும். அப்போதுதான், நாம் நிறுவிய பணமே நம்மை வீழ்த்தி நாசமாக்கும் கொடுமையினின்று விடுதலை பெற ஆரம்பிப்போம்.

பின்தான் யாவரும் ஓர்குலம், யாவரும் ஓர் இனம், ஒருவனே தேவன், எனும் தத்துவம் புத்துயிர் பெற்றுத் தலை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நிமிரும். தனி ஒருவன் உணவின்றித் தவிக்கும் தலைகுனிவு மறையும்.

ஐச்வர்யம் பணத்தால் தாழ்த்தப்பட்டு மாற்றுக் குறைந்திருக்கும் நிலையிலிருந்து மீள நாம் திருந்துவது ஒன்றுதான் வழி.

யாராயிருப்பினும் எந்நிலையிலுள்ளோராயினும் அவரவர் பெறும் வாழ்க்கைத் தரம், தர்மகர்த்தா என்ற நிலையில் அவர்கள் பெறும் ஊதியமேயன்றி, அவர்களை வந்தடையும் எந்த ஐச்வர்யத்திற்கும் எஜமானர்களாக முடியாது. எஜமானன் ஈசுவரன் ஒருவனே. எஞ்சிய யாவரும் அவனை அண்டியிருக்கும் நொண்டிகளே. இந்நொண்டிகள் சண்டிகளாகி விடுவதன் விளைவுதான் இந்த இழி நிலை.

இவ்வுண்மையை வலியுறுத்திச் சொல்வதால் மனிதனது தன்னம்பிக்கை இழந்து போகும் எனவாதிப்போர் சத்தியத்திற்கும் சமூகத்திற்கும் எதிரிகளே. அவர்கள், ஏற்கனவே பலவீனப்பட்டிருக்கும் நமது இழிநிலையினைப் பெரிதும் விரும்பிப் பயனடைய அலையும் குள்ள நரிகள், இதமானவர்களே அல்லர்.

அன்றி நாம் இப்பிரத்தியட்ச உண்மைகளைப் புரிந்து கொண்டு, புரையோடிப் போயிருக்கும் நமது நலிவு நோயை அறவே அகற்றிக் கொள்வதால் நாம் பெறும் உரம் வைரமென நம்மை உறுதியாக்கும். தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் தாழ்மை மறைந்து நம்மை நாமே உயர்த்திக் கொள்ளும் நலன் பெருகும்.

ஞான வள்ளல் "அருட்பெருஞ்ஜோதியாம் தனிப்பெருங் கருணையுரு" ராமலிங்க சுவாமிகள் தனது சன்மார்க்க விண்ணப்பத்தின் கண் வேண்டுவார்;

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

" உள்ளலேன், உடையாருண்ணவும், வறியார்
உறுபசியுழந்து வெந்துயரால், வள்ளலே
நெஞ்சம் வருந்தவும் படுமோ மற்றிதை
நினைந்திடுந் தோறும், எள்ளலே னுள்ள
மெரிகின்ற துடம்புமெரிகின்ற தென்செய்வே
னந்தோ கொள்ளலேனுணவும் தரிக்கிலேன்
இந்தக் குறையெலாம் தவிர்த்தருளு மெந்தாய்'' என்று.

உளம் குமுறிய பாரதியார்,

"தனி ஒரு வருக்குணவில்லை யெனில்
ஜகத்தினையழித்திடுவோம்''

எனப்பாடி நமது தர்மகர்த்தா வாழ்க்கை முறை நலிந்து போனதைச் சாடியிருக்கிறார்.

தவப் பெரியோர்களிடம் வந்தடையும் ஸித்திகளைக் கூட அவர்கள் தர்மகர்த்தா முறையில்தான் கையாண்டிருக்கிறார்கள். தனியொருவராக, யாருடைய கூட்டுழைப்புமின்றி, பசி, தாகம் இவற்றைப் பொருட்படுத்தாமல், தன்னையே வருத்தி நோன்பிருந்து தமது இளமையையும் கரைத்துத் தனது அயரா உழைப்பால் மட்டுமே அடைந்த அவ்வரிய ஸித்திகளை அவர்கள் தனது சொத்தாகவோ அல்லது அவைகட்குத் தன்னை எஜமானனுகவோ பாவிக்கவேயில்லை. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அவைகளை தர்மகர்த்தாவாக பாலனம் செய்வதுதான் நெறி என்று நடந்து காட்டினர்.

யாருக்கு உண்மையாகக் குறை தீரவேண்டுமோ, சத்தியத்தின் அடிப்படையில் தகுதி உண்டோ, அவர்களுக்கு மட்டுமே ஸித்திகளை மிகச் சுருங்கிய அளவில் பயன்படுத்துவார்களே தவிர, கண்டபடி தமது ஸித்திகளைக் கையாண்டு அவற்றின் பெருமையும் தரமும் தேய்ந்து போக இடந்தர மாட்டார்கள். எவ்வளவு பெரிய பணமுட்டையாளுலும், அவனுக்கு வந்துற்ற தீராத கர்மரோகயை அவனது குணச்

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

செல்வத்தின் தரத்தை மட்டுமே மனதில் கொண்டு அந் நோயைத் தீர்த்தோ, குறைத்தோ உதவுவார்கள். அவனது வங்கிக் கணக்கிலுள்ள வீக்கம் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

ஸ்ரீ விடயபுரம் மகான், யாராவது நெருங்கிய ஒருவர் அவரிடம் மிகவும் வேண்டி, இவருக்கு அதைச் செய்யுங்கள், அவருக்கு இதைச் செய்யுங்கள் என்று மன்றாடும்போது சொல்வாராம்—

'இது தர்ம சொத்துங்க, கண்டா கண்டபடி செலவிடப் படாது. ஆயி பார்த்து செய்யச் சொன்னால்தான் தலையிட லாம். நாமா ஆடக் கூடாது. தர்மகர்த்தா நிலைதான் நம்முது. ஆயி கணக்குக் கேட்டா ஒழுங்கான சமாதானத் தோட விவரம் சொல்லணும். எதுவும் நம்முது இல்லீங்க, இதெல்லாம் இப்போதைக்கி நம்மகிட்டே விட்டு வைச் சிருக்கற சொத்து. கணக்கு கரெக்டா இருக்கணும்,' என்று.

vii

ஆகவே, எங்கும், ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஸத்ஸங்கம், பயனும் நெறியும் பிணைந்த பொழுது போக்கு, பொது முன்னேற்றத்தில் பங்கேற்பு, வாழும் ஒவ்வொரு கணமும் சத்தியத்திலே பிடிப்பு, தேவைக் கதிகமாக உள்ள வற்றைக் கொண்டு வலியச் சென்று துயர் துடைத்தல் போன்ற மாண்புகள் நம்மிடையே மலிய வேண்டும்.

இம்மாதிரியான சீரிய நிலைகள் நம்மில் தோன்றி நிலை பெற வேண்டும் என்பதற்காகவே பெரிய பெரிய மகான்கள் நம்மிடையே அவ்வப்போது அவதரித்து நம் போக்கை, நம் சிந்தனையைச் சீர்செய்யப் பாடுபட்டு வந்திருக்கிறார்கள்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நியதி அவ்வப்போது அவர்களை நமக்களித்திராவிட்டால் நம்மை நாம் எப்போதோ அழித்துக்கொண்டு இருந்த சுவடே தெரியாமல் மறைந்து விட்டிருப்போம். அவ்வாறான ஒரு முழு வீழ்ச்சி நமக்கு நேராமல் இன்றும் நாம் தொடர்ந்து வாழ்வது, அவர்களது அரும்பெருங் கருணையான நோன்புக்கு எடுத்துக் காட்டு. மீட்சி உண்டு என்ற நம்பிக்கைக்குச் சான்று.

நாம் ஒவ்வொருவரும், யாரேனும் ஒரு பெரியாரின் அடிச்சுவட்டைத் துணையாகக் கொண்டு ஒருங்கிணைந்த ஒரு பேரியக்கமாக மாறி, ஆன்மீக உரமேறி, நமது மரபுகளுக்கும் மாண்புகளுக்கும் புத்துயிரூட்டிப் பெருமை சேர்ப்போமாக.

எந்த ஒரு வேலையையும் செவ்வனே செய்து முடிக்க, அதற்கான தெய்வ சங்கற்பம், நெறியோடு கூடிய ஆற்றல், குறுக்கீடுகளற்ற ஓய்வு, தேவைகளின் ஆதிக்கமில்லாத எளிய வாழ்வு, இவை இயல்பான சூழலாக அமைந்திருக்க வேண்டும். உலகவியல் அலுவல்களுக்கே இவை பொது விதியென்றால், அரும்பெரும் சாதனையான, பரமர மக்களைக் கடைத்தேற்றும் புனிதப் பணியினை ஆற்றுவதற்கான விதிமுறைகள் எத்துணை கடுமையாகவும் கடினமாகவும் இருக்கும் என்பதை எளிதாக சொல்லி விடமுடியாது.

தேவைகள் வலுவிழந்து போக வேண்டும். பசி, தாகம், தூக்கம் இவற்றின் முனைப்புக்கள் மழுங்கி விடவேண்டும். எப்போதும் மனத்தைச் சந்தோஷ நிலையிலேயே நிறுத்தி ஜகன் மாதாவின் மந்தஹாஸத் தோற்றத்தைத் தியானித்தவாறே விவகாரங்களில் ஈடுபடவேண்டும்.

எதிலும் உடனுக்குடன் ஒரு முடிவான முடிவு பளீரெனத் தோன்றிவிட்டால், ஈசுவர இச்சை சற்றுத் தள்ளியிருக்கிறது எனத் தெளிந்து ஒத்திப்போட வேண்டும்.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பளீரென்று தோன்றுவதை உடனுக்குடன் ஆற்றி முடிக்க வேண்டும்.

எப்போதும் எதைச் செய்வோமெனப் பரபரக்காமல் அமைதியாகச் சித்சக்தியின் உந்தலுக்குக் காத்திருக்கப் பழக வேண்டும்.

யார் எதைக் கேட்டாலும், எதைப் பேசினாலும், அதிலே நிலவும் தெய்வாதிக்கத்தை மட்டுமே இனம்காண வேண்டும்.

எதையும் கண்டோ, கேட்டோ, வியப்போ, ஆயாசமோ கொள்ளவே கூடாது.

அவசரம், கோபம், மெத்தனம் இவை என்றோ ஒழிந்து போன கனவுகளாகி விட்டிருக்க வேண்டும்.

அப்போது தான் நாம் காணும், கேட்கும், அனுபவிக்கும் ஒவ்வொன்றிலும் உறைந்திருக்கும் ஈசுவர சங்கல்பம் (Divine will-இறை விருப்பம்) தரிசனமாகும்.

அம்மாதிரியான தரிசன ஆற்றல் இதைப்படிக்கும் யாவருக்கும் சாத்தியமாகி, சாந்தியே நிலவும் சுதந்திரச்சுப வாழ்க்கை அமையவேண்டும் எனும் பிரார்த்தனையுடன் ஸ்ரீ விடயபுரம் மகான் அவர்களின் சரிதத்தைத் தொடங்குகிறேன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உ

அருள்

ஓம் குரு ஸ்வரூபிண்யை நம:

திரு அருள்

பரமாணு : என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் வருகின்ற ஜகன்மாதாவுடையத் திருப் பெயரின் முழு அர்த்தத்தை நமக்குத் தெளிவாக உணர்த்தி நம்மைக் கடைத்தேற்றவே, அவ்வப்பொழுது நமது புண்ணிய பூமியில் அநேகம் மகான்கள் தோன்றி, நம் சிந்தனையின் உதவியால் முடிவு செய்ய முடியாதப் பற்பல அற்புதங்களை நிகழ்த்தி, தெய்வச் சித்தத்தின் முடிவான முடிவினை நாம் சிரமேல் தாங்கி, நம் வாழ்க்கையினது நடப்பின் ஒவ்வொரு அசைவிலும் தெய்வாதிக்கம் மட்டுமே உண்மையானது—அல்லாது வேறு விதமாக நமக்குத் தோற்றும் "மருட்சி நோக்கு," நம்மை மீட்சி பெறவியலாத மாயைச் சுழலில் சிக்க வைக்கும் என்று நம்மை இடைவிடாமல் எச்சரித்துக் காப்பதே தமது நோன்பென நடத்தி வந்திருக்கிறார்கள்.

இவ்வாறாக நமது பாரம்பர்யத்தின் பெரும்பேறாகத் திகழ்ந்த மஹான்களில், நாமும் நம்மைவிட அனுபவம் வாய்ந்தோரும் அறிந்துள்ளவை அல்லது கேள்வியுற்றவை,

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மிகமிகச் சிலப் பெரியோர்களைப் பற்றித்தான். ஆனால் நம் வரைக்கும் விவரங்கள் எட்டாமல் நம்மிடையேவே வாழ்ந்து, உலகுக்குத் தங்களை அதிகம் காட்டிக் கொள்ளாமல், நமக்குத் தேவையானதை ஆற்றியபடி வாழ்ந்த ஞானிகளின் தொகை மிகப் பெரிது.

அவ்வாறு தன்னை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளாமலே, அதிசயிக்கத்தக்க ஸித்திகளும் அபார சக்தியும் கொண்டு நம்மைப் புனிதப் படுத்த, இந்த நூற்றாண்டின் முற்பாதிவரை பாடுபட்ட ஒரு மஹா பெரியார், சட்டாம் பிள்ளை ஸ்வாமிகள் எனும் ஸ்ரீ விடயபுரம் மகான் அவர்கள் ஆவார்.

திரு உருவம்

ஆறடிக்கும் மேலான ஆகிருதி.

திரண்ட தோள்கள்.

வாளிப்பான உடல்.

அகந்தையின் சாயலே அற்று ஆழ்ந்து நோக்கும் கனிந்த பார்வை.

தன்னிலும் உயர்ந்தது ஒன்றுதான், தன்னை, நம்மை, இந்த அண்டத்தையே நடத்திச் செல்கிறது எனும் பேருண்மையை இடையறாது தியானிக்கவே உதவுவது போல் அவரைவிடச் சற்று உயரமான, பூண்போட்ட கைத்தடி.

எளிமையே வாழ்வில் முக்கிய நோன்பென நினைத்து நடப்பதைக் காட்டும், முழங்காலுக்குச் சற்று கீழ்வரை இடுப்பிலிருந்து இலங்குகி[illegible]ன துண்டு.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எந்நிலையிலும் நாணல் என வணக்கமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துவதேபோல் சற்றே குனிந்த தோற்றம்.

எந்நேரத்திலும் யாருக்கும் உதவத் தயாராயிருக்கிறேன் என அபயம் தரும் முறுக்கேறிய உடற்கட்டு.

வணங்கி முடிப்பதற்கு முன் பதில் வணக்கம் செய்யும் பெருந்தன்மை.

பேச்சில் நயம், பேசும் பொருளில் நயம் நிலவுவதுதான் பண்பாடு என அறை கூவும், வாதமில்லாத, சத்தியமே தொனிக்கும் இனிய சொற்கள்.

சோம்பற்கிடங்கொடேல் எனப் பறை சாற்றுவதே போல், எப்போதும் சுறுசுறுப்பாய் இயங்கியவாறு வளைய வரும் கருணை உருவம்.

தாயைத் தேடிவரும் கன்றுகளென வரும் மக்கள் கூட்டத்தை மலர்ந்த புன்னகையோடு வரவேற்று வினை போக்கி அருளும் அருமருந்தான வள்ளல்.

ஒரு முறை கண்டவர் உள்ளத்திலே உட்பாய்ந்து உறைந்து உறுதுணையாகிவிடும் கருணைமூர்த்தி.

இவ்வினியாரைக் காணக் கிடைத்த கண்கள் செய்த பாக்கியம்தான் என்னவோ!

திரு நோக்கு

உலகத்தில் மக்கள் படும் துன்பங்களிலே மிகக் கொடிது நோய்த்துன்பமே. நோயினால் அவதியுறுவோரைக் காணும் போது அவர் நம் பகைவராயினும், நம்மைமீறிக் கழிவிரக்கம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தோன்றுவது அத்துன்பம் மிகக் கொடிது என்பதால்தான். எந்நோய்க்கும் மருந்தாக வாழ்ந்த இப்பெரியாரை அண்டித் தமது கடும் நோயிலிருந்தும், தீராத கன்ம நோயிலிருந்தும் விடுதலை அடைந்தோர் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

இன்னும், உடலாலன்றி உள்ளத்தால் பிணியுற்றோர்க்கும் அவரவர் கவலைகளை, பயத்தை, குறையைப் போக்கவும் அவரது பரிவு பெரிதும் கைகொடுத்திருக்கிறது. சிக்கல் நிறைந்த பிரச்சினைகள் பலவும் சிடுக்கறுந்து சிதறி ஓடியிருக்கின்றன.

மேலும், உடலையும் உள்ளத்தையும் ஒருசேர வாட்டும் நோயான மனப்பிராந்தி, செய்வினை, .ஏவல், பில்லி சூன்யங்களின் பாதிப்புப் போன்ற பயங்கர நிலையடைந்தோர் பலருக்கும் அவரது ஆற்றல் உற்ற நண்பனாய் நின்று உன்னத நிலையினை மீட்டுத் தந்திருக்கிறது.

தவிர, அறிவுப்பசி மேலிட்டு ஆன்ம தாகத்தோடு அண்டிய பல ஆன்றோர்க்குச் சான்றுகளோடு சத்தியத்தை விளக்கித் தெளிவு பெற்றுத் தேறத் தன்னடக்கத்தோடு துணைசெய்த பெருமைக்குப் பலரும் பாத்திரமாகியுள்ளார்கள்.

யாவற்றினும் மேலாக, அதிசயிக்கத்தக்க, விஞ்ஞான ரீதியில் விடைகாண இயலாத, பற்பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார், பக்தியை வளர்க்க.

உடல் ஏதேனும் ஒரு தொண்டில் ஈடுபட்டவாறிருக்கும். உள்ளம் பரம்பொருளில் ஒன்றியிருக்கும். கண்கள் கருணை மழை பொழிந்தவாறிருக்கும். காதுகள் பக்தர்கள் குறை கேட்கக் காத்து நிற்கும். கருத்தோ அண்டசராசரங்களிலும் உலவிக்கொண்டே சித்சக்தியின் லீலா இயக்கத்தைச் சுவைப்பதில் திளைத்தவாறிருக்கும். இவ்வளவிற்குமிடையே

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எதற்கும் உதவத் தயார் நிலைக்குத் தன்னை ஒரு நொடியில் கொணர்ந்து பரிந்து குறை தீர்க்கும் பிரபுவாகத் திகழ்ந்த பெருமை, அவருக்கே உரிய தனித்தன்மை.

குழந்தை முதல் கிழவர் வரை, ஆண்டி முதல் ஆள்வோர் வரை, கற்றோரும் மற்றோரும் யாரும் அவரை எந்த நேரத்திலும் தரிசிக்கலாம். வேறுபாடின்றி யாவருக்கும் அதே பரிவுதான், புன்னகைதான்.

இனம் இனத்தை நாடும் என்பதற்கிணங்க, முக்கிய நிலையெய்தியப் பலப் பெரியோர்களும் விஜயம் செய்து இவரைக் கண்டு சென்றிருக்கின்றனர். இப்பெரியாரும் பல இடங்கள் சென்று பெரியோரைக் கண்டு களித்திருக்கிறார். இவர்கள் சந்திப்பில் நிகழ்ந்தவை என்னென்னவோ, அது அவர்களுக்கே சொந்தமான பேரின்ப இரகசியங்களாயிருக்கலாம்.

திரு ஆற்றல்

சான்றாக, இவரது உள்ளன்புக்கு மிகவும் பாத்திரமான பெருமாளகரம் சிறிய பண்ணை என விளங்கிய கிருஷ்ண மூர்த்தி அய்யரின் அனுபவம் ஒன்றை இங்கே விரிவுபடுத்துவோம். கிருஷ்ணமூர்த்திக்கும் மஹான் அவர்களுக்கும் பிராரப்தவசமாக ஒரு அன்யோன்யப் பிணைப்பு இருந்தது.

இருவரும் அடிக்கடி சந்தித்து அநேகம் விஷயங்கள் பற்றி ஆழ்ந்து உரையாடி மகிழ்வதுண்டு. இதயம் விட்டுப் பேசும் பேச்சிலே ஒரு நாள் மகான் சொன்னார், 'சாமி, ஆயிக்குக் கஞ்சி காய்ச்சி ஊத்துற விழாவிலே யார் யாரெல்லாம் வராங்க சாமி! ஐநூறு வயசு, ஆயிரம் வயசு, ஐயாயிர வயசு சித்தருங்க, பன்னிரண்டு சூரியன், இருபத்தி நாலு சூரியன், நூறு சூரியன் பிரகாசத்தோட இந்த அடிமை நடத்துற கஞ்சி ஊத்து விழாவுக்கு வராங்க சாமி,' என்றார்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கிருஷ்ணமூர்த்தி உடனே தமக்குரிய உரிமையன்போடு, தானும் அவர்களைக் காண முடியுமாவெனக் கேட்டார். அதற்கு மகான், 'முடியும் சாமி, ஆனா அது பழுத்தப் பத மான நிலை கெடச்ச ஜீவன்களுக்குத்தான் பார்க்கச் சாத் தியம். விரதமும், கட்டுப்பாடும் இல்லாம வாழற உடம்பின் கண்களாலே பார்த்தா, ஆறு மாசத்துக்குக் கண் உதவாமேப் போயிடும். இந்த அடிமை நினைச்சாக்கூட அந்த ஆறு மாசத்துக்கு பார்வையிலே வந்துவிட்ட கோளாறை மாத்த முடியாது. அதுக்குத் தயார்னு பார்க்கலாம். ஆனா உங்களுக்கு வேண்டாம் இந்த வம்பெல்லாம். நான் பார்த்ததைச் சொல்லக் கேட்டுத் திருப்திப் படுங்க போதும்,' எனக்கூறி முடிக்கப் பார்த்தார். ஆனல் கிருஷ்ணமூர்த்தியோ விடுவதா யில்லை. பிடிவாதமாய் வாதித்து இக்காட்சியைக் காண உதவுவதற்கு மகானைச் சம்மதிக்க வைத்தார்.

ஒருநாள் கஞ்சி ஊற்று விழாவில் கிருஷ்ணமூர்த்தி, மகானேடு தயார் நிலையில் காத்திருந்தார். ஜனவரிசை நகர்ந்து கொண்டே இருந்தது. சுவாமிகள் சொல்லியிருந்த படி, ஜாடை செய்ததும், கிருஷ்ணமூர்த்தி சுவாமிகளின் தோள்மீது கைவைத்தார். அவ்வளவுதான்! பளீரென ஒரு பெரும் மின்னலின் தோற்றம். கிருஷ்ணமூர்த்தி நினை விழந்து தரையில் சாய்ந்தார். பின்னர் பல மாதங்கள் கழிந்துதான் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை கூடிப் பழைய நிலையை அடைந்தார்.

திருவின் கரு

தன்னிலே தன்னைக் கண்டு திளைத்தவாறிருந்த பிரும்மத் திற்கு ஒரு வேட்கை தோன்றியது. தான் பலவாக ஆவேன் என எண்ணியது. வேட்கை தோன்றிய கணத்திலேயே சத்தாக இருந்த நிலை பின்னப்பட்டு ஒருபுறமிருக்க, மறுபுறம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சித்சக்தி நிலை உருக்கொண்டது. சத்தின் 'பலவாக ஆவேன்!' என்ற சங்கல்பத்தை உடனே நிறைவேற்ற சித்சக்தி, தன் மாயா தத்துவத்தைப் பெரும் கண்ணாடியாகத் தோற்று வித்து, சத்து தன்னைப் பலவாகப் பாவித்துக்கொள்ளும் மாயைக்கு—முட்படுத்தியது—சிதைந்து, சிதறுண்டுபோன கண்ணாடித் துண்டுகளில் அதன் அளவு, நிலை இவைக் கேற்றவாறு அதன் எதிரே இருக்கும் காட்சி, வெவ்வேறு கோணத்தில், அளவில், பிரதிபலிப்பதுபோல்.

தான் வெவ்வேறு என்ற எண்ணத்தோடு, தன்னையே தான் என்றறியாத நிலையில், மாயையின் பிரதிபலிப்பிலே தன்னைக்கண்ட சத்து, தனது பிரும்ம நிலையிலிருந்து நழுவி மாயையை ரசித்துச் சுவைத்து ஒவ்வொன்றாக எதை எதையோ வேண்ட ஆரம்பித்தது. வேண்டியதையெல்லாம் வேண்டியபடி அடைய, அடைய மேலும் புதுப்புது ஆசைகள் வளர்ந்துகொண்டே போய், தனது பிரும்ம நிலையின் பிரக்ஞை அறவே இழந்து, எதை வேண்டுவது, எதை வேண்டாமலிருப்பது என்ற குழப்பம் மேலிட்டது.

அக்குழப்பத்திற்கு விடையாக, சித்சக்தியே குரு நிலையில் நின்று, ஒரு க்ஷணம் பிரும்மத்திற்கு அதன் பழைய நிலையை உணர்த்திக் காட்டி மறைத்து விட்டது. பின்னைப்பட்ட உணர்வோடு இருந்த பிரும்மம், காட்டி மறைக்கப்பட்ட மீட்சி நிலையின் மாட்சியினை உணர்ந்து, மீண்டும் அந்நிலையைக் காண விழைந்து அதைத் தேட ஆரம்பித்தது.

அம்முயற்சியிலே காலமெல்லாம் தேடித்தேடி, பரிணாம மடைந்து, பின்னர் பக்குவம் பெற்றுப் பழைய நிலைக்கு யெய்யும் வளர்ச்சிக்கு ஏற்றவாறு, தான் இழந்து, தன்னிட மிருந்து மறைந்திருக்கும் தேஜஸைப் படிப்படியாகத் திரும்பப் பெற ஆரம்பித்தது—முடிவில் தன்னிலே தானாக ஐக்கியமாவதற்கு.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அம்மாதிரி ஏதோவொரு நிலைக்கு எய்திய ஒரு பாகத்தைத்தான் மகான் அவர்கள், இன்று நாம் இப்படிப்பட்ட உண்மைகளும் சாத்தியமே என்று உணர்வதற்காக, ஈச்வர சங்கல்பத்தின்படி, கிருஷ்ணமூர்த்திக்கு அன்று காட்டி அருளினர்.

ஸத்வ குணப் பிரதானமானது தெய்வம்.

ரஜோ குணப் பிரதானமானவர்கள் தேவர்கள்.

தமோ குணப் பிரதானமானவர்கள் அசுரர்கள்.

இம்மூன்று குணங்களையும் பல்வேறு அளவில் மிச்ரமாகக் கொண்டவர்கள் மனிதர்கள்.

தெய்வம் தெய்வமாக மட்டுமே இருக்கமுடியும். தேவன் தேவனாக மட்டுமே இருக்க முடியும். அசுரனும் அசுரனாக மட்டுமே இருக்க முடியும்.

ஆனால் மனிதனோ குணப்ரதான பரிணாமத்தின் மூலம் அசுரனாகலாம், தேவனாகலாம், தெய்வமாகலாம் அல்லது மனிதனாகவே நிலைத்து நின்று ஞானியாகலாம். மனிதப் பிறவிக்கு மட்டுமே இப்படியொரு வாய்ப்பு உண்டு.

இதை உணர்ந்துதான் தேவர்களும் அசுரர்களும் வரம் வாங்கியோ சாபம் பெற்றோ மனிதனாக வந்து பிறந்து ஒரு நிலையடைந்து திரும்பியுள்ளனர் என அபிப்பிராயம் கொள்ளும்படி புராணங்களின் போக்கு உணர்த்துகிறது.

அவதார அவசியம் நேர்ந்த காலங்களில் தேவையின் தரத்தையொட்டி தெய்வம் மனிதனாகப் பிறந்து செயல் பட்டதையும் புராணங்கள், இதிகாசங்கள் உரைக்கின்றன.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஆகையால் மனிதப் பிறவிக்குக் கிடைத்துள்ள மாண்புகள் தன்னிகரில்லாதவை எனத் தெளிவாகிறது. மனிதப்பிறவியின் ஒரே பயன், நோக்கம், திரும்பத் தெய்வமாக ஆவதே என்று உபநிடதங்கள் அறுதியிடுகின்றன.

அப்படி மனிதன் தெய்வமாகி விடுவது என்றால் ஞானி என்பது என்ன நிலை எனச் சிந்திக்கும் போது, தெய்வ சங்கல்பத்தைச் செயல் படுத்துவதும், தெய்வ நிலைக்கு மனிதன் பயணமாக வழியைச் செப்பனிடுவதுமே அவர்களது தொண்டாகி விடுவதால் ஞானி என்பது எதிலும் சேராத தனித்தன்மை மேவும் சிறந்த நிலையென வெளிப்படுகிறது.

பக்தர்களுக்குத் தெய்வம் துணைநிற்கும். ஞானிகளுக்கோ தேவதைகள் ஏவல் புரியக் காத்து நிற்கும்.

பெரியோர்களாகத் திகழ்ந்த யாவருமே தங்கள் முடிவான லட்சியமாக ஞானி நிலையைத்தான் கருதினர்கள். இந்நிலை மட்டும் ஒரு பிறவியில் சித்திக்கும் எளிய காரியமல்ல. எண்ணிறந்த பிறவிகள் எடுத்து, அளவிலாத் தவமிருந்து, காலத்தை வென்று, மறந்தும் கண் மூடாக் கவன நிலையோடு ஒவ்வொரு பிறவியிலும் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து, தொண்டுகளையும் தவறாது ஆற்றியவாறே நிலைக்கு மேல் நிலையாக உயர்ந்து கொண்டே சென்று சிரஞ்சீவித்வத்தை ஸ்வாதீனப் படுத்திக் கொள்வதுதான் 'ஞானிநிலை' என்று கொண்டால் சரியாக இருக்கும் எனத் தோன்றுகின்றது. நம்மிடையே ஒரு ஞானி வாழ்ந்தாலே போதும், யாவரும் கடைத்தேறலாம்.

> 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
> எல்லோர்க்கும் பெய்யும் மழை'

எனும் குறள் இதைத்தான் குறிப்பிடுகிறது.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திருத்தவம்

தெய்வாதிக்கத்தின் நியதி என்பது பிரும்மம் ஜீவ நிலையில் இருக்கும் போது விரும்பியதையடைந்து அதன் மூலம் பெறும் அனுபவங்கள் வாயிலாகப் பரிணமமடைந்து பக்குவம் பெறுவதற்காக சித்சக்தியால் நடத்தப் பெறும் இயக்கம். இந்த நியதிக்கு உள்ளடங்கியே ஈசுவரசங்கல்பம் தோன்றுகிறது. அவ்வப்போது காரியங்கள் நடக்கவும் நடக்கும் காரியங்கள் பின்னே நடக்க விருக்கும்வேறு காரியங் களுக்குக் காரணமாக அமையவும் ஏற்றபடி வார்க்கப்பட்டே ஈச்வரசங்கல்பம் உருவெடுக்கிறது. ஈச்வரசங்கற்பத்திற்கேற்ப இயங்கத் தொடங்கும் இந்நிலையை 'அருள்வாக்கு' எனப் பெயரிட்டால் பொருத்தமே. சாதாரணமாக அருள்வாக்கு என்று நாம் குறிப்பிடுவது சொன்ன சொல்படி பிசகாமல் நடந்தேறும் ஆசிகளைத்தான். ஆகையால் ஈசுவரசங்கல் பத்தின் தோற்றுவாயை அருள்வாக்கு என்று குறிப்பிட்டு கொள்வதில் சுலபமாகப் புரிந்து கொள்ளும் வசதி கிடைக்கிறது.

அருள்வாக்கின் ஆணைப்படிதான் ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் அசைவும் செயல்படுகிறது. அருள்வாக்கில் பிறக்கும் ஆணையின் நோக்கத்தை உணர்ந்து செயல்படும் இயல்பு நம்மில் மலருமானால் தெய்வநிலை எய்துவதற்கான ஆற்றல் உள்ளே வளர ஆரம்பிக்கும். அன்றி அவ்வருள் வாக்கை நமது அகந்தையால் மருள்வாக்காக ஆக்கி மாறு பொருள் கொண்டு திரிவோமானால் இருவினைச் சுழலில் இடையறுது சிக்கி, இன்னல் பட்டு, இன்பத்தையும் துன்ப மாக்கி கொண்டு இழிந்த நிலைக்குப் போய்க் கொண்டே யிருப்போம். மீள்வது மாபெரும் வேலையாக முடியும்.

அருள்வாக்கு மூலாதாரம் என்ற இடத்தில் ஒளிவடிவில் பிறக்கிறது. இந்த ஒளியைக் காண்பது ஊனக் கண்களால் முடியாத ஒன்று. அந்த ஒளி கோடி சூரியர்கள் சேர்ந்தாற்

Funding by IKS-MoE

போன்ற தேஜஸை உடையது. அதை நிமிர்ந்து நின்று பார்க்கும் ஆற்றல் வெளி உலகைக் காணும் நம் கண்களுக்குக் கிடையாது. நன்கு பயின்று பதப்பட்ட பழுத்த நிலை கிடைத்தோர்க்கே இத்தரிசனம் சாத்தியமாகும்.

பின்னர் பச்யந்தி என்ற இரண்டாவது கட்டத்திற்கு மேல் நோக்கி வந்து சேரும் அவ்வொளி, ஒலி நிலையை எய்துகிறது. அவ்வொலியைக் கேட்பதும் ஊனக் காதுகளால் முடியாத ஒன்று. அந்த ஒலியின் அளவைத் தாங்கும் ஆற்றல், இந்த உலகைக் கேட்கும் நம் காதுகளுக்குக் கிடையாது. முன் சொல்லிய பக்குவ நிலைக்குப் போய்ச் சேர்ந்த பெரியோர்க்கே இயலும்.

பின்னர் ஒலியாக மாறிய அவ்வொளி மத்யமா என்ற மூன்றாவது கட்டமான இதய ஆகாசத்திற்கு வந்து சேர்ந்து ஒரு கருத்தாக வடிவம் கொள்கிறது. இது தான் மனிதனின் மனம் ஒடுங்கி, ஸ்வப்னம், சுஷுப்தி எனும் நிலைகளை அனுபவிக்கும் ஸ்தானம். இந்த இடம் தான் அவரவர் இதுவரை பெற்ற அனுபவங்களின் வாசனைகளும் அவரவர் பெற விழைந்துள்ள ஆசைகளின் எண்ணக் கூட்டங்களும் நிறைந்திருக்கும் குகை. ஆணவத்தின் ஆணி வேரும் இங்கே தான் இருக்கிறது. அருள்வாக்கு இந்த இடத்திற்கு வந்து கருத்து வடிவம் கொண்டவுடனேயே ஆணவத்தின் உந்தலால் நினைவுகளும், எண்ணங்களும் அக்கருத்தைப் பற்றிக் கொண்டு, 'நான் இன்னது செய்வேன். அதை நான் இதற்காகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எளிதாக முடியும். இப்படிச் செய்தால் கடினமாக இருக்கும். இதைச் செய்தவுடன் எனக்கு இன்னின்ன பயன் கிடைக்கப் போகிறது,' என்றெல்லாம் பலப்பல நிற எண்ணங்களை அக்கருத்தின் மீது பூசி, அவ்வருள்வாக்கை மருள்வாக்காக ஆக்கி, ஆணவம் தன்முனைப் போடு நின்று செயல்படத் தொடங்கும். இந்த இடத்திலேனும், கருத்து நிலை பெற்ற அருள்வாக்கை அதன் சுய

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உருவோடு காணக் கிடைப்போமானால், நாம் தப்பலாம். ஆனால் ஆணவத்திற்கு முழுநேர அடிமையாக இருக்கும் வரை அப்படிச் சுய உருவம் ஒன்று அந்தக் கருத்து நிலைக்கு இருக்கும் என்ற எண்ணம் கூடத் தோன்றாது.

நமது கர்மவினை காரணமாகவும், பிராரப்த வசத் தாலும், ஆணவத்தின் ஆதிக்கம் காரணமாக நம்மால் மருள்வாக்காக வார்க்கப்பட்ட அவ்வருள்வாக்கு பின்னர் வைகரி என்ற நாலாவது கட்டத்திற்கு வந்து சேர்ந்து வாக்காக உருவெடுத்து வார்த்தைகளாக வெளிப் படுகிறது, செயல் படுத்தப்படுகிறது.

நடப்பவை யாவும் ஒரு இம்மி பிசகாமல், அருள் வாக்கில் பிறக்கும் திட்டப்படியே நடக்கிறது. ஆனால் அப்படி நடக்கும் நடப்புக்களுக்கு முன்னும் பின்னும் நாம் இணைக்கும் விளக்கங்களே, மருள்வாக்காக அதை மாற, விட்ட நம்மை மேலும் மேலும் வினைச் சுழலில் சிக்க வைக்கும். மீட்சி என்ற நிலைக்கும் நமக்கும் உள்ள இடை வெளியை அதிகப் படுத்திக்கொண்டே போகும். கணப் பொழுதிலே பிறந்து, செயலாகவும் பரிணமித்துவிடும் இவ்வருள்வாக்கின் வேகத்திற்கிடையே நிலவும் இவ்வளவு நிலைகளையும் சென்று காண்பதற்கு, மனித வேகத்தால் சாத்தியமாகாது. ஆணவம் அழிந்த, நிம்மதி கைவந்த, நிதானமான மனநிலைக்குத் தான் இயலும்.

அந்த நிதான நிலை, ஆழ்ந்து, ஆயாசமில்லாத, இடை விடா உழைப்பை மேற்கொள்ளும்போதுதான் வசப்படும். அம் முயற்சியிலே, மனம் கற்பனைகளில் சென்று திளைப் பதைத் தடுக்க வேண்டும். அவ்சரம், அதாவது பதட்டம் அடியோடு ஒழிய வேண்டும். அவசரம் ஒய்ந்து விட்டாலே ஒரளவு அமைதி தானாக வரும். அமைதி கிடைக்கத் துவங்கிய உடனேயே அதை வசமாக்கி, வளப்படுத்தி, வலுப்படுத்த முற்பட வேண்டும். அந்த அமைதி வலுப்பட,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வலுப்பட, எண்ணங்களிலும், நினைவுகளிலும், கற்பனை களிலும் சென்று உழல்வது மனதிற்கு அலுப்பாகத் தோன்ற ஆரம்பிக்கும். அமைதியிலிருக்கும் சுவையை மனம் உணர, உணர, வாசனைகளும், நினைவுகளும், கற்பனை எண்ணங்களும், வலுவிழந்து போகும். அவைகள் வலுவு குன்றித் தேயத் தேய, அருள்வாக்கை அறிந்து கொள்ளும், புரிந்து கொள்ளும் ஆவல் நம்மிடம் பிறக்கும். அந்த ஆவல் நீடிக்க, நீடிக்க, அருள்வாக்கை மருள்வாக்காக மாற்றிக் கொள்ளும் மடமை விடை கொள்ளும். பின்னர் அருள்வாக்கு இயக்கிச் செல்லும் வழியில் தயக்கம் காட்டாமல் இயங்கும் தன்மை மலர ஆரம்பிக்கும். அப் போது ஆணவம் அடங்கி ஒடுங்கி ஏவலாளாக மாறும்.

பின்னர் அந்த ஏவலாளின் அபாரசக்தியின் வலுவைக் கொண்டே சாத்வீக வழியில் சென்றவாறு தெய்வநிலையை யடையலாம். இயக்குவோம் என்ற உந்தலே மாய்ந்து போய் இயங்க வைக்கப் படுகிறோம் என்ற எண்ணமே உணர்வு மயமாகும்போது அருள்வாக்கை, அதன் நோக்கத்தை, உணர்ந்தவாறே செயல்படுவோம்.

பின்னர் அருள்வாக்கு மூலாதாரத்தில் பிறக்கும் போதே அதைத் தரிசனம் செய்யும் தரம் கிடைத்து விடும். இதுதான் தீர்க்கதரிசனம் என்பது.இந்நிலையில் பெறும் சித்திதான் ஒருவரை முக்காலமும் உணரும் ஆற்றலைப் பெற வைக்கிறது. வருமுன் காக்கும் நிலை இது. முன் கூட்டித் தெரிந்த பின் எதிர் நீச்சலுக்கான சந்தர்ப்பமேயிராது. வருவதை விரும்பி வரவேற்கும் பான்மை வளர்ந்துவிடும். பின் ஒரே இன்பமயம்தானே.

திருவிளையாடல்

தெய்வ ஆதிக்கத்தின் விசித்ர நியதிப்படிப் பயிராகும் ஈச்வரசங்கல்பம் என்பது ஈச்வரனைக் காட்டிலும் வலு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வுள்ளதாகத் திகழ்கிறது. சங்கல்பத்திற்கு முன்வரை ஈச்வரன் தந்நிகரிலா வலுவுள்ளவன். சங்கல்பத்திற்குப் பின் அதற்கு கட்டுபட்ட நிலை ஈச்வரனுக்கும் ஏற்பட்டு விடுகிறது. இதன் காரணமாக ஈச்வரசங்கல்பத்தில் வலுவு மேலோங்கியும், கட்டுப்பட்டு இயங்க வேண்டிய சுதந்திர மின்மை நிலைவந்து வலிவு குறைந்த படியில் ஈசுவரனே நிற்க வேண்டியும் வருகிறது. பரமசிவன் பஸ்மாஸீரன் தவத்திற்கு மெச்சி உத்ஸாக மடைந்தார். செயல் என்று வரும்போது ஈச்வராதிகளையும் 'கர்த்ருத்வ' தோஷம் பற்றிக் கொள்கிறது. உத்ஸாக மடைவது என்பது ரஸாஸ்வாதம் எனும் நிலையின் கோணமாகக் கருதப்படும். அவசரப் படுதல் உத்ஸாகமடைதல், துக்கப்படுதல், எதிலேனும் திளைத்தல் இவைகளில் ஏற்படும் முனைப்பு நிலையை ரஸாஸ்வாதம் என்று சொல்லப்படும். இந்த ரஸாஸ்வாத நிலைக்கு ஆட்பட்டு நடத்தும் வினையில், விளைவுகளுக்கும் ஆட்பட வேண்டிய நிர்ப்பந்தம் வந்தே தீரும். உத்ஸாக மேலீட்டால் பஸ்மாஸீரனுக்கு வரம் தந்தார். பின்னர் அவரை மீட்க விஷ்ணு செயல்பட வேண்டி வந்தது. ராமாவதாரத்தில் சுக்ரீவனைச் சிநேகம் செய்துகொண்டதால் மறைந்து நின்று வாலியைக் கொல்ல நேர்ந்தது. கிருஷ்ணவதாரத்தில் பாண்டவர்களிடம் பூண்ட நட்பு வாயிலாக சர்ச்சைக்கிடமாகக் கூடிய என்னென்னவோ உத்திகளைக் கையாள நேர்ந்தது. ஈச்வரசங்கல்பத்தின் விநோத நாடக அமைப்புக்களுக்கு எவ்விதமான இலக்கணமும் நிறுவ முடியாது. அது சித்சக்தியின் ப்ரபாவத்தால் இயங்கும் நியதியின் விசித்ரப் போக்கையுடையது. இந்த விசித்ரப் போக்கின் ஜாலம்தான் இன்றும் தந்நிகரிலாப் பண்டிதர் எனப் பெருமை படைத்தோர் கூடப் புராணங்களில் வரும் ஒவ்வொரு நடப்புக்கும் வெவ்வேறு விளக்கங்கள், புதுப்புது உதாரணங்கள் சொல்லிக் கொண்டே போகிறார்கள். ஒருவருக் கொருவர் ஏதோ ஒரு இடத்தில் முரண்பாட்டைக் கற்பித்துக் கொண்டு கடும் சர்ச்சையிலிறங்கி விடுகிறார்கள், காலத்தின் மதிப்பை மறந்து. ஆனால் இதே நடப்புக்களைப்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பற்றி உண்மையாகவே தெய்வநிலைக்குச் சென்று கொண்டிருக்கும் பெரியோர்கள் சிந்திக்கும் போதோ, சொல்லும் போதோ, அதன் கோணம் பண்டிதர்கள் வழியிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நம்மைக் கடைத்தேற்றும் புனிதப் பணியாக பரிணமமடைகிறது. எதைக் கேட்டாலும், எதைப் படித்தாலும், எதைப்பார்த்தாலும் எதை எதிர்கொண்டாலும் அததிலே நின்று இயக்கியவாறிருக்கும் ஈசுவர சங்கல்பத்தை இனம் கண்டு கொள்வதே பெரியோர்களுக்கு இயல்பாகிவிடுகிறது. இவ்வியல்பு மஹத்தானது. இவ்வியல்பைத் தனதாக்கிக் கொண்டோர் மஹான்கள்.

திருத்தலம்

விடயபுரம் எனம் ஊர் இச்சரித்திர புருஷராக ஒளிரும், ஸ்ரீ விடயபுரம் மகான் என்றும், சட்டாம்பிள்ளை ஸ்வாமிகள் என்றும் பிற்காலத்தில் மக்களால் மனநிறைவோடு குறிப்பிடப்பட்ட பெரியார் அவதரித்த புண்ணிய பூமியாகும். இவ்வூர் தமிழ் நாட்டில், தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் செல்லும் இருப்புப் பாதையில் வரும் கொரடாச்சேரிரயில்நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒரு சிவத்தலம். இவ்வூரைச் சுற்றிலும் அநேகம் பாடல் பெற்றசிவ, விஷ்ணுத் தலங்களிருக்க, இத்தலத்தைப் பற்றிப் பொதுவாக அதிகம் பேர் அறிந்ததில்லை. இத்தலம் ஒரு காலத்தில் ஆத்திகப் பெருமக்களால் நிறைந்தும், வளங்களில் சிறந்தும் விளங்கியிருக்க வேண்டும். இவ்வூரின் தென் எல்லையை பாண்டவ ஆறு அணைத்தவாறு ஓடுகிறது. மேற்கெல்லையில் முசிறியம், பெருமாளகரம் எனும் கிராமங்கள். கிழக்கெல்லையிலும் வடக்கெல்லையிலும் நிறைத்து கண் கொடுத்தவனிதம் எனும் சிற்றூர்.

விடயபுரம் எனும் இவ்வூர் பரப்பையடைத்து ஏழு பிரம்மாண்டமான பிராகாரங்கள் கொண்ட ஒரு பெரும் சிவாலயம் இருந்திருக்கிறது, இவ்வாலயத்தின் தென் புறத்து ஏழாவது மதில் பாண்டவ ஆறை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

யொட்டி இருந்திருக்கிறது. கோயில் சுமார் ஒரு கிலோ மீட்டர் சதுரப் பரப்பைக் கொண்டதாக இருந்திருக்க வேண்டும். இந்தச் சுற்றளவுக்கு வெளியே இக்கோயிலுக் கான நிலங்கள் இருந்திருக்க வேண்டும். அந்நிலங்களின் எல்லையிலே மற்ற ஊர்கள் அமைந்திருக்கும். இந்தக் கணக் கைக் கொண்டு பார்த்தால் விடயபுரம் இப்பிரம்மாண்ட மான ஆலயத்தையும் அதன் மான்ய நிலங்களை மட்டுமே கொண்ட ஒரு ஊராக இருந்திருக்க வேண்டும். இவ்வா லயத்தின் இயக்கத்தில் பங்கு பெற்று இயங்கிய தொண் டர்கள் அண்டை ஊர்களான முசிறியம், கண் கொடுத்த வனிதம் ஆகிய இடங்களில் வசித்திருக்க வேண்டும். தற் சமயம் இவ்வாலயம், பிரம்மாண்டமான வெளி ஆறு பிராகாரங்களும் காலக்கிரமத்தில் ஜீரண மடைந்து இருந்த சுவடே இல்லாமல் தோப்புக்களாகவும், நிலங்களாகவும். பாதைகளாகவும் மாறிப்போய், ஒரு எளிய தோற்றத்துடன் ஒரே பிராகாரத்துடன் எஞ்சி நிற்கிறது.

இப்பிரம்மாண்ட ஆலயத்தின் முக்கிய மூர்த்திகள் ஸ்ரீ மீனாக்ஷி, ஸ்ரீ சுந்தரேசுவரர். ஸ்ரீ சுந்தரேசுவரரின் லிங்க வடிவு எழில்மிகு கம்பீரத் தோற்றம். ஆறரையடி உயரம். இம்மூர்த்திக்கு ஆவுடையைச் சுற்றி அணிவிக்கப்படும் ஆடை, பின்னப்படுத்தாத ஒரு முழு பத்தாறு வேட்டி யாகும். அதாவது 16 முழ வேட்டி. இது தவிர அவ்வளவு பெரிய ஆகிருதிக்கு உத்தரீயமாகச் சாற்ற (மேல் வேஷ்டி) 8 முழம் அளவுக்குக் குறையாமல் தேவைப்படும்.

நிமிர்ந்து பார்த்த மாத்திரத்திலேயே நம் கண்ணை நிறைத்துக் கொள்ளும் இந்த பிரம்மாண்ட லிங்க வடிவத் திற்கு ஒத்த வனப்பும் ஆகிருதியும் கொண்டு ஒளிவீசுகிறாள், அன்னை மீனாக்ஷி. ஆறடி உயரம். உயரத்திற்கேற்ற உடல் அமைப்பு. எழில் கொஞ்சும் அங்கங்கள். கருத்தை ஈர்த்து நம்மை மெய்மறக்கச் செய்யும் இப்பேசாச்சிலை இதோ இப்போதே திருவாய் மலர்ந்து நமக்கேதோ சொல்லப்

Funding by TKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

போகிறது எனப் பிரமிப்பூட்டும் கலையழகோடு கருணை ததும்பக் கனிவான பார்வையுடன் லலிதமாகக் காட்சி யளிக்கிறது. இவ்வன்னைக்குக் கொசுவம் வைத்தப் புடவை கட்ட இருபது முழம் முழுமையாகத் தேவைப்படுகிறது.

எதிரிலும், வலப்புறமாகவும் ஒரே கூடத்தினுள் இப்போது கோயில் கொண்டு இருக்கும் இவ்வரியதிருவுருவங் களைக் காணும்போது நம் சிற்றறிவுகொண்டு எவ்வுரு நம்மை அதிகம் ஈர்க்கிறது என அறுதியிட முடியாது. சிவனையே பிரதானமாக வைத்து வழிபடுவோர் உள்ளத்தை அன்னையின் அற்புதத் தோற்றம் தன்பால் ஈர்த்து நிலைக்க வைக்கும். அவ்வாறே அன்னையைப் பிரதானமாகப் போற்றும் பக்தர், அப்பன் சுந்தரேசுவரரின் உருவைக் கண்டமாத்திரத்தில் தம் கருத்தைப் பறி கொடுத்துப் பின் அதைப் பெயர்த்தெடுக்கத் தோன்றாமல் செயலற்று நின்று மெய்ம்மறந்து போவர். இத்தகவல்கள் வர்ணனையல்ல. யாரும் நேரே சென்று தரிசித்து உணர்ந்து அனுபவிக்கக் கூடிய உண்மைகள். சக்தி வேறு சிவன்வேறு அல்ல எனும் சத்தியத்தின் ஒளி வீசும் ஒரே சந்நிதி இது.

ஆலயத்தினுள் ஸ்ரீ சுந்தரேசுவரர் சந்நிதிக்கு வலப் புறத்தில் இருக்கும் மூன்றடி உயரமுள்ள அமர்ந்த கோல விநாயகர் திருஉருவில் நகைச்சுவை பிரதானமாக மிளிரு கிறது நம்மையறியாமலே கண்டவுடன் நகைக்கத்தோன்றும். கண்ணனின் மாயத்தைத்தன்னகத்தே கொண்ட அத்தும்பிக் கையான் விஷமப் புன்னகை நம் கவலைக்கு ஒரு மருந்தோ வென எண்ணத் தூண்டுகிறது. தவிர அருகில் இரட்டைப் பிள்ளையார்.

எதிரே இடப்புறத்தில் நாலரை அடி உயரத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி. இருபக்கமும் நாலடி உயரத்தில் ஸ்ரீ வள்ளி நாயகியும், ஸ்ரீ தெய்வயானை அம்மனும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அன்னைக்கு இடப்புறத்தில் நாலடி உயரத்தில் விஷ்ணு துர்க்கை. பக்கத்தில் கால பைரவ மூர்த்தி.

வெளியே ஈசான்யத்தில் நவக் கிரஹங்கள்.

மூர்த்திகள் ஒவ்வொன்றும் சீரிய தெய்வாம்சத்துடன் ஒளிர்கின்றன. இவைகளை நிர்மாணித்த ஸ்தபதி நிச்சயம் உள்ளொளி கண்ட ஓர் உன்னத மனிதராகத்தான் இருக்க முடியும்.

சிதிலமடைந்துபோன இவ்வாலயத்தில் மேற்கூறிய அன்னை, அப்பன் இரு மூர்த்திகளைத் தவிர இதர மூர்த்தங்கள் நமது மகான் ஸ்ரீசட்டாம்பிள்ளை சுவாமிகளின் காலத்தில் கோயிலுள்ளே இருக்கவில்லை. ஆங்காங்கு வயல்வெளிகளிலும், தோப்புக்களிலும் புதையுண்டு கிடந்திருக்கின்றன. நமது சுவாமிகள், இக்கோயிலின் மெய்க் காவலராகப் பொறுப்பேற்றபின் ஒவ்வொன்ருக ஆங்காங் கிருந்து கொண்டு வரப்பெற்று தற்போது இருக்கும் இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

ஸ்ரீ சுப்ரமணியர் சிலையைக் கொணர முனையும்போது ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. அதைப் பிரதிஷ்டை செய்யும் சமயம் சுமார் நான்கைந்து பேரால் சுமந்துவிடக் கூடிய இச்சுப்ரமணியச் சிலையைப் பத்து பன்னிரெண்டு பேர்கள் முயன்றும் நகர்த்த முடியவில்லை. திடீரெனச் சுவாமிகள் 'இடும்பா' எனக் கூவிக்கொண்டு தான் ஒருவராகவே அச்சிலையை அலாக்காகத் தூக்கிப் பிரதிஷ்டை செய்யுமிடத்திற்குக் கொணர்ந்து சேர்த்து விட்டாராம். இதை நேரில் கண்ணுற்ற சிலர் இன்றும் விடயபுரத்தில் இருக்கின்றனர்.

சென்ற இரண்டு மூன்று நூற்ருண்டுகளிம் இவ்வாலயம் சிதிலமடைந்து க்ஷீணித்திருந்ததைக் கணக்கிடலாம்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இந்த இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில், பெரிய பண்ணையார் என மதிப்போடு அழைக்சப்படும் கண் கொடுத்த வனிதம் திரு அப்பாசாமி நாயுடு அவர்கள் மேற்பார்வையில் ஆலயம் அடியோடு சிதைந்து விடாம லிருக்கச் சில முக்கியச் சிறு நிர்மாணப் பணிகள் செய்யப் பட்டு இப்போதுள்ள எளிய நிலையிலேனும் நிலக்கச் செய்யப்பட்டது.

திருத்தோற்றம்

இத்தலத்திலேதான் சுமார் 1880 ஆம் ஆண்டளவில் வேளாளர் குலத்தைச் சேர்ந்த திரு சின்னசாமி அகமுடை யாரின் குமாரனுக நம் சுவாமிகள் அவதரித்தார். இவரது பெற்ருேர் இவருக்கு இராமசுவாமி எனத் திருப்பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தார்கள். சிறு வயதிலேயே தனது குடும்பத் தொழிலான வேளாண்மையில் நாட்டம் கொண்டு கடுமையாக உழைக்க ஆரம்பித்த சுவாமிகள், அவ்விளம் வயதிலேயே உழைப்பு நேரம் போக மற்ற நேரங்களில் எவ்வித விளையாட்டிலும் நாட்டம் கொள்ளமல் திருநீறு தரித்த கோலத்தோடு தமது குடும்ப தெய்வமான அன்னை மாரியம்மன் சிலை முன்னே நின்று பக்தி செய்து தன் வருங்கால வாழ்க்கைக்கு உரமிடலானுர்.

சக்தி வாய்ந்த இம்மாரியம்மன் சிலை மிகவும் பொலி வோடு தாய்மை ததும்ப விளங்கும் ஒரு ராஜ கம்பீரத் திருவுரு. இச்சிலை ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகளுடைய பாட்டனுர் காலத்தில் அக்குடும்பத்திற்குக் கிடைத்த ஒரு அரிய செல்வம்.

இவரது பாட்டனுர் உடும்பு வேட்டையாடச் செல்வ துண்டாம். ஒரு சமயம் ஒரு உடும்பை விரட்டிச் சென்ற போது அது அகப்படாமல் ஓடிச் சென்று வயலில் ஒரு பொந்தினுள் புகுந்து கொண்டதாம். பாட்டனுர் தமது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஈட்டிக்கம்பைக் கொண்டு பொந்தினுள் குத்தி ஈட்டியை வெளியே இழுத்தபோது அதில் இரத்தம் இருந்தது. சுற்றிலும் தோண்டி விட்டுத் தேடும்பொழுது அங்கு உடும்பு இல்லை. இவ்வரிய மகாமாயையின் சிலைதான் அகப்பட்டது. ஈட்டியால் குத்துண்ட அம்மன் சிலையின் மூக்கிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டு இருந்தது. துணுக்குற்ற பாட்டனார் அபசாரம், அபசாரம் எனக் கதறியழுது அன்னையை மன்னிக்கும்படி கெஞ்சியும், மன்னித்ததற்கு அடையாளமாக இரத்தம் கசிவது நிற்கவேண்டும் என்றும், அன்று முதல் அம்மகாமாயை அம்மனையே தனது குல தெய்வமாகப் போற்றி வருவதாகவும் மனமுருகிப் பிரார்த்தித்தார்; அன்னையும் மனதிரங்கினாள். இரத்தம் கசிவது நின்றது அன்னை மகாமாயை அன்று முதல் இவர்கள் குடும்பத் தெய்வமானாள்.

இவ்வரிய சிலையின் திரு உருவம்தான் இந்நூலின் அட்டையை அலங்கரிக்கிறது. கூர்ந்து கவனித்தால் மூக்கிலுள்ள வடு தெரியும்.

முன்னே குறிப்பிட்ட பெரிய பண்ணை அப்பாசாமி நாயுடு அவர்களிடம் இராமசாமி இளம் வயதிலேயே விவசாயப் பணியை மேற்கொண்டார். இவரது இனிய தன்மை, அடக்கம், ஆற்றல் செறியும் உழைப்பு, இவை முதலாளியான பெரிய பண்ணையாரை மிகவும் கவர்ந்தது. இராமசாமியின் நாணயம், வேலைத்திறன், காரணமாகப் பண்ணையாரால் செல்லமாகச் சட்டாம்பிள்ளை என அழைக்கப்பட்டார். இராமசாமியைப் பிற்காலத்தில் மகானாக உணர்ந்த போது சட்டாம்பிள்ளை சாமி எனக் குறிப்பிடப்பட்டு அப்பெயரே நிலைத்துப் போயிற்று.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திருஐக்கியம்

இவருக்குப் பதினறு வயதிலேயே இசைந்தது பேரின்பம். பக்கத்து ஊர் மில்லுக்கு அறுவடையான நெல்லைக் கொண்டு சென்று அரைத்து வருவது பழச்கம். வண்டிக் கட்டிக் கொண்டு காலையில் சென்றால் மாலையிலோ, இரவிலோதான் திரும்ப முடியும். அவ்வாறு ஒரு முறை சென்று ஊர் திரும்பும் போது இரவு அகாலமாகி விட்டது. ஊர் எல்லைக்குள் வண்டி நுழையும்போது சட்டாம் பிள்ளை அசதி மிகுதியால் ஆழ்ந்த உறக்கத்தின் வாய்ப்பட்டு இருந்தார். தளர் நடை போட்டு வந்த மாடுகள் திடீரென்று மிரண்டு துள்ளின. வண்டி குடை சாய்ந்தது. சட்டென விழித்தவர் கீழே குதித்தார்.

எதிரே வொரு மோகனச் சிரிப்பொலி கேட்டது பார்த்தால் ஜோதி மயமான ஓர்யுவதி! உன்னேடு இருக்கத் தான் வந்தேன், எனத் திருவாய் மலர்ந்தது, அத்திவ்விய உரு. கேள்வி ஞானத்தால் மோகினியிடம் அகப்பட்டோ மென நினைத்துக் கலங்கினர். கண்ணுக் கெட்டியவரை எந்த நடமாட்டமுமில்லை. ஒரு முடிவோடு தடாலெனக் கீழே விழுந்து, தண்டனிட்டு, 'தாயே நீ தான் என்னைக் காத்தருள வேண்டும்' எனக் கதறினர் 'பதருதே, நான் உன்னேடுதான் இருக்கப் போகிறேன். இனி நீயே நான், நானே நீ' என்றது அவ்வுரு.நினைவிழந்தார். என்னென்னவோ தெரிந்தன. என்னென்னவோ புரிந்தன, அம்மயக்க நிலையிலே.

பிற்காலத்தில் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடும் போது, "பாக்குக் கடிக்கற நேரத்திலே ஆயி ஆட்கொண் டாள். அண்டங்கள், பிண்டங்கள், அண்ட சராசரங்கள் எல்லாத்தையும் ஒரு நொடிப் பொழுதிலே காட்டி அந்த இரவிலேயே, தெரிய வேண்டியதை யெல்லாம் சொல்லி விட்டாள். எது தெரிந்து விட்டால் அப்புறம் தெரிந்து

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கொள்ளவேண்டியது எதுவுமேயில்லையோ, எதைத் தெரிந்து கொள்ளா விட்டால், தெரிந்த எதற்குமே அர்த்தமில்லையோ, அது அந்தக் கணமே தெள்ளத் தெளிய உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெரிந்து போயிற்று'' என்று சொல்லி யிருக்கிறார்.

* * *

பூரணம் தன்னிடமிருந்து பூரணத்தை, பக்குவம் அடைந்து விட்ட ஒரு ஜீவனுக்குத் தரும்போது ஜீவனும் பூரணமாகிவிடுகிறது. பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத் தாலும், திரும்பப் பூரணத்தைப் பூரணத்தோடு சேர்த் தாலும், பூரணம் பூரணமாகவே இருக்கும். அள்ள அள்ளக் குறையாது. கொட்டக் கொட்ட வளராது. அது தான் அது. அதுவேதான் எதுவும். எதுவாக மாறினும் அதுவாகவே இருக்கும். எது சேர்ந்தாலும் அதுவாகவே ஆகிவிடும். அந்த நிலை எந்த ஜீவனுக்கும் சொந்த நிலைதான். ஆனால் அடைவதிலேதான் கால வேற்றுமை உண்டு. நியதியின் பூரண ரகசியம், பொறிதட்டும் நேரத்திலே கிடைக்கும் ஒன்று, ஆனால் கிடைத்தபின் அதை நிரந்தரமாக்கிக் கொள்ளத்தான் காலம் பிடிக்கும். சரியான ஆற்றல் படைத் தோர்க்கு, சரிவரப் பயிராகி அறுவடை செய்து களஞ்சி யத்தில் சேர்க்க, 12 வருட நோன்பாகும் அது. சிலருக்கு அது நீண்ட சமாதி யோகமாகலாம். சிலருக்குக் கர்ம யோகமாகலாம். இன்னும் சிலருக்குக் குறையிலேயே கை நழுவி, மறு பிறவியில் திரும்ப நோன்பைப் பூர்த்தி செய்து அறுவடையாகலாம். வேறு சிலருக்கு அநேகம் பிறவி எடுக்கவும் நேரலாம். அது அவரவர்கள் கர்ம வினையின் வலிமையும், தெய்வ சங்கல்பத்தையும் பொறுத்தது.

''களக்கமறப் பொது நடம் நான் கண்டு கொண்ட
தருணம், கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்த
தொரு காய்தான், விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி
யுதிர்ந்திடுமோ, வெம்பாது பழுக்கினுமென்
கரத்திலகப்படுமோ, கொளக் கருதும் மலமாயைக்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

குரங்கு கவர்ந்திடுமோ, குரங்கு கவராதெனது
குறிப்பிலகப் படினும், துளக்கமற வுண்ணுவேனே,
தொண்டை விக்கிக் கொளுமோ, ஜோதி திருவுள
மெதுவோ, ஏது மறிந்திலனே"

என இராமலிங்க அடிகளார் விதியின் வலியை நினைத்து கவலைப்பட்டுப் பாடியுள்ளது இங்கே சிந்திக்கத் தக்கது.

மறுநாள் காலை பிரக்ஞையற்றுக் கிடந்த ராமசாமி மீது தண்ணீரை வாரியடித்து உணர்வூட்டினார்கள். முனியடித்திருக்குமென பேசிக் கொண்டனர் ஊரார். இவரோ தெளிந்த நிலையோடு தனக்கு ஏதும் நேரவில்லையெனக் கூறி மந்திரித்துக், கொடுக்கப்பட்ட விபூதியையும் பெறாமல், சாதாரணமாக தனது பணியினை மேற் கொள்ளப் போய் விட்டார்.

அன்று முதல் இவர் போக்கில் மாறுதல்கள் மலர ஆரம்பித்தன. கடமைகளைக் கண்ணும் கருத்துமாய் ஆற்றிக் கொண்டே, அவ்வப்போது சிந்தனையிலும் ஆழ்ந்து சிறகடிக்க ஆரம்பித்தார். அவ்வருஷம் இவர் பயிர்செய்த வயல்களில் அமோக விளைச்சல். பண்ணையார் மேலும் பரிவுடன் இவரை நடத்தலானார். உள்ளே கனன்று கொண்டிருந்த கனல் தனது வேலையைத் துவங்கியது.

உள்ளே யோகமும் வெளியே உழைப்புமாக, காலம் உருண்டோடியது. வயது பதினெட்டை அடைந்தார். இவருக்குத் திருமணம் செய்யப் பெரியோர் முனைந்தனர். பெண்ணையும் தீர்மானித்தனர். அதுசமயம் அப்பெண் இவர் வீட்டிலேயே இருந்தாள். விரைவில் மணமுடிப்பது என ஏற்பாடாயிற்று. திருமணம் என்றால் என்ன? இசைவதா, மறுப்பதா என்றெல்லாம் சிந்தித்தவாறிருந்தார். தெய்வ

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சாந்நித்யம். கிடைத்தோர்க்குச் சில சமயம் விஷயங்களைப் பற்றிய முடிவுகள் பளீரெனத் தோற்றுவிக்கப்படும். வேறு சில சமயங்களில் அனுபவத்தின் வாயிலாகத் தரப்பெறும். சிந்தனை மூலம் விடை காணுத நிலையில் அனுபவ வாயிலாக விடைகாணும் வேளை வந்தது.

அன்று பக்கத்து ஊரில் திருவிழாக்கு வயது. வந்த பெண்ணைத் தனியே வீட்டில் விட்டு, பெண்ணுக்குத் துணையிருக்கும்படி இவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு யாவரும் திருவிழாக் காணச் சென்று விட்டனர். இரவு வந்தது. சட்டாம்பிள்ளை மனது நிலை கொள்ளாமல் தவித்தது. உள்ளே பெண். உள்ளத்திலே உந்தல். கதவு தாழிட்டிருந்தது. தட்டினுர். திறக்கப் படவில்லை. மேலும் தட்டிக் கதவைத் திறக்கப் பணித்தார். மறுப்பு வந்தது. வாயில்படி மட்டும்தான் வழியா, வேறு வழியும் இருக்கிறது என அறை கூவி உத்வேகத்துடன் வேறு வழியாகப் போய்ப் பெண் முன்னே நின்றுர். பெண் விக்கிப்போனுள். மேலும் ஓரடி எடுத்து முன்னே வைத்தார். பெண் கெஞ்சினுள், 'கிணத்துத் தண்ணியை வெள்ளமா கொண்டு போயிடும்', என்று.

சட்டாம்பிள்ளையின் வேகம் தடைப்பட்டது. சிந்தனை கிளர்ந்தது. கிணத்துத் தண்ணியை வெள்ளம் கொண்டு போவதில்லைதான். இந்த வார்த்தை எப்படி ஏற்பட்டது! கிணற்றில் தண்ணீர் வற்றியிருந்தால் வெள்ளம் வருவது நல்லதுதான். கிணற்றில் நீர் வழியும் போது வெள்ளம் வந்தால் கிணற்று நீர் என்று தனியாகப் பிரித்து எடுத்து எப்படிப் பயன்படுத்த முடியும்? வெள்ளத்தில் கலந்து வரும் அசுத்தங்களும் கிணற்று நீரோடல்லவா கலந்து விடும், என்று தன்னை வைத்து எண்ணினுர். அன்று ஆயி 'என்னேடு இருக்கத்தான் வந்திருக்கிறேன்' என்றுள். நானே இவளோடு இருக்கிறேன். என வந்து நிற்கிறேன். என்ன முரண்பாடு, என ஓர் எண்ணம் பளீரிட்டது. சாந்த மடைந்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தார்.மானசீகமாக அந்தப் பெண்ணை வாழ்த்தினார். கதவைத் திறக்கச் சொல்லி, நேர்வழியாக, வெளியே, வெளியிலே, ஆனந்த வெளியிலே, பேரின்பத்தைச் சுவைத்துச் சுவைத்துச் சொந்தமாக்கிக் கொள்ள நிரந்தரமாக வெளியேறி விட்டார்.

"பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சி விழைந்
தேனு பூண விழைந்தேனு வான் காண
விழைந்தேனு மெய்யுடையாய் என்னோடு நீ விளை
யாட விழைந் தேன் விளையாட் டென்பது
ஞானம் விளையும் விளையாட்டே பையுடைப் பாம்
பணையரோடும் ஆடுகின்றோய் எனது பண்
பறிந்தே நண்பு வைத்த பண் புடையோர் இன்னே செய்
யுடை என்னோடு கூடியாட வெழுந்தருள்வாய்
சித்த சிகாமணியே யென் திரு நட நாயகனே"

எனும் இராமலிங்க சுவாமிகள் பாடல் இங்கே ஒலிக்கிறது. நமது ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமி அவர்களின் இத்திருப்பு முனையில்.

திருச் சாதனை

உலகில் உள்ள எந்த ஒரு இன்பத்தையும், நாவினாலோ, கண்களாலோ, காதுகளாலோ, மூக்கினாலோ, ஸ்பர்சத் தாலோ, கருத்தாலோ நாம் முதன் முதலாகச் சுவைக்கும் போது கிடைக்கும் இன்ப உணர்வு நிலை அடுத்த தடவை அதே இன்பத்தோடு தொடர்பு கொள்ளும்போது அதன் முன் தரமும் அளவும் குறைந்தே தோற்றுகிறது. முன் தடவையை விட அதிகமான தரத்தோடு என்றுமே உணர முடிவதில்லை.

உதாரணமாக முதல் முதலாக பரிச்சயமே இல்லாமல், மற்றவர்கள் சொல்லக் கேட்ட கேள்வி ஞானத்தை மட்டும்

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வைத்துக் கொண்டு 'அல்வா' என்னும் ஒரு தின்பண்டத்தை உண்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதை முதலில் சுவைக்கும் போது, அது நமக்குப் பிடித்த ஒன்றாகவும் இருந்து விட்டால், அதிலே கிடைக்கும் திளைப்பின் முனைப்பு, நன்றாக நினைவு படுத்திப் பார்த்து ஆழ்ந்து யோசித்தோமானால், நிச்சயம் பழைய பக்குவத்திலும், சுவையிலும் சிறிதும் மாறாத நிலையில் அதே இன்பம் அதே இடத்திலிருந்து கிடைக்கும், மறு தடவையில் அதன் தரமும், சுவையும் ஒரு மாற்றேனும் குறைந்தே நமக்குத் தோன்றும். பின்னர் மேலும் பல தடவைகள் அதையே சுவைக்கும் போது அதன் தரம் படிப் படியாகக் குறைந்து கொண்டே போய் ஏதோ ஒரு எதிர் பார்ப்போடு அதனுடன் ஒரு இயந்திர கதியில் மறுபடி மறுபடி தொடர்பு கொண்டு ஓரளவு திருப்தியோடு போய்க் கொண்டிருப்போம். ஆனால் முதன் முதலில் அதனிடம் நமக்குத் தோன்றிய சுவையின் அளவைப் பின்னர் உணர முடிவதேயில்லை. 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்று சொன்னது இதைத்தான்.

மாறும் நிலை நம் மனத்தில் தான் இருக்கிறது என்பதை முதல் கட்டமாக உணர்ந்தால், முதன் முதலில் கண்ட சுவையின் அளவு ஓரளவு திரும்ப ஞாபகம் பெறும் திறன் வரும். அப்போது பின்னால் ஏன் சுவை குன்றித் தோன்ற ஆரம்பித்துள்ளது, நாம் தொடர்பு கொள்ளும் பொருளில் மட்டும் மாற்றம் இல்லாமலிருக்கும்போது என்ற ஆராய்ச்சிக்கு, மனம் செல்லும். அப்போது எவ்வாறான பயிற்சியால் இம்மனத்தை முதல் கட்டத்தில் எய்திய அளவு முழு நிலையைப்பெற வைக்கலாம் என்பது தோன்றும்.

அவ்வழி வேறு எதிலுமில்லை. மனத்தையடக்கி நம் வசம் வைத்து அதைச் சும்மா இருக்கப் பழக்கினால், நமக்கு எதையும் அனுபவித்தபின் அவ்வனுபவத்தை நினைத்து நினைத்தே தன்னை அந்த அனுபவத்திற்கு மரத்துப்போகும் நஷ்ட நிலையடைவது நின்று போகும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இந்தச் சாதனைப் படியில் கால் வைத்த பின் நாம் துய்த்த இன்பங்களெல்லாம் வெளிப் பொருளில் இருந்து கிடைத்தவை அல்ல, வேறு ஒரு பொருளோடு நாம் தொடர்பு கொள்ளும் போது, அப் பொருளில் நமக்குத் தோன்றும் ஒரு சுயேச்சையற்ற கற்பனை மாயத்தால் நம் உள்ளிருந்தே சுரக்கும் ஒரு ஊற்று என்பது புரிய வரும்.

அப்படிப் புரியும்போது காலத்தை விரயமாக்கி கானல் நீரைத்தேடி ஒடி வெளிப் பொருளுக்கு ஏங்காமல் தன்னுள்ளேயே இருக்கும் இன்ப நிலையை எட்டிப் பிடிக்கும் சாதனை வழியில் இழுத்துச் செல்லப்படுவோம். அப்படிச் சென்று அந்த நிலையின் இருப்பிடம் நமது ஆதிக்கத்தில் வரும்போது எல்லாம் இன்பமயம் எனும் நிலை சித்திக்கும்.

பின் எந்த ஒன்ளுேடு தொடர்பு கொண்டாலும் அவ்வப்போது அத்தொடர்பு புதியதாக முழு இன்பத் தோடு அமைந்து விடும். அதாவது ஒரு முறை ஏதோ ஒன்றில் தொடர்பு கொள்ளும்போது அது சம்பந்தப் பட்ட வரையில் நமது கன்னித்தன்மை அழிந்து போய் விடுவதால்தான் இரண்டாம் முறையாகக் கொள்ளும் தொடர்பில் முந்தைய நுகர்ச்சித்தரம் குறைந்துபோய் சுவைகுன்றிக் காணப்படுகிறது. அழிந்த கன்னித்தன்மையை மீண்டும் மீண்டும் புதுப்புத்துக் கொள்ளும் ஆற்றல் நமக்கு, மனத்தையடக்கி அவ்வின்ப ஊற்றின் சரியான உயிர் நிலையை எட்டும் பக்குவம் வரும் போது, கிடைத்து விடுகிறது. முன்னம் முனிவர்கள் இந்நிலையினை வெகு எளிதாக எய்தினர்கள், தமது இந்திரிய நிக்ரஹ சாதனையால்.

அதனல் தான் அவர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் ஜீவித்து ஈச்வரசங்கலப்பத்தை நிறைவேற்றுவதற்காக வாழ்ந்தார்கள். இதைத்தான் சிரஞ்சீவித்வம் என்கிருேம். ஒன்றையே போய் அடைய எத்தனையோ வழிகளில் இதுவும் ஒன்று. அன்றி இது ஒரு தனிப்பட்ட, மாறுபட்ட ஏதோ வொரு நிலை எய்தும் வழியல்ல.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

" கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும்
கட்டலாம் ஒரு சிங்க முதுகின் மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலில் இரதம் வைத்தைந்து யோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணுமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல் மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற
திறமரிது சத்தாகி என்
சித்த மிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோமயானந்தமே"

— தாயுமானவர்

திருத் தியானம்

பாரதப் பேரில் அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்த கண்ணன், அர்ஜுனனது தயக்கத்தைக் கண்டு உன் தர்மம் எதுவோ அதைச் செய்யத் தயங்காதே என வலியுறுத்தினர். ஒருவரது தர்மம் என்பதற்கு என்ன அர்த்தம்? கடமையைச் செய்வது என்பதா, உழைப்பது என்பதா, எது தர்மம் என்று எவ்வாறு அறுதியிடுவது? நாம் நினைத்த எதையும் நம்மால் செய்து விடமுடிகிறதா? அல்லது நினைக்காத ஒன்றைச் செய்ய நேரும் போது அதைச் செய்யாமல்தான் விட்டு விட முடிகிறதா? விரும்பியதை மட்டுமே செய்வதும், விரும்பாத ஒன்றைவிட்டு விடவும் நமக்கேது சுதந்திரம்? எதையும் நினைத்தபடி செய்ய முடியவில்லை, என்று தெளியும் போதே, நமக்கிருக்கும் சுந்திரமற்ற நிலையை உணர்ந்து ஒப்புக்கொண்டு நடப்பில் ஈடுபட வேண்டும். அப்போது எதிர் நீச்சலிட வேண்டிய அவசியம் நேராது. சிரமமின்றி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எதையும் செய்து முடிக்கலாம். எதையும் செய்து முடிக்க லாமென்றால் எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும்? எதையும் என்பது நடப்பு யாவையும் ஒருங்கே சொன்னது தான். நமது விருப்பு வெறுப்புக் கலந்த நோக்குடன் பார்க்கையில் குழப்பம் தான் மிஞ்சும். நடப்பவை யாவும் நடந்து கொண்டே இருக்கிறது. யாருக்காகவும், எதற் காகவும் எதுவும் காத்திருப்பதில்லை. பாரதப் போரில் தன் செயல் மூலம் தெளிவாகக் கண்ணன் நமக்கு உணர்த்தியுள்ள கூற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். சூத்ரதாரியாக இருந்து எதையும் ஆட்டிவைப்பவனே, சாரதியாகவுமிருந்து நடத்திச் சென்றுத் தன் சங்கல்பத்திற் கேற்றவாறு இயங்க வைத்திருக்கிறான். கருதிச் செய்பனும் நாமில்லை. செய்வதின் விளைவுகளும் நமக்கில்லை. ஆனால் "செய்பவன் நான், நான் செய்ததால் தான் இது விளைந்தது" எனும் எண்ண மாயம் தான், நாம் ஈவச்ர சங்கல்பத்தின் படி வினையையும் ஆற்றிவிட்டு, வினையால் விளையும் சுமைக்கும் ஆளாகி விடுகிறோம், பிறந்திறந்துப் பின் பிறந்துப் புண்ணுவதற்கு. அன்றிக் கண்ணன், குறிப்பிட்டு ணர்த்தியபடிஅவனே ஆட்டுவித்தும் அவனேவழிகாட்டி நடத் தியும் நிகழ்த்தும் இரு செயல்களுக்குமிடையே 'கர்த்ருத்வம், என்ற நான், எனது எனும் எண்ண மாயத்தில் சிக்காமல் வெறுங் கருவி நிலையிலேயே வழுவாது நின்றோமானால் நாம் நம் தருமத்தில் ஊன்றி நின்றவர்களாவோம், அப் போது எந்த ஒரு வினையின் விளைவும் நம்மை வந்து பற்றாது தாமரையிலைத் தண்ணீரென நம்மைத் தொடாமல் நிற்கும் உன் தர்மத்தைச் செய், உன் கடமையைச் செய், பலனை எனக்கர்ப்பணித்துவிடு, எனக் கண்ணன் பரிவுடன் சுட்டிக் காட்டி உதவியது இந்தக் 'கருவி' நிலையைத்தான். அவ்வித மாய்க் கருவி நிலையை முழுமையாகக் கையாண்டோர் தான், யோகநிலைப் பயணத்தில் வீறுநடையிடுவோராவர்.

'கருவி' நிலை நமது நடப்பில் இயல்பாகப் பிரதிபலித்து நிலைக்கத் துவங்கும் போது எண்ண மாயையிலிருந்து

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு வரும் அறிவுக்கு, ஒவ்வொரு சம்பவத்திற்கும், காரிய நிலைக்கு ஆதாரமான தெய்வாதிக்கம் ஒளி வீசுவது புலனாகும். அவ்வொளியின் தரிசனம் நமது வளர்ந்து வரும் ஆற்றலுக்கு இயல்பான நிலையாக மலரும்போது, ஒவ்வொரு நடப்பிற்கும் காரண மாக நிற்கும் ஈச்வரசங்கல்பத்தின் லீலாவிநோதம் நம்மைப் பரவசமூட்டி, உள்ளத்தைப் புளாங்கித மயமாக்கும். அந்நிலையைச் சுவைக்கும் பாக்கியம் கிடைத்தபின் மற்றெதுவும் துச்சமெனும் உணர்வு மேலோங்கி, நம்மைப் பிடித்தாட்டுகின்ற பயம், கவலை, கற்பனைகள் மூலம் நம்மைத் தற்காலிகமாகத் தேற்றிக் கொள்ளும் மடமை, இவையாவும் அறவே விலகிப் போகும். பிறர் மகிழ்ச்சியிலே நாம் காணும் தெய்வாதிக்கமும், ஈச்வரசங்கல்பமும், நமது ஆற்ற மாட்டா அழுகையிலும் நடமிடுவதைக் காண நேர்கையில், அப்புறம் நமக்கு அழுகையேது, அர்த்தமில்லாத சிரிப்பும் தான் ஏது? காலத்திற்கும் சுவைச்சுச் சுவைக்கத் தெவிட்டாத ஆனந்த போகமாக நமது ஒவ்வொரு கணமும் ஆகிவிடும். விடயபுரம் மகான் அடிக்கடி சொல்வாராம், 'அது கல்கண்டு மலைங்க, கடிச்சாப் பல்லுப் போயிடும். நக்கி நக்கிச் சுவைத்து நம்மை அதிலே கரைச்சுக்கணும் சாமி என்று. எவ்வளவு தெள்ளத் தெளிய உள்ளத்தில் பாயும் உபதேசம்.

திருத் தொண்டு

திருமணத் தளையில் அகப்படாமல் வெளியே வந்த சுவாமிகள், உள்ளே வளரும் ஞானக்கருவைப் போஷிக்க ஆரம்பித்தார். உழைப்பின் கடுமையோ, வேலைகளின் சுமையோ உள்ளேயே நிலைத்து நிற்கப் பழகிக் கொண்டிருக்கும் மனத்திற்கு இடையூறாக இல்லை. யோக நிலையும்' வாழ்க்கை நிலையும், இரு கூறாகப் பிரிந்து நின்று ஒன்றையொன்று குறுக்கிடாமல் இயங்க வாரம்பித்தன. 'கருவி' நிலையில் செய்யும் செயல்கள் அதிகப் பலனைத் தருவதாகி, இவர் பயிர் செய்த பகுதிகள் அமோக விளைச்சலைத் தந்தன,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பெரிய பண்ணை முதலாளிக்கு இவரிடமுள்ள பரிவு, பாசமாக மாற ஆரம்பித்தது. உழைத்து விட்டு ஒய்ந்து உறங்கும் ஓர் இரவில் கனவொன்று கண்டார். அன்னை மகாமாயை தனக்குக் கோயிலொன்று கட்டி, தன்னை அதில் இருத்தி, எதிரே குளமும் வெட்டி, முறையாகத் தன்னை ஆராதித்து வரப் பணித்தாள். சட்டாம்பிள்ளைக்கு நெஞ்சு நிரம்பி வழிந்தது, உவகையால். நேரே பண்ணையாரிடம் சென்று, கனவைச் சொல்லிக் குளம் வெட்டிக் கோயில் கட்ட இடமும், உதவியும், கோரி நின்றார். பண்ணையார் முழு மனத்தோடு இசைந்தார். சட்டாம்பிள்ளைக்கு இதயம் குளிர்ந்தது.

சட்டாம்பிள்ளையின் மனப்படி, பண்ணையார் கோயில் குளம் இரண்டிற்கும் நிலம் ஒதுக்கி, மேலும் வேண்டிய உதவிகளையும் செய்தார். குளம் வெட்டிக் கோயிலும் கட்டிக் கும்பாபிஷேகமும் முடிந்தது.

மகாமாயை தன் இருக்கையில் தினமும் வித விதமான, சட்டாம்பிள்ளையவர்களுக்கு மட்டுமே தெரியக் கூடிய, கோலங்களில் அமர்ந்து காட்சியளிப்பாள். அதை ஒரு அதிசய நோக்கோடு கண்டு பிரமிக்காமல், அன்னையின் அக்கருணைத் தோற்றத்திலே மெய்மறந்து, தன்னை இழந்த நிலையில், வாயடைத்துக் கண்ணீர் சிந்தி, அன்னையின் அடுத்த கட்டளையை எதிர் நோக்கிக் காத்திருப்பவரானார், சுவாமிகள்.

அன்னையின் காந்த சக்தி, வினை தீரும் வேளை வந்து விட்ட மக்களை ஈர்க்க ஆரம்பித்தது. வினை தீர்ந்த மக்கள் சொல்லக் கேட்டு, மேலும் கூட்டம் வளரலாயிற்று. சட்டாம்பிள்ளை தன் வேலைகளையும் கவனித்துக்கொண்டு, கோயிலைப் பராமரித்து பூசைகளையும்ஆற்றிக் கொண்டு, புதுப் புது ஞான யோகங்களையும் மேற்கொள்ளலானார். அச்சமங்களில், அன்னை கனவில் வந்து கோயில் கட்டப் பணித்ததின் குறிக்கோளினையும் சிந்தித்துச் செயல்பட ஆரம்பித்தார்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வாழ்க்கையின் தீரா வியாதி பசிப் பிணிதான். அப்பசிப் பிணியைப் போக்குவதற்கான தொண்டே சிறந்த, உயர்ந்த, ஒன்று அதனினும் உயர்ந்த ஒரு சமூகப் பணியோ அந்தஸ்தோ வாழ்க்கையில் வேறெதுவும் கிடையாது. முடங்கிக் கிடக்க இடம் இல்லையெனில் நின்ற நிலையிலேயே எதிலேனும் சாய்ந்து உடல் உறக்கம் கொள்ளும். உடுக்க உடையின்றி ஆகிவிட்டால் ஆண்டவன் தந்த கைகளுண்டு மானத்தை மறைக்க. ஆனால் பசி வந்து விட்டால் உணவு ஒன்று தானே அதற்கு விடை. இவ்வகை எண்ணங்களில் உளைந்து, உளைந்து, மனிதன் செய்யும் தொழில்களில் மிக வுயர்ந்தது, மாண்பு மிக்கது, தலையாயதாய் என்றும் எங்கும் போற்றத் தகுந்தது, 'வேளாண்மை' ஒன்று தான் என்பது சுவாமிகளின் கருத்து. இவ்வெண்ணமே விவசாயத்தை அவர் ஒரு யக்ஞ மெனக் கருதும் மனநிலையை உருவாக்கி இருந்தது. இம் மகத்தானப் புனித நோக்கு அவர் கைபட்ட நிலத்தி லெல்லாம் பொன்னாக விளைத்தது. வள்ளுவரின்

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் — அதனால்
உழந்தும் உழவே தலை"

எனும் குறள் சுவாமிகளின் கருத்திலே ஒலிக்கக் கேட் கிறோம்.

தெய்வ சங்கல்பம் சட்டாம்பிள்ளை சுவாமிகளை, மேலும், மேலும் சிந்தனைச் சுழலுக்கு இழுத்துச் சென்று அவ்வப்போது தனது திட்டப்படி அவரது மனம் ஈடுபடும் பக்குவத்தை நல்க ஆரம்பித்தது. உணவுக்கான தானியத்தை விளைப்பது மாட்சி மிகு செயல்தான். ஆனால் அத்தானி யத்தை அடையும் செயலில் வசதியின் தேவை வந்து குறுக்கிடுகிறதே. உழைப்பவனுக்கு ஊதியத்தால் அந்த வசதி வசமாகிறது. ஆனால் உழைக்க வாய்ப்புக் கிடைக்கா தோர், உழைக்க முடியாதோரின் நிலை என்ன? பட்டினி தானா அவர்களுக்குக்கதி?

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

முடிந்தபோதெல்லாம், அவ்விதம் வாடுவோர்க்கு தவ வழிதேடல் "வேளாண்மை"யினும் மேம்பட்ட தொண்டல்லவா எனும் உந்தல் சுவாமிகள் மனத்திலே அடிக்கடித் தோன்றவாரம்பித்தது.

ஏற்கனவே அற்பமாயிருந்த தன் தேவைகளை மேலும் குறுக்கிக்கொண்டு ஞாயிறு தோறும் மகாமாயை அம்மனுக்குப் பூசை ஆற்றியபின் தன் ஊதியத்தின் பெரும் பகுதியைக் கொண்டுக் கஞ்சி காய்ச்சி வறியோர்க்கு வார்த்துக் களிக்கவாரம்பித்தார். இப்பணியிலே கிடைத்த மன நிறைவு, திங்கட்கிழமை முதற் கொண்டே ஞாயிற்றுக் கிழமையை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருக்கும் தாகத்தைத் தீவிரமாக்கியது. ஆர்வத்தோடு இவர் ஆற்றும் இப் புனிதத் தொண்டு ஞாயிறு தோறும் வரும் கூட்டத்தை அதிகமாக்கியது. கையிலுள்ள வசதிக்கு மீறி பணி விரிவடைந்தது. இவரைச் சார்ந்து நின்ற சிலர் தாமும் இப் பணியிலே பங்கேற்றுப் பெருமை பெற்று இவரது ஆசிக்குப் பாத்திரமாகலானுர்கள்.

இவ்வாறு அவரைச் சூழ்ந்துள்ளோர் ஒய்வாக அளவளாவும் நேரங்களிலே பேச்சு வாக்கில் தங்கள் குறைகளையும், தம் வீட்டிலுள்ளோர்க்கு அவ்வப்போது நேரும் நோய்த் துன்பங்களைப் பற்றியும் சொல்லிக் கொள்வது வழக்கமாயிற்று. சுவாமிகளும் அதைச் செவியுற்று இவ்வன்புள்ளங்களுக்கு நேர்ந்துள்ள துன்பங்களை நினைத்து இறைவியிடம் உருகி இரைஞ்சி தன்னை அண்டிய அன்பர்க்குக் கருணையுடன் விபூதி தந்து "ஆயி இருக்கா, பாத்துக்குவா, நம்பிக்கையோடு இருங்க" எனக் கூறி அனுப்புவார்.

அதிசயிக்கத்தக்க விதத்தில் ஒரு வேளை விபூதியிலேயே அவர்கள் குறை தீர்ந்து விடும். இப்பேரனுபவத்திற் காளானோர் ஓடோடி வந்து தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் உவப்பும், உற்சாகமும் மீற, தம் குறை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தீர்ந்ததைச் சொல்லி வணங்குவர். வணங்கியே பழகிய இவர், வணக்கம் பெறும் வாய்ப்புகளைச் சந்திக்கையில் பதறிப் போவார். 'இதென்ன வேடிக்கை தாயே, குறை தீர்த்தது நீ; வணக்கம் பெறுவது நானா? இந்த அடிமை கையால் கொடுக்கும் விபூதியில் அப்படியொரு கருணையைச் சேர்த்திருக்கிறாய், அவர்கள் குறை தீர்க்கத் திருவுள்ளம் கொண்டு. அதற்கிடையே, இவர்களை என்னை வணங்கும் படி செய்து, நான் பெரியவன் என்று இவர்கள் மலைப் பதையும், நான் பெரியவன் தானோ எனும் அகந்தை எண்ணம் எனக்குத் தோன்றக் கூடிய ஆபத்தையும் தந்து வேடிக்கை பார்க்க நினைக்காதே தாயே, உன் கருணை மட்டுந்தான் நான் கேட்கும் பிச்சை, மற்று நடப்பதெதுவும் உனது திருவுளம்' எனக் கதறியவாறே தாயிடம் சென்று, நின்று உருகிக் கரைந்து, கண்ணீர் மல்கி, தேகமெல்லாம் வியர்த்து வழிய, கண்கள் மூடித்தியானத்தில் நிலைக்க, உடல் கிடுகிடென்றாடச் சிரமேல் கை கூப்பியவாறே நேரம் போவது தெரியாமல் நிற்பார்.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால்-உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்நிதியே ஞானநடத்தரசே
என்னுரிமை நாயகனேயென்று
வனைந்து வனைந்தேத்துதும் நாம் வம்மினுலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன், பொய் புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்
பொற் சபையிற் சிற்சபையிற் புகுந்தருணமிதுவே"

எனப் நம்மைப் பேரின்பப் பாதையில் செல்ல வருந்தி யழைத்த வள்ளலாரின் அறைகூவலை இங்கே நினைவு கூர்வது சாலப்பொருந்துகின்றது. ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகளுக்கு ஸ்ரீ ராமலிங்க அடிகளாரிடம் மிகுந்த ஈடு பாடிருந்திருக்கிறது. வள்ளலாரின் படமொன்றை மாட்டி வைத்திருந்திருக்கிறார், சுவாமிகள்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

யாரும் தன்னை வணங்குவதை சட்டாம்பிள்ளை சுவாமிகள் வரவேற்கமாட்டார். மீறி வணங்கி விடும்போது கண்களை மூடிச் சற்று ஒதுங்கித் தாய்க்கு அந்நமஸ்காரம் போய்ச் சேருகிறது என்று நாம் உணரும் நிலையில் நிற்பார்.

சுவாமிகளிடம் நிலவிய இப்பழக்கத்தை வேறு எந்தப் பெரியவர்களிடமும் கண்டதாகக் கூடக் கேள்விப்பட்டிராத தனிச் சிறப்பு என்றுதான் கூறவேண்டும்.

குறை தீர்ந்த அன்பர்கள் தங்கள் நன்றியைக் காட்டும் வகையில் சந்நிதியில் காணிக்கையாக ஏதேனும் செய்தாக வேண்டும் என மன்றுடும் போது, சுவாமிகளும், நீ பத்து பேர் கஞ்சிச் செலவை ஏத்துக்க, நீ இருபத்தஞ்சு பேருக்குக் கஞ்சி ஊத்து, என்றெல்லாம் இசைந்து வாங்கிக் கொண்டு அவரவர் பணத்தைத் தனித் தனியே வைத்திருந்து கவனமாகச் செலவழிக்கச் செய்வார். இவ்வாறு பங்கேற்று நடத்தும் அன்பர்கள் எண்ணிக்கை வளர வளர கஞ்சி ஊற்று விழா விரிவாகப் பெருகியது.

பசிப்பிணிக் காளானோர் கஞ்சி ஊற்று விழாவிற்குப் பெருங் கூட்டமாக வரலாயினர். உடற் பிணிக்காளானோர் சுவாமிகளின் விபூதியைப் பெற விழைந்துவரும் கூட்டத்தின் அளவும் பெரிதாகியது. ஒரு பக்கம் பசிப் பிணி ஓரளவு தீர்ந்து கொண்டிருந்தது. மறுபுறம் உடற்பிணிகள் அடியோடு விடைகொளவாரம்பித்தன. சுவாமிகள் 'ஆயி கருணை' பெருகிப் பாய்வதைக் கண்டு ரசித்தவாறு தன் தவ நிலையை மேலும் வலுப்படுத்தும் முயற்சியில் அல்லும் பகலும் அயராது ஈடுபட ஆரம்பித்தார், தனக்குள் இருந்தே சுரக்கும் அமுத ஊற்றின் ஊட்டத்தால் உரமடைந்த உள்ளத்தோடு.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

"திரு முயற்சி"

நாம் விழித்து எழுந்தது முதல் உறங்கப்போகும் வரை ஈடுபடும் உழைப்பிலே உடல் அயர்வுற்று இதற்கும் மேலே முடியாது, சக்தி இல்லை, தாங்க முடியாது, என்கிறோம். உறங்கி, காலை எழும்போது புதிய தெம்புடன் தினமும் வாழ்க்கையில் ஈடுபடுகிறோம். முதல் நாள் இரவு சக்தியெல்லாம் தீர்ந்துவிட்டது என்ற நிலை. உறங்கி எழும்போது பழைய வழக்கமான தெம்புடன் கூடிய மதர்ப்பு. இதென்ன வேடிக்கை. முதல்நாள் சக்தி தீர்ந்துவிட்டது என்கிறோம். மறுநாள் சக்தி திரும்ப வந்துவிட்டது என்கிறோம். உடல் கடுமையாக உழைத்து அயர்ந்து விட்ட நிலையில், என்னிடம் சக்தியே இல்லை, இனிமேல் என்னால் எதுவும் முடியாதென்கிறோம். மீறி மேலும் சற்று வலியுறுத்தி உழைக்க நேர்ந்தால் நம் உள்ளே அவசரத் தேவைக்கெனச் சேமிப்பில் இருக்கும் சக்தியின் உதவியால் மேலும் கொஞ்சம் தாக்குப் பிடித்து உழைக்கிறோம். அவரவர் உள்ளினுள்ளே அவசரத் தேவைக்கென மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இச்சேமிப்புச் சக்திதான் பலர் ஓய்வே இல்லாமல் சில நாட்கள் தொடர்ந்து உழைக்க ஊன்றுகோலாகிறது. இந்தச் சேமிப்புச் சக்தியின் பிரபாவம்தான் சிலர் அநேக நாட்கள் உண்ணாவிரதமிருக்கும் போது உயிர் காத்து உதவுகிறது.

சில சமயம் அதிக நேரம் வலியுறுத்தி உழைக்க நேர்கையில், நாம் மேற்கொண்டுள்ள பணியின் பாதியிலேயே நம்மையும் மீறிச் சற்றேனும் உறங்கி விடுகிறோம். பின்னர் தேவையின் தூண்டுதலால் சற்று நேர உறக்கத்திற்குப் பின் மறுபடி விழித்துக்கொண்டு உழைத்து முடிக்கிறோம். தீர்ந்து போன சக்தி அச்சிறு தூக்கத்திலே சற்றுத் தளிர் விட்டுக் கொண்டு உழைத்து முடிக்க உதவுகிறது.

விஞ்ஞான ரீதியில், உறக்கத்திற்குள்ள பெருமையைப் பல ஆதாரங்களோடு விஞ்ஞான விளக்கங்களுடன் ஸ்தூல

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மான எதை எதையோ சொல்வார்கள். ஆனல் அவ்வாருன தூக்கத்தில் ஒருவர் இறந்து விடும் போது இழந்த சக்தியை மீண்டும் பெற உறங்கியவர் எஞ்சியிருந்த சக்தியும் அற்று எவ்வாறு இறந்தார் என்பதற்கு மறுபடியும் ஸ்தூலமான விஞ்ஞான நிலையிலேயே ஆராய்ந்து சில சமாதானங்களைச் சொல்வர். சிருஷ்டியின் இவ்விந்தைப் போக்கினை விஞ்ஞானத்தின் விளக்கும் திறன் கொண்டு எட்டிப் பிடிக்க முடியாது. ஞானத்தால்தான் சாத்திய மாகும்.

ஒவ்வொரு பிறவியின் ஆரம்பமும் பிறப்பிலே துவங்கி இறப்பிலே முடிகிறது. மரணமும் ஒரு வகைத் தூக்கம் என்கின்றனர் ஆன்றோர். விழித்தெழுந்தது முதல் உறங்கும் வரை ஒரு நாளைய வாழ்வு தொடங்கி, நடந்து, முடிகிறது. அன்றன்றைக்கு உறங்கப் போகும்போது, அன்றன்று இறக்கிறோம். மறுபடி விழிக்கும்போது பிறக்கிறோம். ஆனல் இந்த இறப்பு உயிரோட்டத்தோடு நடைபெறும் ஒருவகை மரண அனுபவம்.

நாம் உறக்கத்திலிருக்கும்போது நம்முள் சேமிப்பு நிலையில் இருக்கும் அவசரத் தேவைக்கான சக்தி ஒரு புறம் உயிர் பிரியாவண்ணம் பேணிக் காத்து நிற்க, மறுபிறவியான நமது அடுத்த நாளைய வாழ்வுக்குத் தேவையான சக்தி மறுபுறம் நம்முள்ளே நிரப்பப் பெறுகிறது. இத்தூக்க நிலைக்காளாகும் காலத்தில், மரணத்தைப்போலவே, முதலில் மதிமயங்குகிறது. பின், கண்கள் இருளடைகின்றன. காதுகள் கேளா நிலையெய்துகின்றன. தூக்கத்தின் ஆழத் திற்கேற்ப ஈ மொய்ப்பதையோ, எறும்பு கடிப்பதையோ உடல் உணரா நிலையெய்திக் கட்டையாகிச் சுஷுப்தி எனும் நிலையை அனுபவிக்கிறது. அச்சமயத்தில் மனம் நினைக்குந் திறனிழந்த நிலையில் எங்கோ முடங்கிக் கிடக்கிறது. இந்திரியங்களின் கலப்பின்றிப் பிராணன் எதனின் ஆதிக்கத் திலோ பிணைப்புக் கொண்டுள்ளது. இந்நிலையை உருவகப்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

படுத்திச் சொல்வதானல் சீவனுகிச் சரீர அபிமானத்துடன் உலவும் இச்சிவாம்சத்தை சக்தியானவள் கண்ணைக் கட்டித் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று, இந்த ஜீவன் மறுபடி சக்தி பெற்றுத் திரும்பி மறுநாளைக்கு உய்வதற்கான ஆற்றலைப் பெறத் தாயுள்ளத்தோடு அமுதபானம் செய் வித்துத் திரும்ப அச் சிவாம்சத்தைப் பழைய இடத்திற்கே கொணர்ந்து சேர்த்துக் கண்கட்டை அவிழ்த்து விடுகிருள். கண் கட்டு அவிழ்ந்த சற்று நேரம் கழிந்துதான் நமக்கு உறக்கம் கலைந்து உணர்வு திரும்புகிறது. பின்னர் சற்று நேரம் சோம்பல் வாய்ப்பட்டுத் திளைத்தபின் விழிப்படை கிருேம்.

தூக்க அசதி வந்து கண்கட்டப்படும் முன்பும், தூக்கம் கலைந்து விழிக்குமுன் கண் கட்டவிழ்க்கப்படும் இடையே யும் நிலவுவது தான் மகாமாயையின் யோக நித்ரா விலாசம். நமது சோம்பேறித்தனம்தான் அவள் விளையாட்டு நிகழ்த்தும் நிலைக்களன். அந்தச் சோம்பல் நிலையை முறியடித்து ஆங்கு விழித்த நிலையை ஸ்திரப் படுத்தி ஆதிக்கம் பெற்ருல் சமாதி நிலை உடனே கை கூடும்.

ஸ்ரீ ரமண மகரிஷிகள் தான் இறந்தாகப் பாவித்துப் பழகிப் பார்த்த முதல் அனுபவத்திலேயே சமாதி கூடியது, இப்படி ஏதோ ஒரு முக்கிய நிலையை, தெய்வ சங்கல் பத்தின்படி, விட்ட இடத்திலிருந்து தொட்டதாக இருக் கலாம்.

பல பெரியோர்கள் தூக்கத்திற்கு முன்னும் பின்னும் நிலவும் இத்தடையை வென்று கடைத்தேறும் ஒருபயிற்சியை மேற்கொண்டு முயன்று பார்த்திருக்கின்றனர்.

ஸ்ரீ குகாநந்த நாதரின் முக்கிய சீடரும், குஹாநந்த மண்டலியின் ஸ்தாபகருமான ஸ்ரீ சிதாநந்த நாதர் (சீடர் களால் சார் என்று அழைக்கப்படுபவரும். பவழந்தாங்கல்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

N. சுப்ரமண்ய அய்யர் என அறியப்பட்டவருமான பெரியார்), தமது முக்கிய சீடர்களிடம் உறக்கம் எப்படி வருகிறது, எங்கிருந்து வருகிறது என்று கவனியுங்கள் அல்லது தூங்கி எழுமுன் எங்கிருந்து விழித்து எழுகிறோம் என கவனியுங்கள் என்று வலியுறுத்தி இருக்கிறார்.

இதைத் தவிர இந்தக் கோணத்தில் யாரும் மேல் விவரம் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியொரு மேல் விவரம் யாருக்கேனும் கிடைத்திருந்தால், அவ் விவரத்தைச் சொல்லில் வடித்துக் கட்டுரையாக்கிப் பிரசுரித்து ஏனையோரும் பயனடைய உதவுமாறு பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

திரு விழா

விடயபுரத்தில் இப்படியொரு பெரியாரிருக்கிறார் எனும் செய்தி ஊர் ஊராகப் பரவி, அருகாமையிலிருந்தும் தொலைவிலிருந்தும், அநேகம் ஊர்களிலிருந்து மக்கள் அணி அணியாக ஆர்வத்துடன் சுவாமிகளை நாடி வரலாயினர். கூட்டம் பெருகப் பெருக சுவாமிகளின் நேரம் மக்களது குறை துடைப்பதற்கே போதாததாகக் குறுக ஆரம்பித்தது சுவாமிகளின் கருணையுறவால் தமது பல குறைகளுக்கும் பரிகாரம் கிடைத்திருந்த பண்ணையார், சுவாமிகளுடைய சிரமத்தை யுணர்ந்து, தாம் தர்மகர்த்தாவாகப் போஷித்து வரும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் சிவாலயத்திற்குச் சுவாமிகளை மெய்க்காவலராக நியமித்து, விவசாய வேலைக்கான மேற்பார்வையோடு மட்டும் நிறுத்திக் கொள்ளும்படியாகச் செய்தார்.

ஆலய வேலைகளை மேற்கொண்ட பின்னர், சுவாமிகள் ஆங்கேயுள்ள மூர்த்தங்களின் ஈர்ப்பிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அங்கேயும் விசேஷ அபிஷேகம், ஆராதனை, உற்சவாதிகளை உற்சாகத்துடன் நடத்த

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வாரம்பித்தார். வெள்ளிக்கிழமைதோறும் அன்னை மீனுக்ஷிக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்கள் நடத்தி, அக்கண் கொள்ளாக் காட்சியில் லயித்து மெய்சிலிர்ப்பார். ஒவ்வொரு மாதமும், கடைசி வெள்ளியன்று அறுபது சேர் (சுமார் இருபது கிலோ) சந்தனத்தால் காப்பிட்டு அன்னையை ஜோதிமயமாய் அலங்கரித்து ஆனந்த லாகிரியில் ஆழ்ந்து போவார். பிரதோஷம் தோறும், பெருமானுக்கு விசேட பூசைகள் செய்து பூரிப்பார். கிருத்திகை தோறும், கந்த வேளுக்குக் கன பூசைகள் செய்து களிப்பார். அங்கு எழுந்தருளியுள்ள, நகைச்சுவையே பிரதானமாய்ப் பிரகாசிக்கும் பிள்ளையார் மூர்த்தத்திற்கோ நினைத்த போதெல்லாம் பூசைகளாற்றி மகிழ்வார். கூட்டம் பெருகப் பெருகக் கோயிலிலே விசேட தினங்களில் கலைவாணர் பலரும் வந்து கலந்து கொண்டு உபன்யாசமோ, இசை நிகழ்ச்சியோ நடத்துவது பழக்கமானவொரு நடப்பாகியது.

காலஞ் சென்ற இசை மேதை மாயவரம் ராஜம் அய்யர், சுவாமிகளிடம் பெரும் ஈடுபாடு கொண்டு, வந்து போய்க் கொண்டிருந்தார். ஒரு சமயம் உபன்யாச மூதறிஞர் சிதம்பரம் ஸ்ரீரங்காச்சாரியார் விடயபுரத்திற்கு வந்து நிகழ்ச்சி நடத்தி விட்டு, சுவாமிகளிடம், ஒளி மங்கிப் போனத் தமது கண் பார்வைக்கும் நலிந்துள்ள செல்வ நிலைக்கும், பரிகாரம் தேடினுர். மகான், அன்னுரிடம் கருணை கூர்ந்து மீண்டும் ஓரளவுக்குக் கண்ணொளி மீளவும் அன்னரது செல்வ நிலை சீர் படவும் துணை நின்றுர். பிற்காலத்தில் அன்னரது குமாரர் எம்பார் ஸ்ரீ விஜய ராகவாச்சாரியார் மிகவும் உயர்ந்த ஒரு கலாவிற்பன்னராகி கற்றோர் வியக்கும் சொற்சிமோனுக இன்றும் ஒளி வீசுகின்ருரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலக் கட்டத்திலேதான் கூட்டம் மேலும் மிகுதியாகி வருவதும், வசதியுள்ளோர் முழுமனத்தோடு திருத்தொண்டுகளிலே பங்கேற்பதும் நேரலானது. இந்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நாள் போல் ஹோட்டல் வசதி பெருகாத காலமது. வரும் ஜனக் கூட்டம் பசியாற வேண்டும். அதற்கென அன்ன தானப் பகுதியையும் தன் தொண்டுகளோடு இணைத்தார், சுவாமிகள். இப்பழக்கம் தொடங்கிய பின், வண்டிகளில் அரிசி மூட்டைகள், தானியங்கள், இலை, கறிகாய்கள் வந்திறங்கியவாறு விழா நாட்களை நிறைத்தன.

நூறுபேர், இருநூறுபேர், ஐநூறுபேர் என்ருகிப் பின் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரமெனக் கூட்டம் பெருகி வரலாயிற்று. விசேஷ நாட்களில் மக்கள் கூட்டம் தவிர பைராகிகள், சந்யாசிகள், அடியார்களெனத் தனிக்கூட்டமும் வந்தது. அக்கூட்டத்திலே கலந்து வந்து போகும் பல பெரியோர்களை இனங்கண்டு நமது சுவாமிகள், மானசீக நிலையில் பலருடனும், நேரிலேயே சிலருடனும் தொடர்பு கொண்டு போற்றியுள்ளார், இவ்வதிசயச் செய்திகளை அவர் முக்கிய ஒரு சிலருடனே மட்டும் பகிர்ந்து கொண்ட துண்டு.

அன்னதானம் நிகழும் நாட்களில் அங்கு நடக்கும் சமைய லின்மணம் ஊர் எல்லை வரை கமகமவென்று வீசித் தரிசனத் திற்கு வருவோர் பக்தியைச் சற்று நேரம் மறந்து பசியை நினைக்கத் தூண்டும். இருபது அடிக்குப் பதினைந்து அடி அகலத்தில் மூங்கில் பாய் விரித்து அதன்மீது முதல்தள மாக அண்டா, அண்டாவாகச்சோறு வட்டித்துச் சமப்படுத் தப்படும். பின்னர் அதன் மீது அடுத்த தளமாக அதே அளவு ஊறவைத்த அரிசி விரவப்படும். மறுபடி அதன் மேலே அண்டா, அண்டாவாக வடித்த சோறு விரவப்படும். அதன் மீது மறுபடி ஊறவைத்த அரிசி, மறுபடி மேலே வட்டித்த சோறு, எனத்தளம் தளமாகப் பத்துப் பன்னிரெண்டு அடி உயரத்திற்குக் குவிக்கப்பட்டு மூங்கில் பாய் போட்டு மூடப்பட்டு இருக்கும். படையல் நேரத்தில் பாய்கள் நீக்கப் பட்டு, ஊற வைத்த அரிசி பூராவும் நன்ருகப் பதமடைந்து வெளேரென்று பளிச்சிடப் பார்ப்போருக்கு ஒரு அன்ன

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மலையெனக் காட்சி தரும் அச்சோற்றுக் குன்று, காணக் கண்கொள்ளாக் காட்சியாகி மனதில் பதியும்.

படையல் முடிந்து அன்னமலைக்குக் கற்பூர தீபாராதனை நடந்து அன்னதானம் துவங்கும். மக்கள், தோப்புக்களிலும் மண்டபங்களிலும், பயிரிடாத வயல்களிலும் இலையில் உட்கார்ந்து வயிறார உண்ணும் காட்சியினை, ஆயி மகா மாயையுடைய திருவிளையாட்டெனக் கண்டு உள்ளம் பூரித்து நிற்பார், சுவாமிகள்.

கூட இருப்போர் அவ்வப்போது சுவாமிகளை அணுகி, இன்று எவ்வளவு வட்டிக்க வேணுமென்று கேட்டால், ஒரு சமயம் மூன்று மரக்கால் போட்டால் போதுமென்பார். கூட்டம் அதிகமாக இருக்கிறதே, போதுமாவென்று அவர்கள் ஐயுறும்போது, சுவாமிகள் தமக்கேயுரிய புன்னகையோடு, 'சொன்னபடி செய்யுங்க, ஆயிபோதுமென்கிறாள்' என்பார். அன்று அந்த மூன்று மரக்கால் திட்டத்திற்குமேல் செலவிராது. வேறு சில நாட்களில் இன்று ஒருமூட்டை வட்டிக்க வேணுமென்பார். கூட்டம் அதிகமாக இல்லாத நாளாக இருக்கும் அது. கூட இருப்போர் தயக்கம் காட்டுவர். 'ஆயி கட்டளை, சொன்னபடி போடுங்க' என்பார். சாப்பாட்டு நேரத்தில் எங்கிருந்தோ கூட்டம் வந்து விடும். வட்டித்தது தீர்ந்து மேலும் வட்டிக்க நேரும் கூடவிருப்போர் அதிசயித்து வாயடைத்து நிற்பர்.

இவரது காலத்திலேயே வேறு பல பெரியார்கள் அன்னதானத்தையே யாவற்றிலும் மேலான தானமாகக் கருதி நடாத்தி வந்துள்ளனர். அப்பெரியோர்கள் ஊர்கள் தோறும் சென்று, திருவிழாக் காலங்களில் ஆங்கு குழுமியுள்ள மக்களுக்கு வணிகப் பெருமக்கள், மிராசுதார்கள், தனவந்தர் ஆகியோர் உதவியோடு அன்னதானம் செய்வதைத் தம் முக்கிய கடமையாகக் கொண்டு வாழ்ந்துள்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ளனர். தஞ்சை ஜில்லாவில், நமது சுவாமிகள் காலத்தில் வாழ்ந்த அன்னதான சிவன் என்ற பெயர் அன்று யாவரும் அறிந்த ஒன்று.

விடயபுரம் கஞ்சி ஊற்று விழா, அன்னதான யக்ஞம் இவை மேலோங்கிச் செழிக்கச் செழிக்க, அங்கு கூடும் மக்களுக்கு அன்னத்தின் மதிப்புப் புரியா நிலை தோன்ற லாயிற்று. தேவைக்கதிகமான சோற்றை ஆவலாதி கொண்டு மேலும் மேலும் விளம்பச் சொல்லித் தின்று முடிக்க முடியாமல் வாரி எறிவது வழக்கமாயிற்று. இதைக் கண்டு மனம் வெதும்பினர், சுவாமிகள். ஒரு சமயம் சொன்னர், 'சாமி இவங்களுக்குச் சோற்றின் பெருமை மறக்க ஆரம்பிச்சிட்டுது. இது நல்லதுக்கில்லே. மல்லிகைப் பூப்போல இருக்குற சோத்தை மண்ணுலே கொட்டுறுங்க. அதைப் பூச்சிங்க தின்னப் போகுது, கொஞ்ச நாள்லே பாருங்க, புழுத்த அரிசியும், உளுத்துப் போன தானியமும்கூடக் கிடைக்காமே அலைஞ்சு திரியப் போறுங்க' என்று. அடுத்த வருஷமே இரண்டாம் உலகப் போர் உச்சக் கட்டத்தையடைந்து ரேஷன் முறை அமுலுக்கு வந்தது. மக்கள் அலையாய் அலைந்து, தேவையான அளவில் பாதியளவே நாற்ற அரிசியையும், மடித்துப் போன தானியங்களையும், கால் கடுக்க 'க்யூ' வரிசையிலே காத்திருந்து பெறலானர்கள். சுவாமிகள் முன்னே வருந்திச் சொன்னது உண்மையாயிற்று.

தனக்குக் கிடைத்த அபூர்வ சாதனை நிலைகளைச் சொந்தமாக்கி நிரந்தரப்படுத்துவதற்கு நீண்ட கால ஜபயோக, தவயோக, அவசியமிருப்பதை உணர்ந்த சுவாமிகள் அவ்விதம் தன்னை யோகங்களில் ஈடுபடுத்திக் கொள்ளும்போது பிறர் அதைச் சர்வ சாதாரணமாக மதித்து குறுக்கீடுகளில்லாமல் நடப்பதற்கு ஒரு வழி யைக் கடைப்பிடித்தார். அத்திட்டத்தின்படி ஓரிரு சித்திகள் கைவந்ததும் அவை மூலம் நாடிச் சில மந்திரங்களை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பெற்றுக்கொண்டார். அம்மந்திரங்கள் தேள்கடி விஷத்தை இறக்கவும், வேறு சில உபாதைகளைச் சமனப்படுத்துவதற்கும் உதவுபவை. ஊரார் அறிய சுவாமிகள் அம்மந்திரங்களைச் சிலரிடமிருந்து பெற்றதால், இவர் நேரம் காலம் கணக்கில்லாமல் ஜபம் செய்வது ஒரு இயல்பாகத் தோன்றியதோடல்லாமல், இவர் மகாசமாதி யோகம் பயில்வதை யாரும் இனம் காணு நலனும் கூடியது. உயர்ந்த நிலை அடைந்த சில பெரியோர்களிடம் கூட சுவாமிகள் அளவு கடந்த தன்னடக்கத்தோடு பழகித் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் மறைத்து வெற்றி பெற்றிருக்கிறார்.

மேலும் மேலும் கடுமையான தவநிலைகளை மேற்கொண்டு சுவாமிகள் பன்னிரண்டு வருட காலம் அன்ன ஆகாரமின்றி மூன்று முறை இரு கைகளாலும் நிரப்பிய திருக்குளத்துத் தண்ணீரே பிக்ஷையென நோன்பிருந்தார். அந்நாட்களிலும் ஒரு கணமேனும் சோர்வு அவரை ஆட்கொண்டதில்லை. இரவு எப்போது தண்ணீரில் இறங்குவாரோ, தெரியாது. காலையில் ஜனங்கள் குளிக்க வரும் நேரங்களிலே, கழுத்தளவு நீரில் நின்று ஈரத் துணியைத் தலையில் மடித்து வைத்த நிலையில் ஜபயோகத்திலிருப்பார். ஜன நடமாட்டம் பெருகியதும், அன்றைய ஜபத்தை முடித்துக் கொண்டு கரையேறி விடுவார்.

இந்தப் பன்னிரண்டு வருடக் காலங்களில் ஆங்கு மடப்பள்ளிகளில் நைவேத்தியத்திற்கெனத் தயாராகும் அன்ன வகைகளும், பண்டங்களும் தமது மணத்தை வீசி மனத்தை ஈர்க்கும் எல்லைக்குள் நடமாடாமல் வெகு தூரம் ஒதுங்கியே நின்று, அவற்றின் பக்குவத்தைப் பற்றித் திட்டங்கள் சொல்வார். நாசி வழியே நுகர்ந்தாலும் அதுவும் உண்ணு நோன்புக்கு ஊறு தானே என எண்ணும் உரமான தீவிரம் காட்டியவர், தனது தவத்தில்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இவரது சீரிய பண்பாடுகளிலே தலையாய லௌகிக குணம், பண விஷயத்தில் தான். ஒருவர் ஒரு காரியத்திற் காகக் கொடுத்த பணத்தை எவ்வளவு முக்கிய அவசியம் நேர்ந்த போதிலும் வேறொன்றுக்காக எடுத்துச் செலவிட மாட்டார். அந்தந்தப் பணம் அவ்வவ்வாறே பிறரால் எழுதித் தரப்பட்டக் குறிப்புச் சீட்டுகளினுள் சுற்றப்பெற்றுச் சுருள் சுருளாக மடி நிறையத் திணறும். யார் பணமாயிருந் தாலும் திட்டமிட்ட தினத்தன்றுதான், திட்டமிட்ட காரியத்திற்குத்தான் பயன்படுத்தப்படும். ஒரு எள் முனை யளவு கூட அதில் வித்தியாசம் வராது. ஒரு முறை ஒரு பெரிய விசேட தினத்தன்று மாபெரும் திட்டத்தில் விழா நடந்தது. அபிஷேகங்கள் நடந்து கொண்டிருந்தன. தேன், பால், பஞ்சாமிர்தம், பழரசம் என எல்லா அபிஷேகங்களும் நடந்தேறின. தயிர் அபிஷேகக் கட்டம் வந்தது. தேடிப் பார்த்தார்கள். அங்கே தயிர் வைத்திருக்கவில்லை. சுவாமி களிடம் வந்து தவறு நேர்ந்து விட்டது, தயிர் வாங்கத் தோன்றவேயில்லை, என்றார்கள். சுவாமிகள் சொன்னார், தவறு உங்கள் மீதும் இல்லை, என் மீதும் இல்லை. இன்னைக்குத் தயிர் அபிஷேகம் வேணுங்கறது ஆயி சித்தம். அதனுலதான் நேத்து வந்த எல்லாருமே பாலுக்குன்னும், தேனுக்குன்னும் இளனிக்குன்னும் பணம் கொடுத்தாங்களே தவிர, தயிருக் குன்னு யாருமே பணம் கொடுக்கலே, வேறே என்ன வேணுன்னும் தனியா யாரும் என்னைக் கேக்கலே, சரி ஆயி இப்படித் தீர்மானிச்சிருக்கா போல இருக்குன்னு நினைச்சுக் கிட்டேன்! என்றார். எதிலும் அப்படி ஒரு பிடிவாதமான நாணயம். அதன் பிறகு அவரவர் இன்னின்ன செலவிற்கு என்று சொல்லிக் கொடுத்த பின்னர் இன்னும் வேறு ஏதாவது வாங்கணுமா சாமி என்று கேட்டுக் கொள்வது பழக்கமாயிற்று இவருடைய எவ்வளவு அல்பமான தேவை யாயிருந்தாலும், ஒரு புகையிலைக் காம்பாக இருந்தால் கூட, ஆயி காசிலிருந்தோ வேறு எந்தத் திருப்பணிப் பணத்தி லிருந்தோ எடுத்துப் பயன்படுத்தவே மாட்டார். இவரது தேவை புரிந்து அன்பர்கள் அவ்வப்போது சாமானுகக்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கொண்டு வந்து இவருக்கென்று தருவதையே உபயோகிப்பார்.

பன்னிரண்டு வருட நோன்பிற்குப் பிறகும் இவர் கோயில் பிரசாதங்களையோ, நாவிற்கு ருசியான ஆகாரங்களையோ உண்டதேயில்லை. கருங்குறுவை அரிசிக் கஞ்சிதான் சாப்பிடுவார். டீ சாப்பிடுவார், வெற்றிலை போடும் பழக்கம் உண்டு. ஆனால் இவைகளும் கிடைத்துத்தான் ஆக வேணும் என்ற நிர்ப்பந்தத்திற்குத் தன்னை சுவாமிகள் ஒரு போதும் ஆட்படுத்திக் கொண்டதேயில்லை. இரைந்து பேச மாட்டார். எதிலுமே ஆடம்பரம் இராது. இவரைச் சுற்றி அமைதியும் எளிமையும், அடக்கமும்தான் நடமாடும். ஆகையால் இவரைக் காணவரும் அட்டகாசமிக்க எந்தப் பெரிய புள்ளியானாலும் இவரது பார்வைபடும் எல்லைக்குள் அமைதியாகத் தான் இருப்பார். இரைந்த பேச்சுக்கூட இராது. இவரது தவ வலிக்கும், நோன்புக்கும் அப்படியொரு தனித்திறனும் இருந்தது.

உணவிலா நோன்பு, உவகை ததும்பும் பூசனை, உன்னித் துணை நிற்கும் தயாளம், உருகிக் கரையும் பக்தி, இடையிடையே நல்கும் ஆழ்ந்த அறிவுரைகள், கடுகிக் குறை தீர்க்கும் கருணை ஆகியவை இவரது முழு நேரப்பொழுது போக்கு. எக்கோணத்திலிருந்து நோக்கினும் இவருக்கிணையாக இவரை மட்டுமே சொல்ல முடியுமென நம்மை ஈர்த்தொளிர்ந்து நிற்கும் மாண்புகள் மலிந்த ஒரு நடமாடும் கோயிலாகத் திகழ்ந்தவர் நம் சுவாமிகள்.

திரு லீலைகள்

தன்னடக்கத்திற்கடைக்கலமாகவும், தவத்திற்கு உறைவிடமாகவும், புலனடக்கத்திற்குப் புகலிடமாகவும், தேவைகளழிந்த திருவுடலாகவும், [illegible]டைந்தோற்கு அபயாலய

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மாகவும், துருவி அறிய முயல்வோர்க்கு விடுபடாப் புதிராக வும், நடமாடிய இச்சித்தர்பெருமான் வாழ்க்கையிலே, இவரது தவ வலியால், நிகழ்ந்த அற்புதங்கள் அநேகம்.

ஓரிரு சமயங்களில் சுவாமிகள் அவசியத்தின் காரண மாகத் தன்னை வெளிக்காட்டியும் இருக்கிறார். அவற்றில் ஒரு சம்பவத்தை இங்கு விவரித்து அதன் வாயிலாக இவரது இயக்கத்தில் நிலவிய தெய்வாதிக்கத்தின் தன்மையைத் தரிசிக்க முயற்சி செய்வோம்.

விடயபுரத்தை அடுத்த பெருமாளகரம் கிராமத்திற்கும், அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் பைராகி ஒருவர் வருவதுண்டு. இவர் தானென்ற செருக்கோடு அடிக்கடி பதட்டமடைந்து யாரையும் வீண் கோபத்தால் அதிகத் துன்பத்திற்கு ஆளாக்கி விட்டுவிடுவார். இது காரணமாய் ஜனங்களுக்கு இவரைக் கண்டால் குலை நடுக்கம். இவர் அவ்வழியாக வராமலிருக்க வேண்டுமே என்று தெய்வத்தை வேண்டுவர். அன்றி இவர் எதிர்ப்படும்போது எவ்வளவு தூரத்தில் வைத்து இவரைக் கண்டாலும் அப்படியே தெண்டனிட்டுப் பயந்து வணங்குவர். அந்த பயத் தைக் கண்டு ரசித்து மகிழ்ந்து திளைப்பதிலே பைராகிக்கு ஒரு திருப்தி இந்த மாதிரிச் சம்பவங்களின் நீடிப்பிலே திளைக்க வாரம்பித்த பைராகிக்கு ஒரு வீழ்ச்சி நேர்வதற்கு ஈச்வரசங்கல்பம் தோன்ற வேண்டிய நாளும் வந்தது. அன்று அந்த கிராமத்தில் ஒருவர் வீட்டில் சிரார்த்தம்.

சிரார்த்தம் நடக்கும் வேளையில் பைராகி அந்த வீடு வந்து சேர்ந்தார். தனக்குப் பசிக்கிறது, சோறு படைக்க வேண்டுமென்றார். வீட்டின் தலைவன் கலங்கினான். சிரார்த்த மாதலால் வேறு வீட்டில் உண்டி ஏற்பாடு செய்வதாகச் சொன்னான். பைராகிக்கு செருக்கின் முனைப்பு எல்லை மீறிய நிலையில் இருந்ததால் அளவற்ற கோபம் வந்தது. சரி பார்ப்போம், நீ சிரார்த்தம் முடிந்தே சோறு போடு என்று

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சொல்லிப் பக்கத்து வீட்டுத் திண்ணைக்குப் போய் விட்டார். சிரார்த்தம் துவங்கி அன்னமிடும் சமயத்தில் வட்டித்திருந்த பதார்த்தங்களிலெல்லாம் நரமலம் மிதக்கக் கண்டு வீட்டார் அதிர்ந்து போயினர். வேறு ஒரு முறைப்படி சிரார்த்தம் தத்தமாக மாற்றப்பட்டு ஒருவாறு முடிந்தது. அவ்வீட்டார் சொல்லொணா வேதனைக்காளாயினர். பைராகியின் இக் கொடூரச் செயலைச் செவியுற்ற ஊரார் இன்னும் அதிக பீதிக்கு ஆளாயினர். அன்னை பராசக்தி இவ்விளையாட்டு நடக்கும் நிலைகளனுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க சங்கல்பம் செய்து விட்டாள்.

சில வருஷங்கள் கழித்து, ஒரு வீட்டில், வழக்கம்போல் விடயபுரம் மகானைக் காண வந்திருந்த சில பெரியோர், சில தினங்கள் தங்கியிருந்தனர். அவர்களில் ஒரு யோகியும் இடம் பெற்றிருந்தார்.

ஒரு நாள் பிற்பகல் அவ் வீட்டுத் திண்ணையில் அப்பெரியார்கள் கூடி ஏதோ உரையாடிக் கொண்டிருந்தனர். யோகி மட்டும் திண்ணையில் ஒரு புறம் அமர்ந்து தியானத்திலிருந்தார். அப்போது அந்த பைராகி அங்கு வந்து சேர்ந்தார். யாவரும் பீதி அடைந்தனர். அவரை வணங்கினர். யோகி மட்டும் கண் விழிக்கவில்லை. வணங்கவில்லை.

பைராகிக்கு வந்ததே, கோபம்! சீறினார். 'யாரடா அவன், பெரிய தியானத்தைக் கண்டவன்?' என இரைந்தார். யோகி கண்விழித்து 'நீ யாரடா என்னைக் கேட்க எனச் சாட ஆரம்பித்தார். வார்த்தைகள் தடித்தன. கூடியிருந்தோர் பயந்தனர். பைராகி 'உன்னை என்ன செய்கிறேன் பார்' என அறை கூவல் விடுத்தார். 'முடிந்தால் செய்' என யோகி பதிலிறுத்தி விட்டுக் கண்ணை மூடிக் கொண்டு ஜபத்தில் ஆழ்ந்தார்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பைராகி வெறி கொண்டவராகி வீதியில் வந்து நின்று அங்கிருந்த தென்னை மரத்தை நோக்கி அண்ணாந்து கைதட்டி ஹூங்காரம் செய்தார். உடனே மரத்திலிருந்து தேங்காய் கள் வரிசையாக விடுபட்டுக் கீழே விழுந்து உருண்டு யோகியை நோக்கிச் சென்றன. பைராகி பெரும் ஹூங்கார மிட்டார். ஆனால் தேங்காய்கள் யோகியைச் சுற்றிவிட்டுத் திரும்ப ஆரம்பித்தன. ஏமாற்றத்தால் வெறி தலைக்கேறி பைராகி உன்மத்தரானார். இடையிலிருந்த வஸ்திரத்தை எடுத்து, 'இப்போது பார்' எனக் கூவியவாறே அதை இரண் டாகக் கிழிக்கப் போனார்.

'நில்லுங்கய்யா' என ஒரு அதட்டல் கேட்டது. யாவ ரும் குரல் வந்த பக்கம் திரும்பினர். சட்டாம்பிள்ளை ஸ்வாமி கள் நின்றிருந்தார். பயந்தவர்கள் முகத்தில் நிம்மதி மலர்ந் தது. சட்டாம்பிள்ளை சுவாமிகள் பைராகியைப் பார்த்து எச்சரித்தார்! 'போங்கய்யா, பாடுபட்டு சேர்த்த தபசெல் லாம் இன்னையோடப் போச்சு. ஆத்திரப்பட்டு எல்லாத்தை யும் ஒரே மூச்சிலே அழிச்சுட்டீங்க. இருபத்தி நாலு மணி நேரத்திலே இந்த எல்லையை விட்டுத் தாண்டிடனும், மறு படி இந்தப் பக்கமே வரக் கூடாது. மீறினாத் தலைவெடிச்சுப் போகும்' என்று. அன்று போய்ச் சேர்ந்த பைராகி அப்புறம் அங்கு வருவதேயில்லை. ஊரார் நிம்மதியடைந்தனர்.

அருகதையற்றவர்களிடம் சித்தி சேர்ந்து ஆபத்தை விளைவிக்கும் கட்டம் வரும்போது அதை வேரோடு பிடுங்கி விடும் ஆற்றல் பெற்ற மகான்களை ஈச்வர சங்கல்பம் உரிய சந்தர்ப்பத்தில் கொண்டு வந்து இணைத்துக் கொள்ளும் என் பதற்கு இச்சம்பவம் ஓர் எடுத்துக் காட்டு. அகந்தையுடன் உலவும் சில மந்திர சித்தி பெற்றோர் இவருடைய சந்நிதிக்கு ஆணவத்தோடு வந்து தமது சக்தியைப் பறி கொடுத்துத் திரும்பியிருக்கின்றனர். இவ்வளவு வலுவும் ஆற்றலும் உள்ள பெரியார் ஒருகணமேனும் தன்னை மீறுவதில்லை; எளி மையை, அடக்கத்தை மறந்ததில்லை.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஒரு சமயம் ஒருமாது தனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை, எப்படியும் சுவாமிகளிடம் வந்து விபூதி வாங்கிப் போவது என்ற முடிவோடு மாலை நேரமாகியும் பொருட்படுத்தாமல் தனியே புறப்பட்டார். விடயபுரத்திற்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தருகே வரும்போது நன்ருக இருட்டிவிட்டது. அக்கிராமத்தார் 'பாதை பாதுகாப்பானதல்ல, நீங்களோ நிறைய நகைகளணிந்திருக்கிறீர்கள்; இரவு கிராமத்தில் தங்கிக் காலையில் செல்லுங்கள்' என அறிவுறுத்தினர்கள். அந்த அம்மாளோ தனது கணவரின் ஆபத்தான நிலையை விவரித்து விட்டு 'மகான் இருக்கிருர் எனக்கென்ன பயம்' எனக் கூறி மேலே பயணத்தைத் தொடர்ந்தார். கொஞ்ச தூரம் சென்ற பின் கிராமத்தார் பயந்தது உண்மையாயிற்று.

கள்வர் அம்மாதை வழிமறித்தனர். நகைகளைக் கழட்டித் தருமாறு மிரட்டினர். அப்பெண்மணி பயந்து போனுள். அப்போது அந்த அம்மாளின் கண்ணுக்கு மட்டுமே பகவான் தோன்றினர். 'நீங்க போங்கம்மா, அவங்க ஒண்ணும் செய்ய மாட்டாங்க' என்ருர். அப்பெண்மணி, மரமாகச் செயலற்று நின்றுபோன கள்வர்களைத் தாண்டி, தயங்காமல் சென்ருள். கள்வர்கள் அசையவே இல்லை. அந்த அம்மாள் கொஞ்ச நேரத்தில் விடயபுரம் வந்து சேர்ந்து சுவாமிகளை தரிசித்தாள். சுவாமிகள் கேட்டார்: 'இருட்டில் தனியாகவா வந்தீர்களென்று?' அம்மாள் விவரத்தைச் சொன்னுர். சுவாமிகள் அன்றிரவே பிரசாதம் கொடுத்துத் தக்கத் துணையுடன் அந்த அம்மாளை அனுப்பி வைத்தார்.

பின்னர் சுவாமிகள் கள்ளர்கள் இருக்குமிடம் வந்து சேர்ந்தார். இமை கொட்டாமல் ஓங்கிய கைகள் அப்படியே இருக்கக் கட்டையாக உணர்விழந்து நிற்கும் அவர்களைப் பார்த்து, 'உம் ஓடுங்கள், இனி இந்த எல்லைக்குள் இம் மாதிரிக் காரியங்கள் நடக்கக் கூடாது' என அதட்டினுர்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உடனே அவர்கள் அசைவு பெற்றனர், ஓட்டம் எடுத்தனர். அன்றிலிருந்து அவ்வட்டாரத்தில் கள்ளர் பயம் ஒழிந்தது.

1939 ஆம் ஆண்டளவில் கும்பகோணத்திலிருந்த பக்தர்களில் ஒருவரான மகாமகக் குளக்கரை நடேசய்யரின் துணைவியார் ஜயலக்ஷ்மி அம்மாள் தொண்டையில் சதை வளர்ச்சி ஏற்பட்டுச் சில மாதங்கள் அவதியுற்று நோக்காடு அதிகமாகி ஆகாரம் உட்செல்லாமல் திணறிக் கடைசியாக அவரை அறுவைச் சிகிச்சைக்குச் சென்னைக்கு அழைத்துச் செல்வது என்று, தேர்ந்த மருத்துவர்களின் முடிவுப்படி டிக்கட்டும் புக் செய்தாயிற்று. புறப்படுமுன் சுவாமிகளைக் கண்டு பிரசாதம் பெற்றுப் போக விடயபுரம் வந்தார் அந்தப்பெண்மணி. விபரங்களைக் கேட்டுக் கொண்ட சுவாமிகள் கொஞ்சம் விபூதி கொடுத்து அதை நீரில் கலந்து அருந்த வைத்தார். விபூதி நீரை அருந்திய உடனே உபாதை வேகமாகத் தணிய ஆரம்பித்தது. 'ஆபரேஷன் வேண்டாம், ஆயி விபூதியே போதும்' எனச் சொல்லி அம்மாளை வழியனுப்பி வைத்தார் சுவாமிகள். மறுநாளே அந்த அம்மாள் பூரணமாகக் குணமான நிலையில் இருப்பதைக் கண்ட மருத்துவர்களால் இவ்வதிசயத்தை நம்பாமலிருக்கவும் முடியவில்லை. வியாதியின் முன் நிலையை எண்ணும் போது புதிராகவும் பட்டது.

ஒரு சம்பவத்தில் உயிர் நீத்த ஒருவரை உயிர்ப்பித்துத் திரும்பவும் கொஞ்சம் வாழ்ந்து பாக்கிக் கடமைகளைச் செய்து முடிக்க, உதவியிருக்கிறார், சுவாமிகள்.

நாகப்பட்டினம் சுவாமிகள் எனும் பெரியார், மரணப் படுக்கையில், இருக்கையில் தனது சகாக்களில் ஒருவரிடம், 'சாமியிடம் சொல்லி எனக்கு இன்னும் இரண்டு வருஷம் ஆயுசு கேட்டு விபூதி பிரசாதம் வாங்கிவா. நான் ரெண்டு

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வருஷத்திலே என்பாக்கிக் காரியத்தை எப்படியாவது பூரா முடிச்சுடறேன்' எனச் சொல்லியனுப்பினர். சுவாமிகள் புன்னகைத்துக் கொண்டே 'ரெண்டு வருஷம் என்ன, ஐந்து வருஷம் இருப்பார். எப்படியாவது பாக்கிக் காரியத்தை முடிச்சா சரிதான்' எனப் பிரசாதம் அனுப்பினர். அதன் பிறகு நாகப்பட்டினம் சுவாமிகள் ஐந்து வருஷம் இருந்திருக்கிறார்.

ஏதோவொரு மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமை; அன்றைய ஆராதனைகள், நிகழ்ச்சிகள் யாவும் முடிந்து இரவு 12 மணிக்கு மேல் மகான் ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் ஒருபுறம் ஒய்வாக அமர்ந்து அருகிலுள்ளோரிடம் உரையாடிக் கொண்டே மீதமிருந்த புஷ்பங்களை ஒழுங்கு செய்து கொண்டிருந்தார்.

இரவு ஒரு மணியளவில் பேச்சுக்களிடையே சட்டென்று. 'அடடே' எனச் சூள் கொட்டி அருகிலிருந்த புஷ்பக் கூடையை அலக்காய்த் தூக்கி அப்புறம் தள்ளி வைத்தார், கூட இருந்தோர் ஆவல் மீறி 'என்ன என்ன சாமி' எனக் கேட்டதற்கு சுவாமிகள், 'ஒன்றுமில்லே. ஒரு காரும், லாரியும்' என்று ஏதோ சொல்லிப் பாதியிலேயே நிறுத்தி விட்டார். மேற்கொண்டு கேட்டதற்கு 'ஒண்ணுமில்லே, ஏதோ தோணிச்சு, சொன்னேன். இப்ப எல்லாம் சரியாப் போச்சு' என்று சொல்லிக் கொண்டே வேறு பேச்சுகளில் இறங்கி விட்டார்.

மறுநாள் காலை ஒரு தம்பதியர் தமது 10 வயதுப் பெண் குழந்தையுடன் வந்து மகான் கால்களில் விழுந்து கதறியழுந்தார்கள். 'சாமி, பெரிய அபசாரம் பண்ணிட்டோம், மன்னிச்சிடுங்க. நேத்தி வெள்ளிக்கிழமை வராமே வைச்சிட்டோம். விருந்தாளிங்க வந்தாங்களேன்னு சினிமாப் பார்க்கப் போயிட்டோம். ஆட்டம் விட்டுத் திரும்பும் போது திடீர்னு குழந்தை ஓடினுள். அப்போ ரோடிலே ஒரு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

காரும், லாரியும் பயங்கரமா மோதிட்டது. பதறிப் போய் குழந்தை அகப்பட்டுக்கிட்டாளோன்னு அலறிக்கிட்டு ஓடினோம். 'இதோ இருக்கேனே பத்திரமா! நான் அடிப் படலே. விடயபுரம் தாத்தா என்னே அலக்காத் தூக்கி ரோடு ஓரத்திலே விட்டுட்டார்'னு குழந்தை தாவி வந்தாள். எல்லாம் உங்க மகிமை சாமி,' என்று பிரலாபித்தனர். 'குழந்தை தானே என்னென்னவோ சொல்லும். நடக்கிறது எதுவும் ஆயி மகிமை. இதைப்பத்தி அதிகம் பேசாதீங்க' என்று சொல்லிக் கொண்டே, ஏதோ வேலையாகச் செல்வது போல் அப்பால் சென்று விட்டார். முந்தைய நாள் இரவிலே சுவாமிகள் கூட இருந்த சிலர் இதைக் கேட்டு மெய் சிலித்தனர்.

இப்பெரியாரின் அதிசய நிலைகளை அறிந்து, பிரமித்து ரசிப்பதோடு நமது கடமை முடியவில்லை, ஆரம்பமாகிறது.

எவ்வளவு பெரிய மகான் அவர்! அவரை அறியும் பேறு கிடைத்த நமக்கு, அவரது ஆசியும் கிடைக்க வேண்டாமா? ஆகையால் அன்னாரது நோக்கமென்ன? அவரது நிலையென்ன? அன்னார் ஏன் அவ்விதம் மக்களுக்காகப் பாடுபட்டார். எதை எதிர்பார்த்துத் தவநிலைக்கிடையே, தம் பொன்னான நேரத்தை ஒதுக்கிக் கொண்டு, இவ்வரிய உதவிகளைச் செய்தார் என்று, சிந்திப்பதுதான் நம் தலையாய கடமையாகும். அவர் தம்மிடம் எதிர் பார்த்ததெல்லாம், வேண்டியதெல்லாம், சத்தியத்தையேதான்—சன் மார்க்கத் தையேதான் — மேலும் அரிய உன்னதச் செல்வமான 'சமரச' நிலையை அடையப் பாடுபடுவதைத்தான்.

திருப் பேராற்றல்

'பேராய அண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாட்டத்தின்
வாராய பலபொருளும், கடலும், மண்ணும்
மலையளவும் கடலுளவும் மணலும் வானும்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஊராத வான் மீனும், அணுவும், மற்றை
உள்ளளவும் அளந்திடலாம்—ஒகோ—உன்னை
யாராலும் அளப்பரிது என்று, அனந்த வேதம்
அறைந்து இளைக்க அதிக தூரமாகும் தேவே'.

எனும் ராமலிங்க அடிகளாரின் பாடலில் காணும் அணு தரிசனத்திற்திற்குப் பின்னுன "பரமாணு யோகம்" நம் சுவாமிகளுக்குக் கை கூடலாயிற்று, இந்தப் பனிரெண்டு ஆண்டு ஜப, தப யோகத்தின் முடிவிலே அவரைக் கண்டவர் களில் சிலரேனும் அனுபவிகள் இருந்திருப்பார்கள். அவர் களுக்கு ஓரளவு புரிந்திருக்கும் அப்பார்வை. எங்கோ Infinity என்பார்களே, அந்த எல்லையின் எல்லைக்கு அப்பால் நோக்கிய வாறிருக்கும். அந்நோக்கு எந்நேரமும் அண்டங்களை, அண்ட சராசரங்களை அங்கே ஓயாது ஈசுவர சித்தத்தின்படி அண்டங்கள் இயங்குவதற்கென, தங்களுக் கொதுக்கப்பட்ட பணியினை, எண்ணிலடங்கா சித்தர்கள், மற்ற உயர் ஜீவிகள் நிகழ்த்திக் கொண்டிருப்பதைத் தரிசித்துக் கொண்டிருக்கும், அத்தரிசன மகாத்மியம் அவரது நிலைக்கெய்திய ஞானி களுக்கே தாதாத்மியம்.

இன்று சந்திரனுக்கு மனிதன் சென்று வந்து விட்டான்; அங்கு ஸ்தூலமாயுள்ள எதை எதையோ மட்டும் கண்டான்; அப்படிக் கண்டு திரும்புதவற்கு என்னென்ன பெருமுயற்சி, எவ்வளவு பிரம்மாண்ட செலவு, ஏற்பாடு, அப்படிச் செல்வோருக்கு எத்தனை கவசம், முன்னேற்பாடு, உணவிலா நிலை, மாத்திரைகளே கதி.

மனித உடலோடு அங்கெல்லாம் செல்ல எவ்வித யோக நிலை எய்தியிருக்க வேண்டுமோ, அதனில் ஆயிரத்தில் ஒரு பங்கு ஸ்தூல நிலையுடன், என்னென்னவோ உபகரணங்களின் துணையுடன் செல்லும் இவர்களுக்கு, இத்தனை விஞ்ஞான முயற்சி, பக்கபலம், செயல். ஆனால் கண்டதோ, அங்கு விசேஷமாக, அதிசயப்படும்படி எதுவுமில்லை, என்ற முடிவு.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மனிதனின் இந்த முயற்சியும், அதன் படிப்படியான வெற்றிகளும் பொதுவாக அறிவினின்று பிறந்தவையே.

ஒரு ராக்கெட்டில் புறப்பட்டு, பின் அதனின்று விடுபட்டு அதிக உந்தலுடன் அடுத்த ராக்கெட்டில் சென்று, விண்வெளியைச் சுற்றி வந்து, இன்னும் மேலே வேறு உபகரணங்களால் சென்று, இடையிடையே, பூமிக்குச் செய்தியனுப்பி, இங்கிருந்து இவர்கள் சொல்கிறபடி, அங்கே அவர்கள் இயக்கவும், இங்கே இவர்களது கண் காணிப்பிலே, விஞ்ஞான ரீதியில் பணிக்கும் கட்டளைகள், அங்கே சென்று, அங்குள்ள விஞ்ஞானக் கருவிகளை இயக்க, என்னென்ன சாதனை—எத்தனை எத்தனை பேருடைய கூட்டு முயற்சி—அதிலே எவ்வளவு வழுக்கல்கள்—எத்தனை திருத்தல்கள்—எத்தனை வருஷங்கள்!

இப்போது அங்கே கண்டவை யாவும், இதற்கும் அதிகமான, நம் விஞ்ஞான முயற்சியால் இன்னும் கண்டறியப் படாத பல சூட்சும இயக்கங்களும், ஒரு தனி மனிதன் தனது ஜபயோகத்திலே, ஸித்தியிலே, என்றோ கண்டறிந்த அதிசயங்கள்.

ஒரு நூற்றுண்டு முன்னர் ராமலிங்க அடிகளார், இதையெல்லாம் கண்டார், விண்டார், பின் கொள்வாரில்லை என வருந்திக் கண்டதைப் பாட்டிலே வடித்துப் பின்னர், என்றுவது நாம் விழித்துக் கொள்ளும் போது, பார்த்துப் பயனடையட்டும் என்று, விட்டுச் சென்றூர்.

இரண்டாயிரம், ஆண்டுகளுக்கு முன்னர், திருவள்ளுவர் யாவற்றையுமே, கண்டு திளைத்து விட்டு, நாம் வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டிய விதி முறைகளை விளக்கிச் சென்றூர். அவருக்கும் பலப்பல ஆயிரம் ஆண்டுகட்டு முன்பே நமது முன்னோர்களான ரிஷிகளும், தவப்பெரியோர்களும், இம்மண்ணில் பிறந்து தவமிருந்து, ஸித்திகள் பெற்று,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அண்டத்தில் அணுவையும், அணுவில் அண்டத்தையும் தரிசித்து, நமக்கு யாவற்றையும், கர்ண பரம்பரையாகக் கிடைக்கவும், நூலாகவும், பாட்டாகவும் கிடைக்கவும் வழி வகுத்துச் சென்றுள்ளனர்.

இராமலிங்க அடிகளார் பாடல் ஒன்றை இங்கே மேற்கோள் காட்டி, அவர் கண்டு, விண்டதை நினைத்துப் பெருமை கொள்வோம்.

"அந்தரமிங்கறிவோம் மற்றதனில் அண்டம்
அடுக்கடுக்காய் அமைந்த உளவறிவோம்—ஆங்கே
உந்துறும் பல் பிண்ட நிலை அறிவோம், சிவன்
உற்ற நிலை அறிவோம். மற்றனைத்தும் நாட்டும்
எந்தை நினது அருள் விளையாட்டு, அந்தோ, அந்தோ
எள்ளளவும் அறிந்திலோம், என்னே என்று
முந்தனந்த மறைகளெல்லாம் வழுத்த நின்ற
முழு முதலே அன்பர் குறை முடிக்குந் தேவே

இன்று நமது விஞ்ஞானிகள், நாம் காணும் சந்திரன், சூரியன் தவிர, இன்னும் எத்தனையோ சந்திரன்கள், சூரியன்கள் உள்ளன என்று கணக்கிடுகின்றனர், எத்தனை எத்தனையோ கருவிகளின் துணைகொண்டும், மேலும் தெளிவெய்தப் பலப்பல புதுக் கருவிகளைப் படைத்துக் கொண்டும்.

அவ்வாறாக அரசாங்கத்தில், மக்கள் வரிப்பணத்தால், சேர்ந்துள்ள பவுன்களையும். டாலர்களையும் விஞ்ஞான முன்னேற்றம் என்ற பெயரால் பாழடிக்காமல், நம் முன்னோர்கள் எக்கருவிகளை வைத்துக் கொண்டு வான் மண்டலத்திலுள்ள ஸ்தூல, சூட்சும இரகசியங்களையெல்லாம் கண்டார்கள், விண்டார்கள்? தவ வலி, யோக சீலம், இவைகள் மூலமே ஆழ்ந்த பிரயாசையோடு, ஆசையை அறவே அறுத்து பற்றற்ற நிலையோடு பலவிதக் கட்டுப்பாடுகளையும், சீலங்களையும், நோன்புகளையும். தனி ஒருவராக ஆண்டுகள் கடைப் பிடித்து, ஸ்தூல தேகத்திலிருந்து,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தன்னைப் பிரித்துக் கொள்ளும் ஒரு நிலையெய்திப் பின் சூட்சும தேகத்தில், நிலைத்து நின்று பசி, தாக, உறக்கமின்றி அநேகம் ஆண்டுகளைக் கரைத்து, பின்னர் அடுத்தக் கட்டமாக, சூட்சும தேகத்திலிருந்தும் விடுபட்டுக் காரண தேக மென்னும் அதி சூட்சும தேகத்தில் மட்டுமே நிலைத்து (விஞ்ஞானி தன் கலத்தை, இன்னும் மேலே செல்ல, ஒரு ராக்கெட்டிலிருந்து விடுபட்டு அடுத்த ராக்கெட்டில் தாவிக் கொள்ள வைப்பது போல்) அநேக யோகங்கள் மூலம், அணுவின் பூரண இரகசியத்தை ஆறிந்து, உணர்ந்து அனுபவித்து, அணுவிலே அண்டத்தையும், அண்டத்திலே அணுவையும், அணு அணுவாகக் கண்ட பின்னர், மேலும் பலப்பல ஆண்டுகள் உழைத்துக் கடும் தவயோகத்தின் மூலம் கிடைக்கும் ஈடு இணையிலாச் சாதனை பலத்தோடு, அவ்வணு வையும் பிளந்து, ஊடுருவிப் பரமாணுவைத் தரிசித்தனர்.

இவ்வாறான நிலையெய்தியபின் தான் கண்டனர். அண்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையோ! ஜீவனது நிலைகள் ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையெத்தனையோ! எறும்பு முதல் வானோர் வரை, பித்தர் முதல் சித்தர் வரை; மண் முதல் விண் வரை எத்தனையெத்தனை நிலைகள்; அத்தனை யும் எங்கும், எல்லாம் நியதி தவறாமல், அணுவளவும் பிசிரின்றி இயங்கியவாறிருப்பதற்கு என்னென்ன இயக்கங் கள்; இயக்குதல்கள்! பிரமிப் பூட்டும் நுணுக்கத் திண்மை கள்! மயிர் சிலிர்க்க வைக்கும் காலப் பிரமாணங்கள்.

சொல்லிலடக்க முடியாத இவ்வளவு அதிசயங்களும், தரிசனமான பின்னர், பார்வை அவ்வதிசய அரங்கத்தி லேயே நிலைத்திருக்காமல், அருகே அஞ்ஞான மூட்டை அடுத்த வேளைச் சோற்றை நினைந்து, அழுது வழி கேட்கும் அவலத்தையா பார்க்கும்? இருந்தும் பெரியாரின் கருணை யுள்ளம் கனிந்து, திரும்பி இம்மாபெரும் சாம்ராஜ்யத்திற்கு இவனுமே சமபங்காளிதான்; ஆனால் எவ்வளவு அல்பத்தை யாசிக்கிறான். அறியாமை இருளில் வழி தெரியாமல் தவித்து,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எனக் கழிவிரக்கங்கொண்டு, அவனுக்குப் பசிபோக்கக் கருணையும் செய்து, மேலும் அறிவுப் பசி தோன்றுவதற்கு அருளும் புரிகின்றனர்.

அவ்வாறு அவர்கள் மனங்கனிந்து புரிந்த அருட்செல்வம் தான் இன்றும் நம்மில் எவரேனும் ஒருவர் அவ்வழியிலே சென்று கொண்டே இன்னும் பலரை அவ்வழிச் செல்ல அழைப்பதும் நடந்து வருகிறது.

திருயோகம்

அணுவைத் துளைத்தும் பரமாணுவைக் காட்டும் வல்லமையுள்ள குண்டலினி சக்தி ஒவ்வொருவருள்ளும் மூலாதாரம் என்னுமிடத்தில் மூன்றரைச் சுற்றுடன் எப்போதுமே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து கொண்டிருக் கிறது. அது அங்கு இருக்கும் பிரகாசப் பிரபாவத்தால்தான் நாம் நிகழ்த்தும் எந்தச் செயலையும் ஆற்றவல்லவர்களா கிறோம். அக்குண்டலினி சக்தி நம்மை விட்டுப் பிரிந்து அந்தப் பிரகாசம் மறைந்து விடும்போதும் இவ்வுடல் இறுதி எய்துகிறது.

உறங்கிக் கொண்டிருக்கும் அதனுடைய பிரகாசப் பிரபாவத்தாலேயே இத்துணை ஸ்தூல விஞ்ஞான முன்னேற் றங்களை மனிதன் அடைய முடிவதென்றால், அச்சக்தியைக் குண்டலினி யோகத்தால் விழிப்படையச் செய்து சுஷும்ன மார்க்கமாய், ஷட்சக்ர பேதனம் செய்வதன் மூலம் ஸஹஸ்ராரத்தை அடைவித்து, ஜீவப்ரும்மஸாம்ரஸ்ய நிலை யைப் பெறவைத்து, அம்ருதம் பிரவகித்து நிலைத்திருக்கச் செய்து, பின் வந்த வழியே திரும்பவும் ஒவ்வொரு இடமாக நிதானமாய் அந்தந்த சக்ரத்தில் நிலை தந்து ஆச்வாசப்படுத் தியவாறு அந்தந்த ஆறுஸ்தானங் களையும் மறுபடி தாண்டு வித்துத் திரும்பவும் மூலாதாரத்தில் சேர்க்கும் அமானுஷ்ய மான தவநிலையை என்னென்பது!

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இவ்வாறு அடிக்கடி குண்டலினி யோக சாதனை செய்து, அச்செயலிலே சிறிதும் பிரயாசையின்றி அடிக்கடி அவ்விதம் நிகழ்த்தும் சகஜநிலையெய்தி, அணுதரிசன ஆற்றல் பெற்று, அதன்பின் அணுவையும் ஊடுருவிப் பரமாணுவைக் கண்டு, அதனிலேயே லயித்து, அதன் மூலம் கிடைத்தற்கரிய சாம் ராஜ்யாதிபதி நிலையை அடைந்த பெரியோர்களின் பிரபாவங் களை எண்ணிப் பார்த்து, படித்து, கேட்டு மகிழும் பாக்கியம் கிடைப்பதே பெரிய பேறல்லா?

மனிதன் இப்போது பிறந்து, வாழ்வது மட்டுந்தான் வந்த வேலையென்றால் மற்ற அதிசயங்களைக் காண்பதெப் போது? இவ்வாறான எண்ணங்கள் வந்து, வந்து, அதனால் உந்தப்படும் ஊக்கத்தால் உழைத்து, உழைத்துக் கிடைக்கும் பயனைக்கொண்டு பார்க்கப் பார்க்கப் பலவும் தெரியும். அவ்வாறு தெரிய வந்த சாதனைகளின் பட்டியல் நீள்கையிலே ஆங்குள்ள அதிசயங்களும், அனுபவங்களும், பரமானந் தனமும் நம் வசமாகும். அப்போது, அறியாமையில் மூழ்கி யிருந்த அவரவர் பழங்காலத்தை நினைந்து வெட்கம் வரும்.

அன்று விசுவாமித்திர மகரிஷி தனது சீடனைத் திரி சங்குவைத் தமது தவ வலிமையால் சுவர்க்கத்துக்கு அனுப் பினார். இந்திரன் திரிசங்குவை சுவர்க்கத்தினுள் வரவொட் டாமல் தடுத்துப் பூமிக்கே திருப்பித் தள்ளினான். தலைகீழாக விழுந்து கொண்டிருந்த திரிசங்கு வானவெளியிலிருந்தே அபயக் குரல் கொடுத்தான். உடனே விசுவாமித்திரர் திரிசங்குவிற்கெனத் தனது தவவலி கொண்டு ஒரு இடத்தை சிருஷ்டி செய்து அவனை அங்கு இருத்திவிட்டார். இந்தச் சம்பவத்தைப் பற்றி அறியும்போது சான்று கேட்டுக் கட்டுக்கதையெனத் தலைப்புக் கொடுத்து ஒதுக்குகிறோம்.

இன்று விஞ்ஞானிகள் பூமியைச் சுற்ற அனுப்பிய விண்வெளி ஆய்வுக்கலம் இயக்கத்திறன் குறைந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பூமியை நோக்கி இறங்கத்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

துவங்கியதையும், இறங்கி வரும் கவலை நிலையை அவ்வப் போது அபாயச் செய்திகளாய் அனுப்பியதையும், விஞ்ஞான வல்லுனர்கள் எவ்வளவோ முயன்றும் அக்கூடத்தை அங்கேயே தொடர்ந்து நிலைக்க வைக்க இயலாது போய், கீழே விழும் அக்கலம் அதிகச் சேதப்படுத்தாமல் தன் முடிவெய்த எத்தனை முயற்சிகள் உண்டோ அத்தனையையும் நிகழ்த்திய செய்திகளை நாம் பத்திரிகைகள், வானொலி வாயிலாக அறிந்தோம். இது சாத்தியம் என நம்பும் நாம், நமது முன்னோர்கள் இதைவிடப் பெரும் முன்னேற்றங்களைத் தனி ஒருவராகவே அடைய முடியும் என நிரூபித்து ஆற்றிக் காட்டியதை எள்ளி நகையாடுகிறோம். என்ன பேதைமை!

மகரிஷிகளில் ஒருவராகும் பேறு பெறுவதற்கு முன்னே விசுவாமித்திரர் ஒரு பெரிய வல்லரசாக இருந்தார். ஒரு சமயம் அவர் வசிஷ்ட மகரிஷியின் ஆசிரமத்திற்கு வந்த போது, அங்கிருந்த, கேட்டதையெல்லாம் உடனே வழங்க வல்ல தெய்வப் பசுவாகிய காமதேனுவைக் கண்டார். அரசனெனும் செருக்கோடு அப்பசுவைத் தனக்குத் தந்துவிடும்படி வசிஷ்டரைக் கேட்டு அவர் இணங்காதது கண்டு பெருங்கோபம் கொண்டார். போர் சந்நத்த ரானார்.

வசிஷ்டரோ சாந்தமாகத் தனது யோக தண்டத்தைக் தன்முன்னே நட்டு வைத்து விட்டுச் சமாதியிலாழ்ந்து விட்டார். விசுவாமித்திர் எய்த வலிமிகுந்த கணைகள் வசிஷ்டரை அடையாமல் யோகதண்டத்தின் காலடியிலேயே விழுந்து சுக்கல் சுக்கலாயின. வெறிகொண்டவ ராகி, விசுவாமித்திரர் மேலும் மேலும் கடும் கணைகளைத் தொடுத்துக் களைத்துச் சாய்ந்தார்.

பின்னர் விசுவாமித்திரருக்கு ஏற்பட்ட தெளிவிலே 'இதென்ன அற்ப பலம், தபோ பலமல்லவோ பலம்' என

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
விரக்தியடைந்து, வைராக்கியம் தோன்றி, முடியைத் துறந்து ஜடாதாரியானுர். பின்னர் அதே வசிஷ்டரால் பிரும்மரிஷி எனப் போற்றப்பட்டு உயர்ந்து ராமாயண காலத்தில் அவதார புருஷன் ராமனுக்கு மணவினை நேரும் கட்டத்திற்குக் கருவியாக அமைந்தார்.

இவ்வுண்மைகளெல்லாம் நம்மைச் சிந்திக்கவைத்து நம் கண்களைத் திறக்கலாகாதா? பிறவிக் குருடன் ஒருவனிடம் பார்வை ஒழுங்காக உள்ள ஒருவர், இது அப்படி பிரம்மாண்டமாக இருக்கிறது, அது இப்படிப் பிரகாசமாக ஜொலிக்கிறது எனத் தாம் கண்ணுறும் அதிசய நிர்மாணிப்புகளை வர்ணித்து உணர்த்த முயற்சிக்கும்போது. அக் குருடன், 'ஏதோ தனது பார்வையின்மை நிலையினை, அனுதாபத்துடன் நினைந்து தன்னை மகிழ்விக்க முனைகிறுரோ' அல்லது, 'இவனுல்தான் பார்க்க முடியாதே என நினைத்து கதையளந்து முட்டாளாக்குகிறுர்களோ' அல்லது, 'என்னிடம் இவ்வாறெல்லாம் சொன்னுல் இவர்களை மிக உயர்ந்தவர்கள் என மதிப்பேன் என எண்ணுகிறுர்களோ' என்றெல்லாம் ஐயம் கொள்வான், நம்மைப்போல எதையும் கண்ணுறும் ஆற்றல் அவனிடம் இல்லாததால். இதேபோல் தான் நம்மிலும் மேல் நிலைக்கெய்தி ஞானக்கண்ணைத் தாண்டிய உள்பார்வை கிடைத்த பெரியோர் தாம் கண்டதை நம்மிடம் சொல்லும்போது, நாம் அவநம்பிக்கை கொள்வதும்.

நல்ல விஷயங்களில் மனம் நாட்டம் கொள்வதற்கு நம்பிக்கையுணர்வு இன்றியமையாத தேவை. நல்லறிவு பூர்வமான நம்பிக்கைதான் நம் உள் முன்னேற்றத்திற்கு அடித்தளமாகும். அத்தளம் முதலில் செம்மையாக்கப்பட வேண்டும். அதற்குச் சற்சங்கம் மிகமிக முக்கியமான ஊன்றுகோல் ஆகும். நம் குரங்கு மனது, கேட்கும் விஷயங்களைக் கிண்டல் செய்து கொண்டும், அவநம்பிக்கைப்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
பட்டுக் கொண்டும், நம்மை நல்லதைக் கேட்கவொட்டா மலும், பார்க்கவொட்டாமலும் தடுத்துக் கொண்டே இருக்கும்.

அதற்காக நாம் மனதை அடிக்கடி நல்விஷயங்களில் உலவவிட்டு, சாம, தான, பேத தண்ட உத்திகளால் நம் வசப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். பெரியோர்கள் சரித்திரங்களேயும், அவர்களது உபதேசங்களேயும், அவ்வப் போது கேட்டு, படித்து, அவர்கள் நடந்து காட்டிய வழி யினைக் கடைப்பிடித்துப் பயிற்சி கொள்வது, நிச்சயம் நம்மில் புதிய சகாப்தம் மலர்ந்து, புதிய ஆரோக்கியமான சமுதாயம் உருவாவதற்குத் துணை புரியும்.

இதை வலியுறுத்தத்தான் ஆதிசங்கர பகவத்பாதாள்,

"ஸத் ஸங்கத்வே நிஸ் ஸங்கத்வம்
நிஸ் ஸங்கத்வே நிர் மோஹத்வம்
நிர் மோஹத்வே நிஸ்ச் சலிதத்வம்
நிஸ்ச் சலிதத்வே ஜீவன் முக்தி:

— கோவிந்தம் பஜமூடமதே.

என்ற அறிவுரையை அருளியிருக்கிறார்கள்.

அதாவது ஸத் ஸங்கம் என்பது மனது நல்ல எண்ணங் களுடன் உறவு கொள்வதைக் குறிக்கிறது.

நல்ல எண்ணங்கள் என்று சிந்தித்துப் பிரித்துத் தேர்ந்தெடுத்து அவைகளுடன் உறவு கொள்வதும், நல்லன அல்லாதனவற்றை ஒதுக்குவதும் இடையருப் பயிற்சி மூலமாக நமது இயல்பாகிவிடும்போது, நாம் வேண்டும் போது நினைக்கவும், வேண்டாதபோது எதையும் நினைக்காமல் சும்மா இருக்கவும் ஆற்றல் பெறுகிறோம். அப்படி எதையும் நினைக்காமல் சும்மா இருக்கும் ஆற்றல் பெருகும்போது நிஸ்ஸங்கத்வம் சித்திக்கிறது.

சும்மா இருக்கப் பழகிய மனசுக்கு, சும்மா இருப்பதில் உள்ள சுவை புரிந்தவுடன், மனம் ஆசைப்பட்டு அலேவதில் அலுப்படையும், அப்போது நிர்மோஹத்வம் சித்திக்கும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஆசை அறுந்த நிலையில் மனம் சும்மா இருப்பதிலே கிடைக்கும் சாந்தியை ரசிக்கும். சாந்தியின் உன்னத சுகத்தில் திளைக்கும் போது நிச்சலிதத்வம் என்ற சலன மின்மை நிலை பிறக்கும்.

அச்சலனமின்மை நமக்கு நிரந்தரமாகும் ஆற்றல் நிலை யாகும் போது ஜீவன் முக்திக்கான மார்க்கத்தில் பயணம் ஆரம்பம் ஆகும்.

திருப் பயிற்சி

வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியிலும் மனிதன் தெய்வநிலையடையும் பயணத்தில் முன்னேறிக் கொண்டே தான் போகிறுன், பகுத்தறிவு என்று சொல்லப்படும் அவனது புத்தித் தத்துவத்திற்குப் புரியாமலேயே.

ஒவ்வொருவரும் எந்த அளவு தெய்வநிலை எய்தி யுள்ளனர் என்று அவரவருக்கும் தெரியாது, மற்றவரும் அதை அறிய முடியாது, ராக, த்வேஷக் கண்ணுடி வழி யாக மட்டுமே பார்வை வெளிச் செல்வதால்.

நாம் முன்னம் அறிந்திராத ஒருவரை முதல் முதலாகக் காணும் போது, நமக்கும் அவருக்கும் லௌகீகப் பிணைப்புள்ள அல்லது பிணைப்புக்கு வாய்ப்புள்ள ஒருநபராக அவர் இருப்பா ரேயாணுல் அவரால் நமக்கு இலாபம் உண்டு அல்லது வேண்டும் எனும் எண்ணம் தோன்றும் போதில் அவரிடம் நமக்கு ராகம் (விருப்பம்) உண்டாகிறது; நமக்கு இலாபம் இராது, நஷ்டம் நேர்ந்தாலும் நேரலாம் என்று தோன்று மாணுல், அவரிடம் நமக்கு த்வேஷம்(வெறுப்பு)உண்டாகிறது. எவ்வித உணர்ச்சி அந்தக் கட்டத்தில் நமக்குத் தோற்று கிறதோ, அதன் அடிப்படையிலேதான் அவரை மறுமுறை காண நேர்கையில் நமது அணுகுமுறை வடிவம் கொள்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கிறது. அன்றி அந்நபர் எவ்வித லாப, நஷ்டக் கணக்கிலும் நம்மிடம் தொடர்பு கொள்ளும் வாய்ப்பில் லாதவர் எனத் தோற்றினால், அவரை அக்கணமே மறந்து போகிறோம், மறுபடி அவரைக்காண நேரும்போது, முன்னே அவரைக்கண்ட நினைவே நமக்கு வருவதில்லை.

நாம் ஏற்கனவே அறிந்து நினைவுள்ள ஒருவரைக் காணும்போது, முன் சொன்னது போல, நம் சொந்த விருப்பு வெறுப்புகளின் காரணமாக, நாம் அவர் மீது கொண்டிருக்கும் ராகத்திற்கோ த்வேஷத்திற்கோ இசைந்த வகையில்தான் அவரைப் பார்க்கிறோமே தவிர, அவரை நம்மைப்போலவே எண்ணிச் சமரச நிலையில் பார்ப்பதே இல்லை.

அவருக்கென நம் உள்ளத்தில் ஏற்கெனவே நாம் தீர் மானித்து விட்டிருக்கிற குணாதிசயமுள்ள உருவத்தை முதலில் அவர் மீது ஏவிவிட்டுப் பின்னர்தான் பார்க் கிறோம். முன் தீர்மானத்துடன் இருக்கும் நம் த்ருஷ்டி, குருட்டுப் பார்வையாகி, நாம் ஏவிய உருவம் உலவும் அந்நபரின் பொய்த் தோற்றத்தைக் கண்டு விருப்போ வெறுப்போ கொள்கிறது. எனவே அந்நபர்க்குள்ள சொந்த குணாவஸ்தையோடு கூடிய உருவை, நம் அறிவு முன் தீர்மானத்தில் கட்டுண்டதின் காரணமாக, காண இயலாமல் ஆகிவிடுகிறது.

முன்தீர்மானத்திற் கிலக்காகாத நிலையில் முதலில் அறிவை நிலைநிறுத்தி, அமைதி நிலவிய பின்னரே ஒருவரை அணுகுவது என்ற அப்யாசத்தை மேற்கொள்ளும்போது, எதிர்கொள்ளும் நபருடைய கர்ம பரிபாகத்திற்கேற்ப அவருள்ளே வளர்ந்திருக்கும் விபூதி (உள் ஐச்வர்யங்கள்) நிலை புலனாகும்.

அப்படிப் புலனாகும் அவரது நிலை நம்மிடம் ஏற்கனவே நமது பூர்வ ஜன்ம புண்யவசத்தாலும், சாதனா பலத்தாலும்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நாம் அடையாத ஒரு நிலையாக இருக்குமானால், அவரிடம் உள்ள அவ்விபூதி நிலை நமக்கு அப்போது புலனாகிய காரணத்தாலேயே, நாமும் அந்நிலையை நம்முள்ளே வெகுச் சிறிய பிரயாசையுடனேயே தேடி அடைந்து ஸ்திரப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் கிடைத்துவிடும்.

இப்படி நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொருவரிடமும் நாம் இதுவரை அடைந்திராத புதுப்புது நிலைகளைச் சந்தித்து யாரும் கண்டுகொள்ளாத ஒரு தவமாக இயற்றியவாறே மேலும் மேலும் விபூதிகளை (சிறப்பு நிலைகளை) நமது சாதனைக் களஞ்சியத்தில் சேர்த்துக் கொண்டே போகலாம்.

களஞ்சியம் நிறைய, நிறைய பெரும் விபூதி நிலைகள் கிடைத்தோரை எதிர்கொள்ளும் வாய்ப்புக்கள், நம்முள்ளே சேர்ந்திருக்கும் விபூதிகளால் ஈர்க்கப்பெறும். பின்னர் நாம் 'சிவனே' என்றிருந்தாலே போதும். மேலும் மேலும் சேரும் விபூதிகளே நம்மை இயக்கி மேலும் அரிய விபூதிகளைச் சேர்த்துக் கொள்ளும்.

சுலபமாக எழுதியாயிற்று. ஆனால் எவ்வாறு அப்யாசத்தைத் தொடங்குவது?

விருப்பு, வெறுப்பு எனும் ரஜோகுணப்ரதான வேகமின்றி, காரணமற்ற நிலையோடு, ஸத்வகுணப்ரதான அமைதிநிலை நழுவாமல், யாரையும் விரும்புவது என ஏற்படுத்திக் கடைப்பிடிப்பது முதற்பாடம்.

'அன்பே சிவம்' எனும் இப்பழக்கம் ஸ்திரப்பட்டு நமது இயல்பாக முதிரும்போது, எவ்வித விபூதி ஒருவரிடம் ஒளி வீசுகிறது என்பதைத் தேட ஆரம்பிக்க வேண்டும். அப்படித் தேடுமுன் அவரிடம் நாம் செலுத்தும் அன்பு சமநிலை நழுவி ராகமாகிவிடாதபடியும் கண்காணித்தல் வேண்டும்.

 Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ப்ரேமை, ராகம், இரண்டுக்குமுள்ள வேற்றுமை என்னவென்றால், எவ்வித எதிர் நடவடிக்கையையும் எதிர்பாராது அன்பு செலுத்தும் ஆர்வத்தினால் மட்டும் பற்றுக்கொள்வதே ப்ரேமை.

மாறாக, எதிர் நடவடிக்கையை எதிர்பார்த்துச் செலுத்தும் அன்புதான், காம, க்ரோத, மத, மோக, லோப மாத்சர்யாதி ஆறு திராவக உணர்வுகளுக்கு ஊட்டம் அளிக்கும் நஷ்ட முதலீடான ராகம் என்பது.

அவரது விபூதிநிலை தெளிவாகப் புரிந்த மாத்திரத்திலேயே, நம்மிடம் அச்சிறப்பு நிலை மலர்ந்திராவிட்டால், ஏன் மலரவில்லை எனும் தாபத்தோடுச் சற்றுக் கடுமையாகச் சிறிதுகாலம் உழைத்தாலே போதும்; அவ்விபூதிநிலை நமக்கும் சொந்தமாகி விடும். பிறகு மேலும் சற்று உழைத்து அதை நிரந்தரப்படுத்திவிட்டு, வேட்டையைத் தொடரவேண்டும்.

இப்பயிற்சிக்கு நிலைக்களன்களாகப் புதிய, புதிய நபர்களைத் தேடிப் போகவேண்டும். அவர்களை அண்டும் பொழுது முன் தீர்மான எண்ணங்கள் முளைவிடாதபடி முன்னெச்சரிக்கையோடிருக்க வேண்டும். அவரிடம் உள்ள சிறப்பைக் கண்டு மலைப்படையக் கூடாது. சிறுமை அம்சங்கள் தட்டுப்பட்டால் அலட்சியம் கொள்ளக்கூடாது. மேலும் மேலும் நெருங்கி அவரது விபூதி நிலையைக் கண்டு பிடிக்க வேண்டும். கண்டுபிடித்து நம்மில் அதைத் தேடி அடைய வேண்டும், ஸ்திரப்படுததிக் கொள்ள வேண்டும்.

இவ்வித அரிய பயிற்சிகளை மேற்கொள்வது கடினமாகத் தோற்றினால், குறைந்த பட்சம், ராகம், த்வேஷம் இரண்டும் தோன்றாத திட நிலைக்கு நாம் உறுதியாய் வந்து சேரும் பயனாவது மலர்வதற்கு, அவ்வப்போது முடிந்த அளவு பாடு பட்டோமானால், நமமை பிறர் விரும்பி வரவேறகும் ஒரு உயர்வையாவது அடையலாம்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பின்னர் காலப் போக்கிலே அடுத்த பயிற்சிகளுக்கு ஈர்க்கப்பெறுவோம்.

நிச்சயமாக உடல் உறுதி வேண்டும் என எண்ணுவோர் முதலில் சில நிமிட உடற்பயிற்சியே மேற்கொள்கின்றனர். அதிலேயும் உடல் சளைக்கின்றது, ஒத்துழைக்காமல் இடக்குச் செய்கிறது. உள்ளம் அம்முயற்சியில் உரங்கொண்டதாக இருந்தாலோ, ஆயாசம், களைப்பு, சிரமம் இவைகளைப் பொருட்படுத்தாமல் பயிற்சி வலியுறுத்தி நடத்தப்பெறுகிறது. சில நாளில் குறுக்கீடுகள் வலுவிழக்கிறது. பயிற்சி வளர்கிறது. சில நிமிடம், பல நிமிடங்களாகி. மணிக் கணக்கில், காண்போர் வியக்கும் அளவில், உடற்பயிற்சி பெருகிவிடுகிறது.

இதைப் போலவேதான் உள்பயிற்சியும். ஊன்றி நின்றால் ஊட்டம் சேரும். நாட்டம் நிலைக்கும். நட்டம் நேர்வது நின்று போகும். இட்டம் இசைவது தொடரும். இறை எண்ணத்தைத் துணைகொண்டு இன்றே தொடங்கலாம் பயிற்சியை! நன்றே அடையலாம் நிறைவை! அன்பே சிவம்!

திரு மார்க்கம்

மனத்தைப் பிரும்மா எனக் குறிப்பிடுவதுண்டு. ஏன் அப்படிக் குறிப்பிடப்பட்டது என்று ஆராய்வோம்.

பிரும்மாவுக்கு நான்கு முகங்கள்.

இங்கே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்கு முகங்கள்.

நாம் ஜாக்ராவஸ்தையோடு (விழிப்பு நிலையிலே) காணும் ஜகம் (நாம் காணும் யாவும்), பிரும்மா பஞ்சபூதங்களைக் கொண்டு செய்த சிருஷ்டி.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நாம் கற்பனையால் காணும் பகற் கனவுலகம், பஞ்ச இந்திரியங்களுடன் மனம் செய்யும் சிருஷ்டி. கற்பனையால் புதுப் புது உருவத்தை, அமைப்பைச் சிருஷ்டி செய்கிறது, மனம். புத்தி அச்சிருஷ்டியின் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து இலக்கணம் வகுத்துச் சிருஷ்டிப் பொருளுக்கு மெருகேற்று கிறது. சித்தம் அதற்குச் சைதன்யத்துவத்தை அளிக்கிறது. அகங்காரமோ, மனம், புத்தி சித்தங்களின் கூட்டுழைப்புடன் சங்கற்பங்களை உருவாக்கி அச்சிருஷ்டிப் பொருளை இயக்குகிறது.

பிரும்மாவின் சிருஷ்டிக்கு, சங்கிலியெனச் சம்பவங்கள், முன்னேற்பாடான விதியால் நிர்ணயிக்கப்பட்ட வகையில், ஒரு நியதிக்குட்பட்டு, நடந்து கொண்டே போகும்.

ஆனால் மனத்தின் சிருஷ்டிக்கோ, அவ்வப்போது மாற்றங்களும், திருத்தங்களும் நிகழ்த்தப்பட்டு, ராகத்வேஷக் கலப்போடு இயக்குதல் நடைபெறும்.

அபாய காலங்களில் தேவர்கள் தங்கள் குறைகளைப் பிரும்மாவிடம் முறையிடுவார்கள். தன்னால் சீர்செய்ய முடியாதவொன்று என்று பிரும்மா தீர்மானிக்கும்போது தேவர்களை அழைத்துக் கொண்டு விஷ்ணுவிடம் செல்கிறார். விஷ்ணுவினாலும் இயலாது என்றால் அவர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சிவனிடம் செல்கிறார் அல்லது சக்தியிடம் சரணடைகிறார்.

அதே போல் நமது துன்பக் காலங்களில் மனம் நம்மை இஷ்ட தெய்வத்திடம் அழைத்துப் போய் சரணடைகிறது. இஷ்ட தெய்வத்தின் மூலமாய் தீர்வு கிடைக்காத நிலையில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கும் நமது கர்ம பரிபாகத்திற்கேற்ற அளவில் ஒருங்கிணைந்த முயற்சியோடு மாயா தத்துவத்தைச் சரண் அடைகிறது. நமது துன்பத்தி லிருந்து விடுதலை, மோக்ஷநிலைதான் என்றாகும் போது,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மாயா தத்துவம் நம்மை மாயையிலிருந்து விடுவித்துச் சித்சக்தியின் ஆதிக்கத்தைச் சரணடையச் செய்கிறது அந்தச் சரணாகதி எவ்வளவு தீவிரமாக, ஆழமாகப் பரிண மித்துப் பரிமளிக்கிறதோ, அந்த அளவுக்கு ஞானநிலை வளர்ச்சி எய்துகிறது. மேலும் மேலும் வளர்ச்சி முதிர்ந்து, ஈசுவரவசங்கல்பத்தின்படி காலம் வரும்போது 'முழுமை' சித்திக்கிறது.

மனம், "அஹம் பிரும்மா அஸ்மி" (என்னால் எதையும் செய்ய இயலும்) எனும் எண்ண மாயத்திலிருந்து விடுபட்டு புத்தி, சித்தம், அகங்காரங்களுடன் ஒருங்கிணைந்து, எதுவும் என் ஆதீனம் அல்ல, எதுவும் ஸத்யமுமல்ல, மித்தைதான், ப்ரும்மத்தைத் தவிர, என்ற முடிவோடு, 'அந்த ஸத்யத்தின் அம்சமே நான், அதனால் 'அஹம் ப்ரும்மாஸ்மி" (ப்ரும்மமே நான், வேறல்ல) என்ற தாரையாய், இடையறா த்யானமாய் சாதனை நீடித்து, நிலைப்பதே மனம் நிர்மலமாகி உயர் வெய்தும் மார்க்கம்.

தெய்வத்திற்கு உருவம் என்பது வியவகாரத்தால் கற்பிக்கப்பட்டு, மாயையின் லீலையால் தோற்றுவிக்கப் பெற்று வியவகாரத்திற்கேற்ப இசைவிக்கப்பட்ட வொன்றே அல்லாது அதன் இயல்பான நிலை அன்று. அதன் இயல்பு குணமே இல்லாத, உருவே இல்லாத செயலே இல்லாத ஒன்று. தெய்வத்திற்கு உருவம் என்பது, வியவகாரத்தால் காலத்திற்கேற்ப மாறுதலடைந்து கொண்டே போகும் ஒன்று; அது மனிதனின் மனோ வியாபாரத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு மலர்வது, நிலைபெறுவது.

ஸகுணப்ரும்ம உபாசனை (வடிவம் தந்து தெய்வ உருவை வழிபடுதல்) நம்மில் இயல்பாக யாவரும் கைக் கொள்ளும் ஒன்று. ஜபத்தை விட, தியானத்தை விட, உருவ வழிபாட்டிலே மனம் சுலபமாக ஈடுபாடுகொள்ளும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. காரணம், உருவ வழிபாட்டிலே

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உற்சாக மூட்டும் ரஞ்சகமான கட்டங்களும், விதவித வழிபாட்டு அங்கங்களும் இணைந்து, அலைபாயும் இயல்புள்ள மனத்திற்குப் பல கோணங்களிலிருந்தும் கவர்ச்சியோடு அமைவதால், மனம் ஸகுண உபாசனையில் அதிகம் கட்டுப் பட்டு, சித்தம், புத்தி, அகங்காரம் இவைகளை நன்கு பிணைத்துக் கொண்டு, ஈடுபாடு கொள்கிறது.

இந்த ஈடுபாட்டின் ஆழத்திற்கேற்பவும், நமது உண்மையான நாட்டத்தின் முனைப்பிற்கேற்பவும், நீண்ட நாளைய சாதனைக்குப்பின், நாம் விரும்பி வழிபடும் தெய்வஉரு கனவில் தோன்றுகிறது. சிலகாலத்திற்குபபின் உபாசனை மேலும் உரம் பெறும்போது, விழித்திருக்கும் போதும் அத்தெய்வஉரு சில சமயங்களில் ஒளிர்கிறது. பின்னர் நமது சாதனையின் வலுவிற்கேற்ப நாம் விரும்பும் போதெல்லாம் அவ்வுருவைத் தரிசனம் செய்வது சாத்திய மாகிறது. 'பாவனு தார்ட்யத்தால்'(திடமான பாவனை) இது கிடைக்கிறது. திருவள்ளுவர் பெருமான்,

> "எண்ணிய எண்ணியாங் கெய்துவர்
> எண்ணியர் திண்ணியராகப் பெரின்'

எனச் சுட்டியிறக்கிறுர்.

மனத்திற்கு அப்படியொரு ஆற்றல் இருக்கிறது. தான் பற்றிக் கொண்ட ஒன்றை, சித்தம், புத்தி, அகங்காரங்களின் கூட்டுழைப்புடன், நினைத்து, நினைத்து, நினைக்கும் ஒன்றினுக்கு 'சைதன்யத்துவத்தை' (உயிரோட்ட முள்ள நிலையை), அடைவிப்பது. இது நமது பூர்வ புண்ய வசத் தால், வாசனைகளின் காரணமாக மனத்திற்குக் கிடைக்கும் ஒரு நல்லாற்றல்.

இந்த நல்லாற்றல் காரணமாக ஸகுண உபாசனையில் நல்ல முதிர்ச்சி கிடைத்து, உயர் நிலை பெற்றபின், அந்த ஸகுண உபாசனையைக் கை விடவேண்டும் என்று ஆன்ருேர்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சொல்லியிருக்கின்றனர். அதாவது நாம் சாதனை செய்து முன்னேற்றம் கண்ட நிலையையே கைவிடச் சொல்கின்றனர், வழியையே மறக்கச் சொல்கின்றனர்.

ஏன் அப்படிச் செய்ய வேண்டும், அது சாத்தியமா எனும் ஆராய்ச்சிக்குச் செல்வோம்.

ஸகுண உபாசனையில் முதிர்ச்சி பெற்ற அநேகரில் சிலருக்கு ஸத்வகுண முனைப்பின் காரணமாக நிர்க்குண உபாசனை தொடங்குவதற்கான இயல்பான பக்குவம் வந்து விடும். இதுவரை தாம் அடைந்த வளர்ச்சி ஒருவிதப் பயிற்சியின் தேர்ச்சியே எனத் தெளியும் மனநிலைக்கு வந்து சேர்ந்திருப்பர். ஸகுண உபாசனையைக் கைவிடவேண்டும், வேறு மார்க்கத்தைத் தொடும் கட்டம் வந்து விட்டது என அறியும்போது அதிகப்பிரயாசையின்றி, குழப்பமடையாமல், நிதானமாகத் தமது வழியை மாற்றிக் கொள்ள ஆரம்பிப் பார்கள். இவர்கள் ஸத்வ குணப்ராதனர்கள் ஆனதால், இவர்களது வளர்ச்சிக்காலங்களில், நிர்க்குண உபாசனையைப் பற்றி முன் கூட்டியே அறிந்து கொள்ளும் வாய்ப்புக்களும், அந்தப் பாதை பின்னால் வரப் போகிறது எனும் எதிர் பார்ப்பும், அதற்கு மன இசைவும் படிப்படியாக, வெளிப் படையாக அறியப்படாமல், உள்ளே மலர்ந்து கொண்டே இருக்கும். உரிய காலம் வந்தவுடன் நிர்க்குண உபாசனைக்கு இயல்பாக ஈர்க்கப்பட்டு முன்னேற்றம் கிடைக்க ஆரம் பிக்கும். ஞானத்தை அடையும் பயணம் துரிதப்படும்.

மற்ற ரஜோ குணப்ரதான ஜீவர்களுக்கும், சில தமோ குணப்ரதான ஜீவர்களுக்கும், ஸகுண உபாசனா காலத் திற்கும், நிர்க்குண உபாசனா தொடக்கத்திற்கும், அவரவர் கர்ம பரிபாகத்திற்கேற்ப, நீண்ட, சற்றுக்குறைந்த, அலலது மேலும் குறைந்த, இடைவெளி இருந்தே தீரும். இந்த இடைவெளிக் காலத்தில், பிராரப்த வசத்தால், சந்தேகங்களும், குழப்பங்களும், ஆயாசமும் வந்துதான்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தீரும். அனுபவித்துத் தாளுகவேண்டும். இவர்களுக்கு வழிகாட்டியின் உதவி இன்றியமையாத ஒன்று. அது இவர்களது சாதனை பலத்திற்கேற்ப சீக்கிரமாகவோ, தாமதமாகவோ நிச்சயமாகக் கிடைக்கும். பின்னர் முன்னேறி விடுவார்கள்.

ஸகுண உபாசனையில் கிடைக்கும் முன்னேற்றம், பிரமாணத்தை ஆதாரமாகக்கொண்ட வழியால் அடையாமல், அனுமானத்தை ஆதாரமாகக்கொண்ட வழியால் அடைவது. இவ்வளர்ச்சியின் கண் தோற்றும் ஒரே மாதிரி இல்லாத, வெவ்வேறு விதமான அனுபவங்களை, விளைவுகளை, சான்ருகக் கொண்டு பார்த்தால் இவ்வபிப்ராயத்தின் நியாயம் தெளிவாகும். ஸகுண உபாசனையில் கிடைக்கும் முன்னேற்றத்தின் திறன், நம்மை அந்த அளவு வளர்ச்சிக்குக் கொண்டு வருவதோடு முடிந்து விடுகிறது. அதற்கும் மேல்நிலைக்கு நாம் செல்லவேண்டிய பக்குவம் வரும்போது, வழியை மாற்றி அமைத்துக் கொண்டாலன்றி, அடுத்த நிலையை எட்டுவது சாத்தியமல்ல.

அப்படி வழியை மாற்றிக் கொள்ளாமல் முன்னதிலேயே தொடர்ந்து தீவிரமாக ஆழ்ந்து மேலும் மேலும் உழைத்தால், அனுமானத்தில் வளர்ந்த முன்னேற்றம் ஆனதால், மேலும் அனுமானத்தையே நம்பி அந்த வளர்ச்சி போய்க் கொண்டேயிருக்கும்—பயில்வானின் உடல் தோற்றம் வளர்வது போல். அளவு பெரிதாக ஆகுமே ஒழிய ஆன்மிக ஒளியைச் சேர்க்காது. காரணம், ஆன்மீக ஒளி சேர்வதற்கு, பிரமாணத்தைக் கைக் கொள்ளாமல் அனுமானத்தைக் கைக்கொண்டு உழைத்ததுதான்.

இந்த இடத்தில் வழிகாட்டியின் உதவியும், விளக்குந் திறனும்தான் துணை நின்று தெளிவு பெறச் செய்யும். அப்யாசங்களோ அல்லது அனுமானங்களோ அல்லது புத்தக அறிவோ இந்த நிலையில் பயன்படாது. உண்மையான நிலையும், உள்ளொளியும் கிடைத்த ஆன்ருேர்க்குத்தான் இந்த இடத்தில் வழிகாட்டியாகி நம்மைக் கடைத்தேற்றும்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வலுவுண்டு. வேறெதற்கும், வேறு யாருக்கும் அத்திறன் கிடையாது.

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வாழ்க்கையின் சம்பவம் நமது ஆராய்ச்சிக்குத் தெளிவு தரும் நிலையில் ஒளிர்கிறது. ஸ்ரீ தோதபுரி சுவாமிகளிடம், பகவான், தமக்கு அம்முழுத் திருப்தி நிலையெய்ய முடியாமல் இன்னும் ஏதோ பாக்கி இருப்பது போலவே தோற்றுகிறதே என விசனித்து வருந்தினர். அன்னை, காளியாக, நேரில் வந்து சம்பாஷிக்கும் பெரும் பேற்றைப் பெற்றிருந்த பகவான் ராமகிருஷ்ணரே அவ்வாறு ஏதோவொரு பற்றுக் குறையைத் தன்னுள்ளே உணர்ந்தாரென்றால் அதற்குக் காரணம் அனுமான ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஸகுண உபாசனையின் இயல்பான தரம்தான். அப்போது ஸ்ரீ தோதபுரி சுவாமிகள், ராமகிருஷ்ணரை அந்த ஸகுண உருவை அறவே மறக்கும்படி உபதேசித்து, நிர்க்குண உபாசனையை வலியுறுத்தினர். அதன்படியே சாதனை செய்த பின்னர் பகவான் ராமகிருஷ்ண பரம்ஹம்சர் 'முழுமை'யை முற்றாக உணர்ந்து அடைந்தாரென்று சொல்லப்படுகிறது.

இவ்விதமாக, அடைந்ததை அப்புறப்படுத்திவிட்டு அரிதாக ஒரு வழியை மேற்கொண்டு ஆன்மஒளி பெறுவ தென்பது, எல்லோரும் எட்டக்கூடிய ஒன்றல்ல. பகவான் ராமகிருஷ்ணர் போன்ற அவதார புருஷர்க்கு மட்டுமே சாத்தியமான ஒன்று, அது.

மற்ற யாவருக்கும், பொதுவாக, ஸகுண உபாசனையின் உச்சக்கட்டத்தில் பிறவி முடிந்து, மறுபிறவியில் பூர்வ ஜன்ம புண்ய பலத்தால், யாரோ ஒரு மகாபுருஷனின் கருணை பூர்வமாய் வழிகிடைக்கப் பெற்று நிர்க்குண உபாசனை வந்து சித்திக்கும்.

இந்த ஜன்மத்திலேயே அதை அடைய வேண்டு மென்றால், ஸகுண உபாசனையின் உச்சத்திலே, கற்றது

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

யாவையும் மறந்து, கிடைத்த எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு, மனத்திற்கு நிர்க்குண உபாசனையில் பிடிப்பை உண்டாக்கி, அயராமல் உழைத்து, ஆயாசமுறுமல் காத்திருந்து, ஆழ்ந்து ஈடுபாடு கொள்ள வேண்டும். ஒரு சமயம் இந்த ஜன்மத்தில், ஸித்தி வராமற் போய்விட்டாலும் அடுத்த ஜன்மத்தில் தானுகவே, வழிகாட்டி என்று ஒருவர் வராமலே, ஞானியாகி விடலாம், பொறி தட்டும் கால அளவிலே — ரமணரைப் போல், நமது விடயபுரம் மகானைப் போல்.

ஸகுண உபாசனையிலிருந்து நிர்க்குண உபாசனைக்குப் போக வேண்டுமென்ருல், ஒன்று மனம் அடங்கி, நாமே புதிதாக யாவற்றையும் துவங்க வேண்டும் அல்லது நமக்கும் ஸ்ரீ தோதபுரியார் போல் யாரேனும் கிடைக்க வேண்டும்.

பக்தி மார்க்கத்தில் மனத்திற்கு வலுவான ஸ்தானம் உண்டு. ஞான மார்க்கத்திலோ மனத்திற்கு அந்தஸ்தில்லாத அடிமை நிலைதான் சொந்தம்.

அதனுல்தான் மனத்திற்குத் துவக்கத்திலிருந்தே ஒரு சலுகையில்லாத, சொன்னபடி நடக்கவேண்டிய ஏவலாள் நிலையை மட்டுமே தந்து இயங்கிச் செல்ல வேண்டும்.

மனம் என்பது, முற்றுக வெற்றி கொள்ளப்பட்டு, முடிவாக நம்முள் ஐக்கியப் படுத்திக் கொள்ளும் பாதையில் கொண்டு வராதவரை, நமக்குப் பிறவி பாக்கியாகி நிற்கும் நஷ்ட நிலைக்குத்தான் முதலீடான பொருளாக அமையும் தன்மையுடையது. அதனுல்தான் ஆன்ருேர் தவிர்க்கக்கூடா மந்திரமாக 'மனமே, நீ அடங்கு' என்ற இடையரு விழிப்பிலே வாழ்ந்தனர்.

இந்த இடத்தில் சொல்லிய விஷயங்களை உருவகப் படுத்திச் சொல்வதானுல், ஸகுண உபாசனையின் பயன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வங்கியின் நடப்புக் கணக்கின் தரத்தையொத்தது. உழைத்த அளவுக்குச் சேரும். எடுத்த அளவுக்குக் குறையும். பின் உழைத்தால்தான் வளரும். எடுத்தால் மறுபடி குறையும்.

ஆனல் நிர்க்குண உபாசனையின் பயன், ஈடிணையில்லா மல் தழைத்து வளர்ந்தோங்கிவிட்ட ஒரு மாபெரும் லாபகர மான ஸ்தாபனத்தின் பங்குகளைப் போன்றது. முதலீடு அப்படியே இருக்கும். ஆனல் அந்தப் பங்குகளின் லாப வருமானமோ, தர்மஸ்தாபனத்தையொப்ப, நாம் நினைக்கும் நல்ல காரியங்கள் யாவற்றுக்கும் தாமே போய் இணைத்துக் கொண்டு உதவும்.

இதுதான் இரண்டு உபாசனைகளுக்கும் ஏறத்தாழப் பொருந்தக்கூடிய உதாரண, உருவக விளக்கம்.

திரு மோனம்

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நாற்பரிமாண முள்ள சிமிழில் ஜீவனை அடைத்து, சஞ்சித, பிராரப்த பலனை அனுபவிக்கும் நிமித்தம் வாசனைகள் சகிதம் பிறவி தரப் பெறுகிறது.

மனம், வாசனுபலத்துடன் நம்மைப் பிராரப்த, சஞ்சிதப் பலனை அனுபவித்துத் தீர்க்கக் கருவியாக இயங்குவதோடல் லாமல், அது அகங்காரத்தைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஆகாம்யத்தை இருப்புச் சேர்க்கவும் முனைகிறது.

இருவினைக் கணக்கு ஒருபுறம் தீர்ந்து கொண்டிருக்க, மறு புறம் வேறொரு புது இருவினைக் கணக்கு உருவாகி வளர் வதைத் தடுத்துவிட, மனதிற்குத் தன்னிச்சையாய் இயங்கும் வாய்ப்பின்றி அதை நம் கண்காணிப்பிலே, நம் அனுமதி யோடு மட்டும் செயல்படும் கட்டுப்பாட்டை அமலாக்க வேண்டும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

மனம் என்பது எதிலேனும் திளைத்தவாறிருக்கும் இயல்பை அடிப்படைக் குணமாகக் கொண்டது. சுகமோ துக்கமோ எதையேனும் ஒன்றைத் துய்த்தவாறே இருக்கும். அமைதியாக, சாந்தமாக அல்லது சும்மா இருக்க அதற்கு அறவே தெரியாது. சிறு பிள்ளையைப் போல் நமது கட்டளைகளைப் பொருட்படுத்தாமல் வாசனைகளின் ஆதிக்கத்திற்கே இணக்கமாய் இருந்து கொண்டிருக்கும்.

வாசனைகளின் ஆதிக்கத்தில் மனத்திற்கு இருக்கும் பிடிப்பைத் தளர்த்தி, நமது ஆதிக்கத்தில் பிடிப்பை ஏற்படுத்தி நிலைநிறுத்தப் பெருமுயற்சி செய்வதுதான் நம் தலையாய கடமை.

மனம் அகங்காரத்தின் தோழனாக இருந்து கொண்டு நம்மை ஆட்டிவைத்தவாறே இருக்கும். நாம் அதனுடைய ஆதிக்கத்தில் இருக்கும் நிலையினை அவ்வப்போது புதுப்பித்து ஸ்திரப்படுத்திக் கொண்டே இருக்கும்.

இவ்விரு அடங்காப் பிடாரிகளையும் நம் வசப்படுத்த, இவற்றினும் குறைவான வலுவுள்ள சித்தமும், இவற்றினும் சற்று அதிக வலுவுள்ள புத்தியுமே நமது பக்கபலம். சித்தம் ஒரு இரண்டும் கெட்டான் இயல்புடையது. மனமும் அகங்காரமும் அதை வசப்படுத்திக் கொண்டுவிட்டால் அந்தப் பக்கம் சாய்ந்துவிடும். புத்தி அதை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டுவிட்டால் இந்தப் பக்கம் சாயும்.

அப்படி மனமும் அகங்காரமும் சித்தத்தைச் சுலபமாகத் தம் வசப்படுத்திக் கொண்டுவிட்டாலோ, புத்தி பக்கபலமில்லா நிலையில், பெரும்பான்மை பலத்தால் ஈர்க்கப்பட்டு இந்நான்கும் (மனம், அகங்காரம், சித்தம், புத்தி) சேர்ந்து ஆட்டுவித்தபடி ஆடி, இருவினைக்கணக்கினை ஈன்றெடுத்துக் குவிக்கும் ஜன்மமாகிய ஜடத்தன்மை நிலைக்குத் தாழ்ந்து போவோம்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அப்படியான தாழ்வு நிலையை அடையாமல், இந்நான் கினுக்கும் அதிகாரியாகப் பரிமளிக்கவே, நமக்கு ஆன்றோர் களால், ஜபம், தவம், தியானம், யோகம் என்ற வழிமுறை கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன.

முதலில் நாம் நாமாக நிலைப்பதற்கு, அலுக்காமல் சலிக்காமல், ஓயாத உழைப்பாகப் பெரியோர் தந்த பயிற்சி களை மேற்கொண்டுதானாக வேண்டும். இதுவே முழு நேர வேலையாகி விட்டால், நம் வாழ்க்கைத் தேவை எப்படிப் பூர்த்தியாவது எனும் கேள்விக்குப் பதில்—இதனால் அதுவும் அதனால் இதுவும் பாதிக்கப் பெறாத ஒரு வரையறையுள்ள தொகுப்பை அவரவர் சூழ்நிலைக்கேற்ப அவரவர் தான் நிர்ண யித்துக் கொள்ள வேண்டும். சிந்தனை சக்தியுள்ளோர்க் குத்தான் அது சாத்தியம்.

மற்றவர்கள், சிந்தனைசக்தி முதிர்ச்சி பெறும்வரை பிரார்த்தனை பலத்தைத்தான் துணை கொள்ள வேண்டும்,

உயர்நிலை எய்திய பெரியோர் என்னென்ன வழிகளில் லாம் சென்று, எவ்வாறெல்லாம் உழைத்து அரும்பாடுபட்டு வெற்றி பெறும் மார்க்கங்களையும், வெற்றிக்கு இடையூறாக இருக்கும் தடைகளை வெல்லும் வழிகளையும், தம்மையே முழுமையாகப் பணயமாக்கித் தியாகம் செய்து, நமக்குப் பயன்படுவதற்காகவே விட்டுச் சென்றிருக்கின்றனர்!

அவைகளின் இணையிலா மதிப்பை உணராமல், நாம் இந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரக் கூட்டில் அடக்கமாகி ஒரு புழுவுக்குச் சமானமான வாழ்வு வாழ்வது நியாயமா?

பெரியோர் எவ்வாறெல்லாம், மனத்தையும் அதன் கூட்டாளிகளான அகங்காரம், சித்தம், புத்தி இவைகளையும் அடிமை கொண்டனர் என்று சற்றுக் கவனிப்போம்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நம் வாழ்க்கை ஒரே நேரத்தில் இரண்டு இடத்திலிருந்து இயக்கி வைக்கப்படுகிறது. மின்சாரத்தில் 'பாஸிடிவ்' 'நெகடிவ்' என இரண்டு நிலேகள் இருப்பதைப் போல். அப்படி நடப்பதை உள் இயக்கம், வெளி இயக்கம் என இரண்டு பெயரால் அழைக்கப்படும்.

உள் இயக்கம் என்பது ஓயாமல் ஈசுவரசங்கல்பத்தை உருவாக்கிக் கொண்டே இருக்கும் உலேக்களம். இன்னின்ன நிகழ்ச்சிகள், இன்னின்ன கட்டத்தில் இன்னின்ன உணர் வோடு இன்னின்ன ஜீவன்களால் இன்னின்ன பயன் விளேய இன்னின்ன விதமாக நிகழ்த்தப்பட்டு இன்னின்ன ஜீவன்களே சென்றடைந்து இன்னின்ன பயன்கள் அங்கே பரிணும மடைய வேண்டும் எனும் திட்டவட்டமான, பிசிரற்ற, வழுக்கலுக்கோ, தவற்றுக்கோ, மாறுதலுக்கோ, இடமே யில்லாத உருவோடு சமைக்கும் உள் இயக்கமே ஈசுவர சங்கல்பம் மலரும் விநோதப் பாங்கு.

வெளி இயக்கம் என்பது மனிதன் முழுமையான அறியாமை இயல்புடன், நிலேக்களமாகி, ஓயாமல் இயங்குதல். ஈசுவரசங்கல்பத்தை, தனது சங்கல்பம் எனும் எண்ண மாயத்தோடு, அத்திட்டத்திலுள்ள எந்தக் கோணமும், நோக்கமும் சற்றும் பிசகாமல் நடந்தேறுவதற் கேற்ப இயங்குவதை இயக்குவதே வெளி இயக்கம்.

உள் இயக்கம் சித்சக்தியின் பிரபாவத்தால் நடை பெறுகிறது.

வெளி இயக்கம் மகாமாயையின் மறைப்பால் நடை பெறுகிறது.

சித்சக்தியின் பிரபாவம் ஒளி என்ருல், மகாமாயையின் மறைப்பை இருள் எனலாம். அல்லது நிலேக்கண்ணுடியின் முன்னே நிற்கும் உருவுக்கு நேர் எதிரிடையான கோணங்களே அக்கண்ணுடியில் தோற்று வதையொப்ப, எனவும் சொல்லலாம். இரண்டிலும் ஒன்றுதான்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இருக்கிறது, ஆனால் நிலைகள் வேறு. இருநிலைகளும் அந்த ஒன்றிலேதான் பற்றி நிற்கிறது.

இவ்வளவு சொல்லியாயிற்று. இதிலிருந்து என்ன வெளிப்பட்டது? குழப்பம் தவிர வேறெது வெளிப்படும்? சொல்லித் தெரியவைக்க முடியாததை எப்படிச் சொல்லால் வெளிப்படுத்த முடியும்?

அதனால்தான் சொல்லாமலிருக்க (பேசாமலிருக்க)ப் பழக வேண்டும். நினையாமலிருக்கப் பழகவேண்டும். அப்படிப் பழகி அதுவே நிரந்தரமாகி, மோனமாகச் சித்தித்தும் விட்டால், அப்போது எல்லாம் தெரியும், யாவும் புரியும்.

அந்த மோனம் சித்திக்கும் இடம், உள் இயக்கத்திற்கும் வெளி இயக்கத்திற்கும் இடையேயுள்ள மோனவெளி. அங்கு சென்று நிலைத்தால் மோனம் சித்தித்துவிடும். அங்கு தான் காலம், இருள், ஒளி யாவும் ஒரே தத்துவமாய்த் தன்மயமாக இருக்கிறது.

அந்த இடத்தை எட்டிப் பிடிக்கும் முயற்சிதான் எல்லாச் சாதனைகளும். யோகங்களும், தவங்களும், வழிகளும்.

அது எப்படி என்று படிப்படியாகச் சிந்திப்போம்.

முதலில் ஆண்டவனைத் தரிசிக்க ஆலயம் செல்வது எனும் நியதியைக் கைக் கொண்டோம். ஆலயம் சென்று வரும் பழக்கத்தில் மனம் ஈடுபாடு கொண்டது.

பின்னர் வீட்டிலே பூஜைகள் போன்றப் பலவித சத்கர்மாக்களைச் செய்யும் நியதிகளை மனத்திற்கு அறிமுகப் படுத்தினோம். அதற்கும் மனம் இணங்கி வந்தது.

பின் ஸ்நானம், ஆசாரம், சீலம், நோன்பு, சில கட்டுப் பாடுகள் இவைகளை மனதுக்கு வற்புறுத்தினோம். என்னதான்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.
கிடைக்கிறது பார்ப்போமே என மனம் ஒருவாறு இணங்கிற்று.

மேலும், தானம், தருமம் இப்படியாகப் பிறர் பங்கு கொள்ளக்கூடிய சில கர்மாக்களை அறிமுகப்படுத்தும்போது, அகங்காரத்தைத் துணை சேர்த்துக் கொண்டு, இக்கர்மாக் களின் மூலம் கிடைக்கும் புகழ்ச்சிக்காக ஒத்துழைக்க ஆரம் பித்தது, மனம்.

மனம் என்பது தன்னியல்பாக நல்லதையோ அல்ல தையோ செய்ய வல்லதல்லவாயினும், நமது முன் செயல் களினால் வளர்ந்து கொண்டே போகும் வாசனைகளின் சேர்க்கையினாலேயே, நாம் ஈடுபடும் செயல்களில் இணங்கியோ முரண்டியோ நடந்து கொள்ளும் தன்மை அதற்குச் சொந்தமாகி விடுகிறது.

நாமும் அறியாமல், மனம் தானும் அறியாமல் வாசனைகளின் சேர்க்கையால் கிடைக்கும் தனித்தன்மையைக் கொண்டே நமது நன்முயற்சி யாவற்றையும் விரயமாக்கும் உடன் பிறந்த எதிரியாகவும் மாறி விடுகிறது, மனம்

இப்படி உடனிருந்தே கொல்லும் வியாதியாக மனம் மாறிவிட்டபின் மீட்சிக்கு என்னதான் வழி?

மனத்தோடு நேரடிப் போராட்டத்தைத் தொடங்குவது தான் ஒரே வழி. அந்தப் போருக்கான கவசம் எது, ஆயுதம் எது?

தேவைகளை ஒடுக்கிக் கொண்டே போனால்தான் மனத் தின் ஆசை காட்டி. மோசம் செய்யும் வலையில் சிக்காமல் தப்பலாம்.

சலியாமல் உழைப்பதை மேற்கொண்டு, சோம்பேறித் தனத்திற்கு இடங்கொடாமல் கண்டிப்புடன் நடக்க

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஆரம்பித்தால்தான், ஓயாமல் சுகத்தையே நினைவுபடுத்தி மனம் நம்மை ஏமாற்றும் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

உடல் தளர்ச்சியுறுமானால், பழிவாங்கும் எண்ணத்துடன் முனைவது போல் வைராக்கியத்தை மேற்கொண்டு, மேலும் அதிகமாக உழைக்க வேண்டும். அப்போது வைராக்கியத்தைக் கண்டு மனம் சற்று அச்சம் கொள்ளத் துவங்கும். அவ்வச்சம் காரணமாக, தோல்வி கண்டது போல் நடிக்கும். நாம் அதன் நடிப்பிலே மயங்கி, மனம் வழிக்குவந்து விட்டது என எண்ணி மெத்தனமாக இருந்து விட்டோமானால், நமது வைராக்கியம் தளரும். மனம் பழையபடி மரத்திலேறிக் கொள்ளும், வழக்கம் போல் நம்மை உலுக்க.

அது நடித்தாலும் அல்லது உண்மையாகவே திருந்தினாலும், அதை இறுதிவரை நம்பாத உறுதி நிலைபெறும் போதுதான், வைராக்கியம், கவசம் என்கிற தகுதியிலிருந்து ஆயுதம் என்கிற உயர்வை எய்தும். அப்போது மனம் நிச்சயமாகவே பயப்படும். ஆனால் வாசனைகளால் கட்டுண்ட இயல்பிலேயே அது வாழ்ந்து கொண்டிருக்கும், நம்மை நேரம் பார்த்து வீழ்த்த.

அதற்காக, இந்தப்பாழும் மனம் நம் முற்காலங்களில் ரசித்துச் சுவைத்தவற்றைப் பற்றித் திரும்பத்திரும்ப ஒன்றை விட்டு ஒன்றாக ஓயாமல் நினைவுபடுத்தியவாறிருக்கும், நாம் கொஞ்சமேனும் உழைப்பிலிருந்து இடைவெளி ஏற்படுத்திக் கொள்ளும் போது. அந்த இடைவெளியையும் நாம் ஏதாவது ஒரு பயனுள்ள வேலையை எடுத்துக் கொண்டு இட்டு நிரப்பி மனமும் நாமும் தனித்து அன்யோன்யமாய் இருக்கும் வாய்ப்பு நேராமல் அதிகக் கண்காணிப்புடன் இயங்க வேண்டும்.

மனம் புலம்புவதைக் கேட்க நேரமே இல்லாமல் நம்மை நாம் நிரப்பிக் கொள்வதோடு, மனத்தோடு கூட்டுச் சேர்ந்து சில பயிற்சிகளை மேற்கொள்ளவும் ஆரம்பிக்க வேண்டும். அப்போதும் மனம் தனது கை ஓங்க அநேகம் சூழ்ச்சிகளைக் கையாளும். வாசனைகளின் இருப்பிலிருந்து எத்தனையோ

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

விஷயங்களை எடுத்து ஆதாரம் காட்டி, வாதித்து, நமது வரிசைக் கிரமமான பயிற்சியினை நுனிப்புல் மேயும் முயற்சியாக மாற்ற, சுலபமான, சிரமமற்ற, குறுக்கு வழிகளைப் பற்றிப் பேசிப் பொழுதை விரயமாக்கும். அந்தச் சமயங்களில் அதனோடு நாம் பிணங்கி விலகி, இறை எண்ணத்தில் அடைக்கலம் தேடிப் பிரார்த்தித்துக் கொண்டே போக வேண்டும்.

மனம் அந்தச் சமயங்களில் அநேகம் மாறுவேஷங்களிட்டு நம்மை வசப்படுத்திக் கொள்ள முயற்சி செய்யும். ஆசான் போலப் பேசும். அன்னை போலப் பரிவு காட்டும். நண்பனாகி உறவாடும். குழந்தையாகி மழலை பேசியும் பார்க்கும். ஓயாமல், சலியாமல் அநேகம் விதமாய்ப் பேசும். சற்று செவிசாய்த்தோமானால், நம்மை அது எங்கோ அழைத்துப் போயாகி விட்டிருக்கும். நமக்குச் சரியான உணர்வு வந்தவுடன் புரியும், அது நம்மை நம் வழியிலிருந்து எவ்வளவு தூரம் விலக்கி அழைத்து விட்டதென்று. அப்போதே அதனை அங்கேயே 'அம்போ'வென விட்டுவிட்டு நாம் ஓடிவந்து விடவேண்டும், திரும்பிப் பாராமல். திரும்பிப் பார்த்தால் மோகினி பிசாசைப்போல் மயக்கித் திரும்பத் தன்னிடம் ஈர்த்துக்கொண்டு விடும். ஓடி வந்த வேகத்திலேயே இறை எண்ணத்தில் அடைக்கலம் தேடிப் பிரார்த்திக்க வேண்டும்.

நாம் அதை விட்டு ஓடிவந்தோமேயொழிய, நம்மை விட்டு அந்தப் பாழும் மனம் எங்கே போகும்? பின்னாலேயே வாலைக் குழைத்தவாறு வந்து நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு நிற்கும், மறுபடி, நமது வைராக்கிய எலும்பு, எங்காவது சிதறி ஒடிந்து ஒரு சிறு துகளாகவேனும் விழாதா கவ்விக்கொள்ள என ஏங்கியவாறு.

நம்மை நாம் முழுமையாக ஒன்று சேர்த்து, தேர்ந்த குருடனாய், தீர்ந்த செவிடனாய், ஒய்ந்த ஊமையாய் மாறி அதனோடு பழக ஆரம்பித்து வைராக்கியத்தை மேலும் வலுவுள்ள ஆயுதமாகப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும்.

Funding by IKS-MoE

ஒருவர் பேசும்போது மற்றவர் கேட்டுக்கொண்டிருந்தால்தான் காதில் விழும். மற்றவரும் இடைவெளி விடாமல் பேச ஆரம்பித்தால், முன்னவர் பேச்சு காதுகளில் விழாது. அப்படி மனத்தின் ஓயாப் புலம்பல் காதில் விழாமலிருக்கவே ஜப உச்சாரணம் துணை செய்யும். மனம் எப்போது வாலாட்டினாலும் உடனே ஜபம் செய்வதைத் தீவிரப் படுத்தவேண்டும். இப்படிச் சலியாமல் ஜபம், தியானம், யோகம் என்று மாற்றி மாற்றி இடைவெளி தராமல் சாதனை செய்வதன் மூலம் மனத்தை மௌன மடையச் செய்வதுதான் இத்தீவிர உழைப்பின் நோக்கம்.

நீண்ட உழைப்புக்குப்பின் அந்நோக்கம் நிறைவேறும் போது மனமும் மௌனத்தின் சுவையை நன்குணர்ந்த நிலையெய்தி இருக்கும். அப்போது அது வாசனைகளின் தேய்வு, தொய்வு காரணமாகப் பதப்பட்டுப் பக்குவம் பெற ஆரம்பித்திருக்கும்.

இந்தக் கட்டத்தில் தான் மகாமௌனமென்னும் மோன வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். சிறு பையனை முரண்டி ஓடிவிடாமல் கையை இறுகப் பற்றிக் கொள்வதைப்போல் மனத்தை அடக்கிப் பிடித்துக் கொண்டு ஜபஉச்சாரணத்தையும், ஜபமனனத்தையும், ஜபத்தியானத்தையும் அறவே நிறுத்திவிட்டு ஊமையாகி, செவிடாகி, குருடாகி த்யானத்தில் அஹம் பிரும்மாஸ்மி (பிரும்மமே நான் அதனின்று வேறுபட்டவனல்ல எனும் திடமான தெளிவு) எனும் உணர்வை மட்டும் நிறுத்தி ஊன்றி நிற்க வேண்டும்.

மனத்தை அழுத்திப் பிடித்திருக்கும் பிடியையும் தளர விடக் கூடாது, உணர்வைத் தவிர எஞ்சிய யாவும் உறங்கிய நிலையையும் நழுவவிடக்கூடாது. அவ்வுணர்விலேயே லயித்து நிற்க, நிற்க, வெளி இயக்கத்திலிருந்து விடுபட ஆரம்பிப்போம்.

அப்போது உள் இயக்கத்தின் ஈர்க்கும் தன்மை நம்மை ஆகர்ஷிக்கும். அந்த ஆகர்ஷணத்தால் வேகமாக ஈர்க்கப்

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

படும் அளவுக்கு நமது ஊன்றுதல் வலுவின்றி இருந்தால், வேகமாக ஆகர்ஷிக்கப்பட்டு, அதே வேகத்திலேயே வெளியே தள்ளப்படுவோம். பின் மறுபடி நிறைய உழைத்துத்தான் முன் வந்த இடத்தைத் திரும்பப் பிடிக்க முடியும்.

அன்றி, அந்த ஆகர்ஷண சக்தி நம்மை ஈர்க்கும்போது உணர்வுத் திறத்தால், எளிமையாக இராமல் கடினமாக மாறுவோமானால், ஈர்ப்புக்கு மெல்ல மெல்ல இலக்காகி அப்பாலும் இல்லாத, இப்பாலும் இல்லாத உப்பாலாக ஒளிரும் அந்த இடைவெளிக்கு, மோனவெளிக்கு, வந்து சேருவோம். அப்போது நமது சாதனுபலம் அத்தனையையும் ஒருங்கு திரட்டி, அங்கேயே, அந்த இடத்திலேயே நிலைக்கும் முழு முயற்சியிலேயே அழுந்தி நிற்க வேண்டும். அப்படி நிற்கும்போது தீரத்துவம் சித்தித்து அங்கிருந்தபடியே உள் இயக்கத்தில் ஈசுவரசங்கல்பம் உருவாகும் உலைக்களத்தையும் காண்போம்; திரும்பிப் பார்த்து வெளி இயக்கத்தில் வண்ண ஜாலமாய் ஒளிரும் மாயாவிலாச அரங்கினையும் காண்போம்.

இந்த இடத்தில் வந்து ஒருமுறை நிலைத்துப் பழகி விட்டால் அப்போதே நிர்மலமாகி, மனம் ஒருவித முக்தி நிலையெய்தி நம்முள் ஐக்கியமாகிவிடும். அதுதான் மோனம்.

இதற்குப் பிறகு நமக்கு மனம் என்று ஒன்று தனியாகக் கிடையாது. எங்கும் நிறைந்த மனமாக நாம் ஆகிவிடுவோம்; ஈசுவரத்வம் சித்தித்த சிரஞ்சீவித்வம் சொந்தமாகிவிடும்.

மனமழிந்த இந்நிலையிலிருந்து யாவற்றையும் காணும் போது உள் இயக்கத்தைக் கண்ணுற்று ஏதேதோ வர்ணிப் பதும் வெளி இயக்கத்தைக் கண்டு நகைத்துப் பேரொலி யுடன் சிரிப்பதும்தான் சில ஞானிகளிடம் நாம் காணும் புதிர்த் தோற்றமோ என எண்ணத் தோன்றுகிறது.

இதற்கு மேலும் மேலும் உழைத்து, மேலே, இன்னும் மேலே உள்ள, அவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய, நிலை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

களுக்குச் செல்லும் அதிசயங்களை, விநோதங்களை, விந்தைகளை அவர்களே மனமுவந்து சொன்னால்தான் கேட்க முடியும். ஆனால் அவைகளை நம்பும் திண்மை நம்முள் வளர்ந்துள்ளதா?

திருப்பேரொளி

தவயோகத்தில் 'க்ஷமா' என்றொரு உன்னத நிலை. இதை ஒரு பயிற்சி என்று சொல்வோரும் உண்டு. அது சரி அல்ல, இது ஒரு நிலை என்பதுதான் பொருந்தும்.

உறைந்த நெய் போல் என்று சொல்வார்களே, அந்த நிலை. தளும்பாது. வழியாது. கவிழ்த்தாலும் கொட்டிப் போகாது. சலனமற்று, தான் நிரம்பி நிற்கும் நிலையிலேயே மணம் வீசிக்கொண்டு யாவரையும் தன்னிடம் ஈர்த்த வாறிருக்கும்.

நமது காஞ்சி முனிவர் அவர்களைக் கண்டு தரிசித்துப் பரவசமடைந்து நெகிழும் அனுபவம் கூடும் பாக்கியம் பெற்ற புண்யாத்மாக்களுக்கு இந்த க்ஷமா நிலையின் பெருமை விளங்கியிருக்கும். அச்சந்நிதியின் இப்பிரபாவத்தை உணரும் பாக்கியம், சில சமயங்களில் அன்னாரது ஆழ்ந்த ஞாபகம் எனக்கு வரும்போதினில் கிடைத்துள்ளதை மிக மிகப் பக்தியுடன் இங்கு நினைவு கூர்ந்து வணங்கிக் கொள் கிறேன்.

திருவண்ணாமலையில் பகவான் ரமண மகரிஷிகள் முன்னிலையிலும் இவ்விதப் பிரபாவப் பிரமாணத்தை உணர்ந்தவர்கள் அநேகர்.

இந்த நிலை எந்தச் சூழல்களாலும் தாக்குறாத, எதனாலும் சலனமடையாத தன்மையுடையது. நீண்டகாலத் தவயோகத்தின், சீலத்தின், பயனாக மலர்வது. உள் வியாபாரம் தாரையெனத் தடங்கலின்றிச் சிறுகாமலும், பெருகாமலும் சீராக ஒரு அருவியின் ஓட்டம் போல் நடந்தவாறிருக்கும். வெளி வியாபாரங்களில் இணைந்து பேசிக்கொண்டிருப்பதோ, அல்லது செயல்களில் ஈடுபட்டு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இருப்பதோ, அந்த உள் வியாபாரத்திற்கு எவ்விதச் சம்பந்தத்தையும் கொண்டு சேர்க்காது. அது தன்னிச்சை யாய், தாரையாய், தடங்கலின்றி இயங்கிய வண்ண மிருக்கும்.

இந்த க்ஷுமா நிலையின் பிரதிபலிப்புத்தான், நம்மை நம் வேண்டுகோள்களை, நம் பேச்சுக்களை, ஆசியுள்ளத்தோடு, எந்தக் கணத்திலும் ஆயாசமுறுமல், அன்பே உருவாக, கருணையே வடிவாக, புன்னகையே ஒளியாக, எதற்கும் கையமர்த்தி வரம் தந்து கொண்டிருக்கும். அந்தக் குளிர்ச்சி மிகு பார்வையில் ஒரு முறை குளித்தெழுந்தாலே போதும். கோடானு கோடி பாவங்கள் தொலையும். குறையிலா வாழ்வு மலரும்.

சமூக மனத்தின் முன்னேற்றம் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு நடக்கும் இவ்வுள் இயக்கத்திற்காகப் பணி புரிவதற்கென்றே அணிமா ஸித்திகளாதி அநேகம் தேவதைகள் அங்கு சூழ்ந்து நிற்கும். அந்நிலையிலே உள்ள எந்த மகானும் தனது வெளி வியாபார காலங்களில் எங்கோ ஞாபகமாகத் தவறி எதைச் சொல்லி விட்டாலும், அது உடனே அங்கு சுற்றியிருக்கும் தேவதைகளால் சாத்திய மாக்கப்படும், சத்தியமாக்கப்படும். இக் கூற்றில் சிறிதேனும் மிகையில்லை.

முன்னம் திருக்கடவூரில் அபிராமி பட்டர் எங்கோ ஞாபகத்தில், அன்று அமாவாசையாயிருக்க, இன்று பௌர்ணமிதான் என்று அரசனிடம் சொன்னதும், பின்னர் நடந்த தவற்றையுணர்ந்து, நெகிழ்ந்து, நெஞ்சுருகி, 'அபிராமி அந்தாதி' பாடி வருகையிலே, பூரண நிலவென ஜகன்மாதாவின் பிரபாவப் பிரகாசம் அன்று நிலா உதிக்கும் வேளையிலே தரிசனம் தந்ததும் இன்றும் சான்றாக நிற்கிறதே.

"நாயேனையு மிங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினை வின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள
வண்ணம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பேயேன் அறியும் அறிவும் தந்தாய் என்ன பேறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண் மால்திருத் தங்கச்சியே"

என அதிசயித்த அபிராமி பட்டர், பின்னர்,

" தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே"

எனச் சத்தியம் செய்து தரும் வாய்மையை எங்கிருந்து பெற்றார்?

இந்த க்ஷமா நிலையில் ஒளிரும் பிரபாவம் அதுதான். யார் எதைச் சொன்ன போதிலும், கேட்ட போதிலும், ஒரு குழந்தையின் செயலைக் கண்டு ரசிக்கும் தாய்மைப் புன்னகையோடு, கவனம் காட்டி, நம்மையும் ஒரு பொருட்டாக்கி; நம்மைத் தம்பால் ஈர்த்து, கருணைப் பார்வையால் நனைத்துக் கனிந்த உள்ளத்தால் அணைத்து நம்மைப் புனிதப் படுத்தும் அந்நோன்புத் தன்மையை என்னென்று போற்றுவது?

கிருஷ்ண பரமாத்மா, சகாதேவன் தன்னிலும் ஒரு படி மேலே என்று உணர்த்த எண்ணி, பாரதப்போர் தொடங்கும் கால கட்டத்தில் ஒரு காட்சியை நிர்மாணித்து நடத்தினார். பாரத யுத்தம் நடத்த வேண்டுமா, வேண்டாமா என ஒரு சர்ச்சையைக் கிளப்பினார். சர்ச்சையின் துவக்கத்தின் போதே, முழு எதிர்காலத்தையும் தன் இயல்பான யோக நிலையால் கண்ட சகாதேவன். 'இந்தக் கேள்வி அவசியம் தானா, கண்ணா? நீ நினைத்திருப்பதை நடத்தப் போகிறாய். அதன் பழி, உன் கேள்விக்குப் பதில் சொல்வதன் மூலம் எங்கள் மீது விழ வேண்டுமா' என்று கூறி அவ்விவாதத்தை முடிக்கப் பார்த்தான். ஆனால் கண்ணனே சகாதேவனை அடக்கி விட்டுத் தன் கேள்விக்குப் பதில் சொல்லும்படி அனைவரையும் பணித்தார். சகாதேவனைத் தவிர மற்றோர், யுத்தம் நடத்தியே தீர வேண்டும் என்றனர். கண்ணன் சகாதேவனின் பதிலைத் தாண்டினார்.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சகாதேவன் புன்னகைத்தவாறே (க்ஷமா நிலையின் இயல்பான வெளிப்பாடு); யுத்தம் நடவாமலிருக்கத் தம் சகோதரர்களுக்கும், திரௌபதிக்கும் என்னென்ன நிலை தர வேண்டும் என்று விவரித்து விட்டு, முடிவாக, 'கண்ணு' உன்னையும் கட்டிப் போடவேண்டும்,' என்றான்.

உடனே கண்ணன் அதே புன்னகையோடு (கிருஷ்ணுவதாரமே க்ஷமா நிலையின் பூரண உதாரணம் தானே), என்னைக் கட்ட இங்கு யாரேனும் வல்லவருண்டா எனக் கேட்டார்.

அர்ஜுனன் தன்னால் முடியுமென்று முன்வந்து கண்ணனைச் சுற்றி அம்புவலையைப் பின்னினான். பின்னி முடிந்ததும், கண்ணன் சர்வ சாதாரணமாக வெளிவந்து நின்றார், மேலும் அநேகம் முறை விடா முயற்சியோடு அம்பு வலைகளைப் பின்னிக் களைத்து விழுந்தான், காண்டீபன்.

அடுத்தபடியாக பீமன் தனது மானசீக பூஜாவழியால் கண்ணனைக் கட்டினான். மற்றொரு கண்ணன் தோன்றினார். அவரையும் பீமன் அதே முறையில் கட்டினான். மேலும் மேலும் கண்ணன்கள் தோன்றிய வாறிருக்கப் பீமனும் பின்னடைந்தான்.

முடிவாகக் கண்ணன், 'சகாதேவா, உன்செய்தி என்ன, என்று குறும்புப் புன்னகையுடன் கேட்க, 'சித்தமாயிருக்கிறேன்,' எனப் பதிலிறுத்தான், சகாதேவன். 'சரி, ஆகட்டும்,' என்று தயாராய் நின்றார் கண்ணன். சகாதேவன் நொடியிலே சமாதி யோகத்திலாழ்ந்து தன்னைத்தானே கட்டிக்கொண்டான். கண்ணன் கதறினார், 'போதும், சகாதேவா, நீ என்னைக் கட்டி விட்டாய், விட்டு விடு' என்று. சகாதேவன் சமாதியைக் கலைத்து விட்டு எழுந்தான்.

அஞ்ஞான அவஸ்தையிலிருந்து விடுபட்டிராத அர்ஜுனனும், பீமனும், கண்ணனைத் தம்மிலிருந்து வேறாக நினைத்துத் தமது பராக்கிரமத்தால் கட்டிவிடலாமெனத் தமது திறமையில் நம்பிக்கை வைத்து இயங்கினர். இயலாது போயிற்று.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சகாதேவனே, அஞ்ஞான அவஸ்தையிலிருந்து விடு பட்டுத் தன்னையுணர்ந்த பூரண ஞானியானதால், தனக்கு அன்னியமாகக் கண்ணனை உணரவில்லை. கட்டமுடிந்தது.

சகாதேவனின் தன்னிகரற்ற தன்மை வெளிப்பட, கண்ணன், இன்னுமோர் காட்சியை அரங்கேற்றினர்.

சகல கலா வல்லவனும், பூரண ஞானியுமான சகா தேவனிடம், சோதிட ரீதியில், பாரதப் போரைத் துவங்கித் தான் வெற்றி பெற ஒரு நன்னாளைக் குறித்துத் தரும்படி துரியோதனன் வந்து பிரார்த்தித்தான். தன்னிடம் பிரகாசிக் கும் எந்த வித்தையின் பயனையும் யாசிப்பவனுக்குத் தயங்காமல் உதவ வேண்டும் என்பதுதான் தர்மம் என உணர்ந்திருந்த சகாதேவன், யோசனையேதும் செய்யாமல் உடனே துரியோதனனுக்குச் சாதகமான நாளாக அடுத்து வரப்போகும் அமாவாசை தினத்தைக் கணித்துக் கொடுத் தான், துரியோதனனும் மகிழ்ச்சியோடு போய்ச் சேர்ந்தான்.

குறித்துக் கொடுத்த நாளில் போர் தொடங்க ஆயத் தங்கள் செய்யலானன் துரியோதனன். பார்த்தார் கண்ணன். 'இதென்ன,சகாதேவன் வம்பில் மாட்டி வைத்து விட்டானே. பாண்டவர்க்கு வெற்றி தேடித் தரவேண்டிய பொறுப்பில் தான் இருக்க, சகாதேவன் குறிப்பிட்ட நாளில் போர் துவங்குமானல் துரியோதனன் அல்லவோ வெற்றி பெறுவான். இதற்கு ஒரு மாற்றுச் செய்தாக வேண்டுமே' எனச் சிந்தித்துக் கண்ணன் ஒரு உபாயத்தைக் கையாண் டார். அமாவாசைக்கு முதல் நாளே பாண்டவரை அழைத்துக் கொண்டு ஜலக்கரைக்குச் சென்று, பிதிர்க்களுக் குச் சேரவேண்டிய அமாவாசை தர்ப்பண கர்மாவைச் செய்யலானர்.

வானிலிருந்து இதைக் கண்ணுற்ற சூரியனும், சந்திரனும், இதென்ன கோலமென்றுக் குழப்பமுற்றுக் கண்ணனிடம் ஓடி வந்து, 'நாளையல்லவா, அமாவாசை. இன்று தர்ப்பணம் செய்கிறீர்களே,' என்று கேட்டனர். அதற்குக் கண்ணன்

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அருகே இருந்த போதாயனரை விளக்கம் கேட்டுக் கொள்ளும் படி சொல்லி விட்டார்.

சந்திர சூரியர் போதாயனரை அணுகி விளக்கம் கேட்ட தற்கு, அவர் எதிர் கேள்வி கேட்டார், 'அமாவாசையன்று நீங்கள் இருவரும் எங்கிருப்பீகள்,' என்று. ஏன், அருகருகே ஒன்று சேர்ந்திருப்போம்', என்றனர், சந்திர சூரியர்.

'இப்போது ஒன்று சேர்ந்துதானே வந்திருக்கிறீர்கள். இப்போதுதான் அமாவாசை.' எனச் சொல்லிவிட்டார், போதாயனர். வேறு வழியின்றிச் சந்திர, சூரியர் இருவரும் திரும்பிச் சென்றனர். இதிலிருந்துதான் போதாயன அமாவாசை வழக்கில் வந்தது.

இந்தச் சம்பவத்தை அறிந்த துரியோதனன் அவசரப் பட்டு, சகாதேவன் குறிப்பிட்டுத் தந்திருந்த நாளைக்கு முந்திய நாளே அமாவாசை எனக் கருதிப் போர் தொடர்ந் தான். பாண்டவரே வெற்றி கொண்டனர்.

சகாதேவன் குறித்திருந்த மறுநாளில் துரியோதனன் போர் தொடர்ந்திருந்தால் சரித்திரமே மாறியிருக்கும். மறு படியும் சகாதேவனைக் கலந்தாலோசித்துவிட்டுப் போர் தொடங்குவோம் என அறிவு பூர்வமாகச் சிந்திக்க வொட் டாமல் துரியோதனனை அவசர புத்தியிலே இயங்க வைத்தது தான் ஈசுவரசங்கற்பத்தின் ஆற்றல், மகாமாயையின் மறைப்பு.

தன்னைத் தோல்விக்காளாக்கவேண்டிய நிலையிலுள்ள எதிரிக்கு, தனது பார்திப்பைப் பற்றியே கவலை கொள்ளாமல், இயங்கிய சகாதேவனது தர்மம் தவருத 'க்ஷமா' நிலையை என்னென்று வர்ணிப்பது?

எதிலும் தயை, எப்போதுமே சமநிலை, பதற்றமே இல்லாத பாங்கு, எதிலும் அளவுக்கு மீறிய சிந்தனைக் கிடங்கொடுத்துச் சிதருத்திறன், எதையும் ஈசுவர சங்கற் பத்திற்கே விட்டுத் தர்மம் வழுவாது இயங்குதல், இயங்கும் போதே 'கிருஷ்ணார்ப்பணம்' என்னும் சீலப்பான்மை இவை யாவும் 'க்ஷமா' நிலைக்குரிய லக்ஷணங்களாகும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திருஉலா

இந்தப் பாததூளியின் சிற்றறிவுக்கு எட்டியவரை அநேகம் அவதார புருஷர்களை இவ்வத்தியாயத்தின்கண் தரிசனம் செய்ய முயற்சி செய்தேன். ஆனல் முழுமையாக, விரிவாக, நடைபெறவில்லை என்பதை உணர்கிறேன். இதில் இடம் பெருத அநேகமநேகம் பெரியார்களின் பேருள்ளங்கள் என் உள்ளப்பாங்கை உணர்ந்து இம்முயற்சிக்குப் பூரண ஆசி வழங்கும் என திடமாக நம்புகிறேன். அப்பெரியோர்களின் பக்தர்களும் அவ்வாறே என்னை மன்னித்து ஆசி வழங்க வேண்டுமென்று பிரார்த்திப்பதும் பொருத்தமே.

க்ஷமா போன்ற மாபெரும் நிலைகளில் உலவி மக்கள் பொன்மனத்தை நன்மனமாக்கவே வாழ்ந்த பெரியார்கள் பலரையும் இவ்வத்தியாயத்தின்கண் சற்று தரிசிப்போம்.

இசை மூலம் நம்மிடையே இறையுணர்வைப் பரப்பப் பாடுபட்ட திருவையாறு மகான் தியாகப் பிரும்மம் அவர்களின் க்ஷமா நிலையின் பெருமை, ''எந்தரோ மகானுபாவு அந்தரிகி வந்தனம்'' எனும் பாடலில் ஒளிவீசுகிறது. 'எத்தனையோ மகான்கள் மக்களைக் கடைத்தேற்றிக்காப்பதற்கெனவே தம்மை அர்ப்பணித்துவிட்டிருக்கின்றனர். அவ்வனைவருக்கும் வந்தனம்'' என்று நாவாற, நெஞ்சினிக்கப் பாடிப் போற்றியுள்ளார்.

கும்பகோணம் விஜேந்திர சுவாமிகள், மந்திராலயம் ராகவேந்திர சுவாமிகள் ஆகியோர் அநேகம் விநோதங்களைப் பக்தர்கள்மீது கொண்டிருந்த கருணை காரணமாக நிகழ்த்தி, தெய்வ சிந்தனைக்கு மக்கள் ஈர்க்கப்படவேண்டிய காரியத்தை நிறையச் செய்தருளியிருக்கிருர்கள்.

ஷிர்டி சாயிபாபா அவர்களின் சரித்திரத்தைப் படித்தால் புரிய வரும், அதிசயங்கள் மக்களைப் பக்தி மார்க்கத்தில் இழுக்கவே பயன்படும் ஒரு சாதனம் என்பது.

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கேரள மாநிலத்தில் வாழ்ந்த ஸ்ரீ நாருயணகுரு எனும் பெரியார், 'மனிதன் எம்மதத்திலிருந்தாலும், உயர்வடையும் மார்க்கத்தை எட்டி விடுவானேயாகில் பெரியவன் தான்' என்று கூறிச் சமரச நிலேயினே வலியுறுத்தியிருக்கிருர்.

கர்நாடகத்திலே புரந்தரதாசர், இன்னும் பல பெரியோர்களும் ஆந்திர தேசத்திலே ராமதாஸர், யோகி வேமனு, பக்த போதனு ஆகியோரும், மகாராஷ்ட்ரத்திலே நாமதேவர், துகாராம், ஞானுபாய் ஆகியோரும், வடக்கே மீராபாய், சூர்தாஸ், கபீர்தாஸ், துளசி தாஸ், சைதன்யர், குருநானக் போன்ற எண்ணற்ற பெரியோரெல்லாம் ஆங்காங்கு அவதரித்து, மக்களேச் சந்தோஷ நிலேக்கு முன்னேற விடாமல் தடுக்கும் அறியாமையை ஒழிக்க அரும் பாடுபட்டு அப்புனிதப் பணியில் தம்மையே கரைத்திருக்கிருர்கள். வாழ்க அவர்கள் உள்ளம்!

அகிம்சை, தயை, பரோபகாரம், கருணே ஆகிய சாத்வீகக் குணங்களேச் சலியாது வலியுறுத்தி வழி நடத்திச் சென்ருர் அவதார புருஷர், மகாவீரர்.

வாழ்வின் அநித்தியத்தை அறிவுறுத்தி நித்தியத்தை நாடும் நோன்பினேப் போதித்து விழி தந்தார், அவதார புருஷர், புத்தபிரான்.

சீலத்தை வலியுறுத்திப் புறத்தூய்மை, அகத்தூய்மை வலுப்பெறுமாறு செய்து த்வைத முறையைப் பிரபலமாக்கி அவதார புருஷர், மத்வாசாரியார் வழி நடாத்திச் சென்ருர்.

விஸிஷ்டாத்வைதத்தில் முன்னேறிப் பின் அத்வைதம் சித்தியாகட்டும் எனும் உள்நோக்குடன் வைஷ்ணவத்தைப் பரப்பி மக்களே ஆண்டவன் பால் திருப்பினுர் அவதார புருஷர், இராமானுஜர்.

அவதார புருஷர், ஆதிசங்கரர், மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருந்த அர்த்த மற்ற மதங்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

களைக் கண்டித்து ஒழித்து, எஞ்சிய ஆறு வேத மதங்களை அங்கங்களாக்கி அத்வைதத்தைப் பரப்பினர்.

அவதார புருஷர், ஏசுநாதர், மனிதருள் புல்லுருவியென மலிந்து விட்ட ஏற்றத் தாழ்வினைப் போக்கித் துன்புற்றுத் தாழ்ந்தோரைத் தூக்கி நிறுத்திக் கிறிஸ்துவ மதத்தை நிறுவினர்.

அவதார புருஷர், நபிநாயகம், மனித சக்தியை ஒன்று படுத்தி, உயர்வு பெற ஒரு நல் வழியையும், கட்டுப்பாடான வாழ்க்கையையும் வகுத்துத் தந்து வளம் சேர்த்து இஸ்லாத்தைத் தோற்றுவித்தார்.

இவ்வாருக எண்ணிறந்த மகான்கள் அவ்வப்போது உலகில் எங்கெங்கோ தோன்றி, ஈசுவர சங்கல்பத்தின்படி, மக்களது நல்வாழ்வுக்கும், ஆன்மீக உயர்வுக்கும் அயராது, தளராது தம்மைப் பூராவாக அர்ப்பணித்துள்ளனர், தமது சந்ததியினை வளம் பெறச் செய்யும் சுயநல எண்ணத்தால் அல்ல, தெய்வத்தின் குடும்பமாகிய நாம் யாவரும் தழைத் துயர்வதற்கே.

இவர்களுக்கு நன்றி சொல்லக்கூடத் தோன்ருமல், பேத எண்ண ஓட்டத்தின் பேதைப் புலம்பலாக, அவர்களை, அவர்களது அறிவுரைகளை, மனம்போன போக்கில் விமர்சிக்க முனைகிருேம், கிணற்றுத் தவளைகளாகி.

நமது இப்பலவீனத்தை அப்பெரியோர்களின் பரந்த உள்ளங்கள் மன்னித்தருள்வதாக!

திருப் பேரியக்கம்

ஞானிகள் முடிவில் அடையும் சாதன நிலை, ப்ரும்ம சாக்ஷாத்காரம் எனும் சாக்ஷி நிலை. ப்ரும்மமாகிவிட்டால் அப்புறம் அங்கு ப்ரும்மத்திற்கு வேருக ஏதுமில்லை. அதாக ஆவதற்கு முன் நிலைதான் இந்த சாக்ஷி நிலை. ப்ரும்மம் எப்படி எதிலும் ஊடுருவி நிறைந்து நின்று, தான் இயங் காமலே எல்லா இயக்கங்களுக்கும் வெறும் சாக்ஷியாக

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இருக்கிறதோ அவ்விதவொரு நிலைக்கு எய்தியவர்கள் ப்ரும்ம சாக்ஷாத்காரத்தை அடைந்தவர்கள்.

இந்த நிலை, உள், வெளி, இரண்டு வியாபாரங்களும் இல்லாத நிலை.

எதையும் எப்படி வேண்டுமானாலும் இயக்கக் கூடிய ஆற்றலிருந்தும், இந்நிலை பெற்றோர், ஈசுவரசங்கல்பத்தை முன்னிட்டு, அந்த சங்கல்பம் எவ்வாறெல்லாம் மீதமுள்ள காலங்களில் இயக்கிக் கொண்டு போகிறதோ அதற்குத் தம்மை நிலைக்களனாக ஆக்கிவிட்டு, எல்லா நடப்புக்கும் வெறும் சாக்ஷியாக இருந்து கொண்டே, உள்ளிலும் வெளியிலும் எவ்வித இயக்கமுமின்றித் திரிந்து கொண்டிருப்பர். இந்த ஒரு மாபொரும் நிலையை வர்ணிக்கும் அமுத மொழி தான், ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திராளின்,

"ஸர்வம் ப்ரும்ம மயம் ரேரே," என்ற பாடல்.

சாக்ஷி நிலையெய்தியோர் எத்தனையோ நூற்றாண்டுகள், ஆயிரமாண்டுகள்கூட இருந்து கொண்டிருப்பர், ஈசுவர சங்கல்பத்தை யொட்டி. இவர்கள் இயங்க வேண்டாம், இயக்க வேண்டாம். இவர்களது உன்னத நிலையின் ஒளி வீசும் கதிர்கள், இவர்களைச் சுற்றி ஈசுவரசங்கல்பத்தின்படி நிகழும் காரியங்கள் யாவற்றுள்ளும் பாய்ந்து, அவை சரிவர நடப்பதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டே இருக்கும்.

இவர்கள் உருவமாயும் நடமாடுவர். அருவமாயும் நடமாடுவர். ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில், பல்வேறு தேசங்களில், ஏன், பல்வேறு கோளங்களில் கூட இருப்பர்; தங்களது இச்சை காரணமாக அல்ல, ஈச்வரனது சங்கல்பங்கள் நிறைவேற.

இவ்வுயர் நிலையடைந்தோர் பாதம்பட்ட இடம், இல்லை, பாததூளிகள் சிதறி விழுந்த இடம் கூடப் புனிதமாகிவிடும். இவர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு நம்மை அப்போதிருந்தே உயர்த்திவிடும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இந்நிலை எய்திவிட்ட பெரியோர் அநேகர் ஆங்காங்கு உலவிக் கொண்டேதானிருக்கிறார்கள். அவர்களைத் தேடி அடையும் தாகம்தான் நம்மிடமில்லை. காமதேனு வென எங்கெங்கெல்லாமோ உலவும் இவர்களைத் தேடி அடையத் தெரியாமல், இருட்டுப் புத்தியால் குருட்டுத் தனம் மேலிட்டு, அடுத்த வேளை இரையைத் தேடி அலைகிறோம், இறையைத் தேடத் தோன்றாமல், இரண்டுங் கெட்டானாகி நிற்கிறோம்.

இப்படி அறியாமை இருளில் வழி தடுமாறி அலையும் நமக்குக் குருட்டு அதிர்ஷ்டமாக வேனும் இப்பெரியோர்கள் கால்பட்ட வழியே செல்லும் பாக்கியம் கிடைத்தால், அது நம் முன்னோர் செய்த புண்ணியமும், நம் முன் நல்வினை யாலடைந்த பாக்கியமு மாகலாம். அப்படி ஒரு பாக்கிய மேனும் நமக்கு நேரட்டுமெனப் பிரார்த்திப்போமாக.

திருப்பரிவு

விடயபுரம் மகான் அவர்களிடம் வருவோரில் சிலர். 'சாமி சொன்னபடி மூணு செவ்வாய்க்கிழமை வந்திட்டேன், இன்னும் வியாதி தீரலே,' 'சாமிசொன்னபடி ஐஞ்சு கிருத்திகை வந்திட்டேன், இன்னும் கடன் தீரலே,' சாமி சொன்னபடி ஏழு ஞாயிற்றுக்கிழமை கஞ்சி காய்ச்சி ஊத் திட்டேன், இன்னும் பங்காளி வியாச்சியம் தீரலே' என்றெல் லாம் புலம்புவர்.

அப்போது சுவாமிகள் அன்போடு கையமர்த்தி "அம்பி கையை நீ விட்டுட்டாலும், அவ உன்னைக் கைவிடமாட் டாங்குறதுலே நம்பிக்கை வைச்சாப் போதும். எல்லாம் சரியாயிடும், போய்வா" என்று கூறி விபூதி கொடுத்தனுப்பு வார்.

அத்துடன் அவர்கள் துன்பம் தீர்ந்து போகும். ஆனால் மறுபடி அவர்கள் அங்கே வரமுடியாது. பக்தி இல்லாதோ ருக்கும் பரிந்து ஒரு முறை காப்பாற்றி விடுவார். பக்தி யின்மை காரணமாக மறுபடி அவர்கள் வருவதில்லை.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அப்போதெல்லாம் சுவாமிகள் சொல்வார், 'சாமி இவங்கள்ளாம் காசு உள்ளவங்க. பணத்தைச் செலவழிச்சு ஆடம்பரமாப் பூசை நடத்தி வைக்கிறுங்க, ஏதோ இவங்க தயவிலேதான் அம்பாளுக்கு அன்னைக்கி அவ்வளவு பெரிசாப் பூசை நடக்குறுப் போல. அப்புறம் அம்பாள் இவங்ககிட்டே கூலியை வாங்கிட்டு சரியா நடந்துக்கலேன்னு குத்தம் சாட்டுறுப்போல எங்கிட்ட வந்து. இன்னும் அது தீரலே, இது சரியாகலே, அப்படி இப்படீன்னெல்லாம் குறைப் பட்டுக்கறுங்க. இந்த மடமையை எப்படிங்க ஜீரணம் பண்றது? அதோ பாருங்க எட்ட, அந்தக் கல்லுமேலே தான் ஆயி விபூதியைக் கோயில் பூசாரி கொண்டு போய் வைச்சிட்டு வராரு; அவரு வைச்சிட்டு வந்தப்புறம், காத்துக் கிட்டிருக்கற அரிஜனங்க வந்து அந்த விபூதியை எடுத்திட்டுப் போய் உபயோகப்படுத்தறுங்க. அந்த விபூதியாலே அவங்களுக்கு விஷகடி தீருது, பாம்பு கடிச்சவன் பொழைக்கிறுன், குஷ்ட நோய் கூடத் தீருது.'

'அப்படி அவங்களுக்கெல்லாம் நடக்குறப்போ, என் கையாலேயே விபூதி வாங்கிட்டுப் போற இவங்கள்ளே சில பேருக்கு ஏன் சாமி கஷ்டம் தீர நாளாகுது? நம்பிக்கை போதலே, பக்தி போதலே என்று உள்ளம் வருந்திச் சொல்வார்.

பக்தியும், நம்பிக்கையும் இரட்டைக் குழந்தைகள். அவைகளில் எந்தக் குழந்தை நலிவுற்றிருந்தாலும், நமது முன்னேற்றம் தாமதப்படத்தான் செய்யும்.

திருப் பேருணர்வு

மகான்கள் 'முழுமை' நிலை எய்திய உடனேயே, தங்கள் விடுதலையைத் துரிதப்படுத்தும் கடமை உணர்வில் (மோக்ஷமடைய வேண்டிய தர்மம்) தங்களது பாப, புண்ணியக் கணக்குகளை ஒழுங்குபடுத்தி, நாம் வங்கியிலுள்ள பற்றும் இருப்பும் கலந்த கணக்குகளை, எந்த நிலையில் அப்போது உள்ளனவோ அதே நிலையில், அவசியம் காரணமாக, எவ்வாறு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஸ்தம்பிக்க (Freez) செய்து விடுகிறோமோ, அது போல் இருவினைக் கணக்குகளை இருப்புக் கட்டி, கணக்கை மேல் கொண்டு நடவாதபடி, வளராதபடி, நிறுத்தி விடுவார்கள், ஜனன மரணத் தொடர்பு மேலும் நீடிக்க வேண்டாம் என்ற முடிவோடு. அன்று முதல் அந்த இருப்புக் கணக்கு தெய்வத்தின் நேர் ஆதிக்கத்தில் ஒரு விநோதமான ரீதியில் இயங்கத் தொடங்கும்.

இவ்வாறாகக் கணக்கை முடிவுகட்டிய மகான்களை நாம் அண்டி, போற்றி, வழிபட்டு, அவர்கள் மகிழும் விதமாய் நற்கருமங்களை ஆற்றும் போது. அவர்கள் கணக்கின் இருப்பி லுள்ள புண்ணியத்தின் பலன் நம் நற்தொண்டினுக்கேற்ற அளவில் நம்மை வந்து சார்ந்து ஆட்கொண்டு காப்பாற்றும்.

இப்படித்தான் சிலர் சில மகான்களைத் தரிசனம் செய்த உடனேயே வாழ்வில் திடீர்த் திருப்பங்களேற்பட்டுக் கஷ்டங்கள் அறவே நீங்கிச் செழிப்பைப் பெற்றிருக்கிறார்கள். இதன் முக்கிய காரணம் நாம் அவசரப் பட்டு நினைப்பது போல் அம்மகான் இவர்களுக்கெனத் தனிச் சலுகை காட்டி இவர்களை உயர்த்தியது அல்ல. தெய்வத்தின் நேர் பார்வை யில் இயங்கும் ஒரு தனி நியதியின் சூட்சுமம்தான் இவ்வதி சயம் நிகழக் காரணம்.

மாறாக இம்மகான்களை அலட்சியம் செய்தோ, அறிவில் லாமல் அவநம்பிக்கை கொண்டு அவதூறாகப்பேசி நடப்ப தையோ மேற்கொண்ட துஷ்டர்களை, அம்மகான்களின் முன் சொல்லிய கணக்கிலிருக்கும் பாப பலன்கள் உடனே வந்து சூழ்ந்து கொள்ளும்.

இவ்விதமாக மகான்களால் ஸ்தம்பிக்கச் செய்யப்பட்ட கணக்கின் பாப புண்ய பலனது இருப்புநிலை அறவே தீர்ந்து போனதும், அம்மகான்கள் எந்தக் கணத்திலும் தம் விருப்பப்படி மோக்ஷ நிலைக்கேகச் சித்தமாகி விடுகிறார்கள்.

அன்றிச் சிலர் நினைப்பதுபோல் இம்மகான்கள் தனக்குப் பிடித்தவர்கள் எனப் பிரித்துச் சிலருக்கு வரம் கொடுப்பது என்பதும், பிடிக்காதவர்கள் என ஒதுக்கிச் சிலருக்குச் சாபம்

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

கொடுப்பது என்பதும் சத்தியமே ஆதாரமில்லாத ஒரு கற்பனை மாயம்.

மகான்களுக்கு நாம் யாவரும் சமமே. சமநிலையெய்தியோரே மகான்களாகின்றனர். அவர்களுக்கு யாரிடமும் பற்றோ வெறுப்போ கிடையாது. அவர்கள் எல்லாவிதப் பற்றையும் அறுத்துப் பளிங்கு நிலையை அடைந்தவர்கள். சீரிய நோன்புகள் மூலம் அவ்வுன்னத நிலையை அடைந்து நிரந்தர விழிப்புடன் இருப்பவர்கள். மறுபடி ஒன்றைப் பற்றும் அல்லது வெறுக்கும் வழுக்கலுக்கிலக்காகித் தம்மீது அழுக்கேற இடந்தர மாட்டார்கள்.

இதற்குச் சான்றாகப் புரந்தர தாசர் சிலேடையாகத் தமது பாடலில் சுட்டிக் காட்டியதை இங்கு இணைத்துப் பார்க்கலாம். 'சிஷ்டர்களெல்லாம் மகா பொல்லாதவர்கள். ஒரு நமஸ்காரத்தைச் செய்து விட்டு நமது புண்ணியத்தின் பலனை அடித்துக்கொண்டு போய்விடுவார்கள். ஆனால் துஷ்டர்களோ, பாவம்! தமது நிந்தனையால் நமது பாவ மூட்டைகளைப் பெற்று நம் சுமையை ஏற்று நமது பாரத்தைக் குறைக்கும் நல்லவர்கள்,' என்று பாடியிருக்கிறார். எவ்வளவு தெளிவான உபதேசம், 'பெரியோரை நாடு, அவர்களைக் குறை கூறாதே,' என்று.

திருவுக்குச் சிறு ஓய்வு

1940 ஆண்டு முடிய ஓரிரு மாதங்கள் இருக்கும். முன் பகுதியில் நாம் தரிசித்த கும்பகோணம் மகான் ஸ்ரீ அண்ணா ஸ்வாமி பகவான் விடயபுரம் வந்திருந்தார். இரு பெரியார்களும் ஒருவரையொருவர் ஆனந்தத்தோடு கண்டு அக மகிழ்ந்து அளவளாவலாயினர். அங்குமிங்கும் இவர்கள் உலவும் போது, சாது சுந்தரார்யா, பெருமாளகரம் கிருஷ்ண மூர்த்திஅய்யர், கர்ணம் சுப்ரமண்ய அய்யர், நாகராஜ சர்மா, இன்னும் சிலர் கூடவே சென்றனர்.

விடயபுரம் மாரியம்மன் கோயிலருகே ஒரு இடத்திற்கு வந்தபோது அண்ணா ஸ்வாமிகள் சற்று நின்றார். மற்றவர்

Funding by IKS-MoE

களும் சூழ்ந்து கொண்டனர். திடீரென்று அண்ணுஸ்வாமிகள், அருகாமையில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி, 'இங்கே ஆறடிக்கு மூணடியிலே ஒரு குழி தோண்டி வைக்கணும். அதுலே ஒருத்தரைப் போட்டு மூடணும்னு பிரார்த்தனை, என்றார்.

கூட இருந்தவர்கள் இதைக் கேட்டதும் அவரவர் கோணத்திலே அர்த்தம் செய்து கொண்டு பெரியவரை ஏதேதோ கேட்க முனைந்தனர். ஒருவர் கேட்டார், 'ஸ்வாமிகளுக்கு இந்த இடத்திற்கு வந்து சமாதியாகும் திருவுளமா,' என்று. பட்டென சட்டாம்பிள்ளை சுவாமிகள் இடைமறித்து. 'பெரியவங்க ஏதாவது சொன்னாக் கேட்டுக்குங்க, அது மாதிரி செய்யுங்க. மேலே தூண்டித் துருவிக் கேள்வி கேட்டு அபசாரத்துக்கு ஆளாகாதீங்க,' என்றார். எல்லோரும் அடங்கி விட்டனர். பின்னர் சிலநாள் தங்கியிருந்து விட்டு அண்ணுஸ்வாமிகள் கும்பகோணம் சென்று விட்டார்.

சரியாக ஆறுமாதம்தான். 1941 ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி விடயபுரம் ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகள் நம்மை விட்டுப் போய்விட்டார். மறுநாள் யாவரும் கூடி சமாதியை நிறுவினர். கும்பகோணத்திலிருந்து அண்ணுஸ்வாமி பகவான் வந்திருந்து சடங்கினைத் துவங்கி வைத்தார். முன்னம் நேரில் இருந்து மக்களுக்கு ஆவன செய்து கொண்டிருந்த விடயபுரம் மகான் ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகள், அமரராகி அவரது பக்த கோடிகளுக்கு இன்றும் கருணை செய்து கொண்டுதான் இருக்கிறார்.

வெகு அண்மையில் மட்டுமே அவரது பிரபாவத்தைப் பற்றி அறிந்து ஈடுபாடு கொண்ட எனக்கும் அவரது கருணை கிடைக்கவாரம்பித்து, இச்சரித்திரத்தைப் பூர்த்திசெய்யும் ஆற்றலையும், அது செவ்வையாய் முடியும் நல்வாய்ப்பினையும் நான் அதிசயிக்கும் அளவுக்கு ஈந்துள்ளது.

அது போலவே இதைப்படித்து அப்பெரியாரிடம் ஈடுபாடு கொள்ளும் யாவருக்கும் அவரது கருணை வெள்ளம் பிரவகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

விடயபுரம் மகான் அவர்களிடம் முக்கியமாக மிகவும் நெருங்கிப் பழகிய பலரிலே, திருவையாறு ராமச்சந்திர அய்யர் என்பாரும் ஒருவர். அந்தணரான இவர், விடயபுரம் மகான் அவர்கள் சமாதியான பின்னர், வருடந்தோறும் சித்திரைமாதக்கிருஷ்ணபக்ஷ அஷ்டமிதினத்தில் மகானுக்குத் தவறுமல் ஆராதனை நடத்தி வந்தார். அதற்கு எதிர்ப்பு மிருந் தது. அவ்வெதிர்ப்பை இவர் கடைசிவரை பொருட்படுத்தவே இல்லை. இந்தத் தொண்டு எக்காரணத்தைக் கொண்டும் அலட்சியம் செய்யப்பட்டு விடாதவாறு, தனது அந்திமக் காலத்தில், ஒரு உயிலே எழுதி வைத்து விட்டார். தமது சொத்திலிருந்து கிடைக்கும் வருவாயின் ஒரு பாகத்தைச் செலவிட்டுத் தம் சந்ததியினர் இந்த ஆராதனையைத் தவறுமல், நடத்தி வரவேண்டுமென்று உயிலில் இடம் பெற்றிருக்கிறது.

திருச் சுழல்கள்.

நாம் தற்போது வாழ்ந்து வரும் கால ஓட்டத்தில், தெய்வங்களின் பெயரால் உண்மையாகவே இயங்கும் சில ஆஸ்திகர்களைக் காண்கிறோம். அதே சமயத்தில் வேறு பல இடங்களில், அநேகம் தெய்வங்களின் பெயரால், பெரும் ஆர்ப்பாட்டங்கள், ஆடம்பரங்கள், விளம்பரங் களோடு நடத்தப்படும் மோசடிகளையும் சந்திக்கிறோம்; இப்படி மோசடி நடக்கும் இடங்களிலேயும், நாம் மறுக்க வியலாத சில சித்திகள் இருப்பதாகி, தள்ளி விடுவதா அல்லது ஏற்றுக் கொள்வதா எனக் குழம்பிப் போகும் அளவுக்கு இயங்குவதையும் கேட்கிறோம்.

இவ்வளவு தூரம் உண்மையான, தூய்மையான, புனித மான, ஜப, தப, யோக நிலைகளை அலசும்போது, மேலே சொல்லியபடி ஒரு குழப்ப நிலை நம் சமூகத்தில் ஊடுருவி நிற்பதின் உண்மை அடிப்படை என்ன என்று தோண்டித் துருவிச் சிந்திக்காமலிருக்க முடியவில்லை. அந்தச் சிந்தனை எதிர் நீச்சலிலே வெளிப்பட்ட சில பெருமூச்சுக்களைச்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சிந்தனையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாமெனத் தோன்றியதால், இங்கே சில விளக்கங்களை எழுத முயற்சி செய்திருக்கிறேன்.

இதைப் படிக்கும்போது யாரும், இது ஒரு குறிப்பிட்ட யாரையோ மனதில் எண்ணி எழுதியது எனத் தயவு செய்து தப்புக் கணக்குப் போட வேண்டாம். இவை, யாரையும், எந்த வகையிலும் தனிப்பட்ட முறையில் மனதில் கொண்டு எழுதப்பட்டவை அல்ல.

சில இடங்களில் சாமி வந்து குறி சொல்வதாகச் சொல்கிறார்கள். அவைகளில் ஒன்றிரண்டு விஷயங்கள், தற்செயலாய் தெய்வாதீனத்தால் நடப்பதற்கும், இவர்கள் குறி சொல்வதற்கும் ஏறத்தாழ ஒற்றுமை உள்ளனவாகி நடைபெற்றுவிடும்போது அங்கு கூட்டம் பெருக வாரம்பிக்கிறது. பின்னர் நூற்றுக்கு தொண்ணூற்றிஐந்து விஷயங்கள் அங்கு பலிக்காதனவாகி விடும்போது கூட்டம் குறைந்து விடுகிறது. அங்கு தெய்வாதீனமாய் ஒன்றிரண்டு சரியாக வருவதற்கும், அநேகம் தவறாகப் போய் விடுவதற்கும், ஈசுவரசங்கல்பத்தின்படி ஆங்காங்கு ஊடுருவி நடைபெறும் மாயாவிலாச நாடகம்தான் காரணமாகும்.

அன்றி அதில் பங்கு பெற்று இயங்குவரும் மனிதருடைய ஆற்றலுக்கும் இந்த மாயா நாடகத்திற்கும் பிரக்ஞா பூர்வமான எவ்விதத் தொடர்புமில்லை. தன்னையறியாமலே இப்படியொரு நாடகத்தில் பங்கேற்று இயங்குகிறோம் என்று புரியாத நிலையில் அவர்கள் ஏதேதோ விளக்கங்கள் தந்து கொண்டு அண்டி வருவோரைக் குழப்புகிறார்கள். அவர்களது வாழ்க்கையை அவர்கள் இவ்விதமாக நடத்திக் கொள்ள வேண்டுமென்பது மட்டுந்தான் ஈசுவரசங்கல்பமே தவிர, அங்கு எவ்வித சித்தியும் இல்லவே இல்லை என்பது தான் உண்மையாக இருக்க முடியும்,

இன்னும் சில இடங்களில் வெறும் கையை நீட்டித் திருநீறு வரவழைக்கிறார்கள், குங்குமம் வரவழைக்கிறார்கள், இன்னும் பலப்பலப் பொருள்களையும் வரவழைக்கிறார்கள்,

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அவர்கள் தங்களிடம் இவ்வித ஆற்றல் எப்படி இயங்குகிறது என்பது புரியாமலேயே இதைச் செய்து கொண்டிருப்பதற்கு ஆதாரமும் அந்த மஹாமாயாவின் மாயம்தான். சில சமயம், இவர்களே விக்கித் திணறிப் போகும் அளவுக்கு அந்தச் சக்தி இயங்காமலிருந்து விடுவதும் உண்டு. உண்மையில் அந்தச் சக்தி இவர்களது ஆதிக்கத்தில் இயங்கவில்லை. அதனது ஆதிக்கத்தில்தான் இவர்கள் இயங்குகிறார்கள். அந்தச் சக்திகள் யாவை? துர்த்தேவதைகளா? துர்த்தேவதைகள் என்று தவறாகக் குறிப்பிடப்பெறும் சிறிய சுற்று தேவதைகள். ஸித்தி தேவதைகளின் ஆவரணங்களிலுள்ள பரிவாரக் கூட்டங்கள். இச்சுற்று தேவதைகளை உபாசித்தால், உபாசகன் தரும் சில பூசனைகளில் விருப்பங்கொண்டு சீக்கிரம் கட்டுப்படும். ஆனால் மனிதனைப் போலவே, கொஞ்ச காலம் ஆனதும், அலுப்படைந்து உபாசகனது ஆணவத்தையும், அக்கிரமத்தையும், துஷ்பிரயோகத்தையும் சகிக்க வொண்ணாமல், அவன் செய்யும் தவறுக்காகக் காத்திருந்து அவன் தவறு செய்தவுடன் அவனை வீழ்த்தி விட்டுக்குத் தான் சுதந்திரமடைந்துவிடும்.

அல்லது, அகாலமாக வாழ்வு முடிந்து, நியதியின் கணக்கின்படி உள்ளவாழ்வின் பூரணகாலம் காலாவதியாகும் வரை ஆவியாக அலையும் ஒரு வகை இயக்கமா? அகால மரணமடைந்தவர்கள் தீவிர உபாசனைகள் செய்தவராக இருந்திருப்பாரேயானால், அவர்களது ஆவிகளில் சிலவற்றுக்கு முன் சொன்னதுபோல் சில பொருள்களை இடம் மாற்றும் திறன் இருக்குமாம். இப்படிப்பட்ட ஆவிகளின் ஆதிக்கத்தில் அகப்பட்டவர்கள், தனக்குத் தெய்வ சாந்நித்யம் கிடைத்து விட்டது. எனத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். அல்லது அறிந்தே அவர்கள் ஊரை ஏமாற்றிக் கொண்டுமிருக்கலாம். மீண்டும் இம்மாதிரி விபத்துக்களுக்கெல்லாம் அந்த மாயா நாடக விலாசத்தின் அடிப்படைதான் காரணமென்னும் உண்மையை மறுப்பதற்கில்லை.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

நல்ல கிரமத்தில் நடக்கும் பூஜைகளில் கூடச் சில சமயம் அங்கு வந்துள்ளோரில் சிலருக்கு ஆவேசம் வரும். ஏதேதோ சொல்லிக் கூத்தடிக்கும். நற்கிரமத்தில் பூஜை செய்து வருபவர் பிரமித்துக் குழம்புவார். இவ்வாவேச அலங்கோலமெல்லாம் ஆவி நிலையில் உலவும் சில இயக்கங்களின் சேஷ்டைகளே. இவைகள் தங்களது விட்டுப்போன ஜன்மத்தின் வாசனை காரணமாக சிலச் சில விஷயங்களை நம்பும்படி சொல்லும். தான் இன்ன தெய்வமென்று சொல்லி நம்மை நம்ப வைத்து, நமக்குக் கொஞ்சமேனும் கிடைத்திருக்கும் முன்னேற்றத்தையும் சந்தேகப்பட வைத்துவிடும். இந்த நடப்பும் மாயா விலாச இயக்கத்தின் மாயம் தான். நமது உறுதி சற்றேனும் தளர்ந்ததாக இருக்குமாஞல், அதற்குப் படிப்பினையாக, நமக்கு அவநம்பிக்கை வந்த காரணத்தை யொட்டி, ஏற்கனவே கிடைத்துள்ள சாதஞ பலம் குறைய ஆரம்பிக்கும்.

இந்த ஆவிகளின் நடமாட்டம் இரண்டு இடங்களில் நேரும். ஆசாரமும் சீலமும் அலட்சியப்படுத்தப்பட்ட, அவலப் பழக்கங்களைக் கொண்ட இடங்கள், இவைகட்கு இருப்பிடமாகப் பயன்படும். சீலமான இடங்களில், தனது விடுதலைக்கு வழியேதும் அகப்படுமாவென வந்து நடமாடும். இவ்வளவே யொழிய இவைகள் தெய்வமுமல்ல, தேவதைகளுமல்ல. மனிதர் வெளி வேஷமிடுகின்றனரல்லவா, அது போல் இவைகளும் வேஷமிட்டுப் பொய்கூறி நம்மை ஏமாற்றித் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள அலையும் இயக்கங்கள்!

இது தவிர இன்னொரு கோணத்தில் கிடைக்கும் சமாதானத்தையும் ஆராய்ந்து விடுவோம். உலகில் எத்தனை கோடானு கோடி மக்கள் உள்ளனரோ அத்தனை கோடானு கோடி தேவர்கள் வானுலகில் உள்ளனர். மனிதன் சத்காரியத்திலிறங்கி 'சாதனையின் படிகளை வரிசையாகக் கடக்க ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு தேவ நிலையும், சாதனையின் தரத்திற்கேற்றவாறு, ஏதோ ஒரு விதத்தில் ஆக்கிரமிக்கப்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

படுகிறது. அவ்வித ஒரு ஆக்கிரமிப்புத் தாக்குதலுக்கு இலக்காகும் தேவதை, அந்த ஸாதகனிடம் தனது வலுவைக் காட்ட ஆரம்பிக்கிறது. ஸாதகன் ஸத்தியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட ஜிதேந்திரியனாக இருந்தால் அவனது சாதனைக்கு வழி விட்டு, அவன் அடுத்த நிலைக்குச் செல்ல வழிகாட்டி வரம் தந்துதவும்.

அன்றி ஸாதகன் பலவீனனாக, அகம்பாவமுள்ளவனாக, இந்திரிய விஷயங்களில் சபலமுள்ளவனாக இருந்து விட்டால், அந்தத் தேவதை தனது ஆதிக்கத்திலிருக்கும் சில ஸித்திகளைத் தற்காலிகமாக அந்த ஸாதகனுக்கு உரிமையாக்கி வைக்கும். இந்த உண்மை புரியாத ஸாதகனோ, தனக்குத் தெய்வ சாந் நித்யம்தான் கிடைத்து விட்டது என எண்ணிக் கொண்டு மனம் போனபடி எல்லாம் நடக்க ஆரம்பிப்பான். மாய வித்தைகளைக் காட்டி மயக்கி மக்களை ஏமாற்றுவான். மயங்கிய மக்களிடம் பொருளைப் பெறுவான். முறையற்ற வகையில் உறவுகளும் கொள்வான். யாரையும் துச்சமாகப் பேசுவான். கோபம்கொள்வான். வீணே சபிப்பான். உண்மை யான பெரியோரை அட்சியம் செய்வான், விமர்சிப்பான், நிந்தனை செய்வான். எவரையும் வாதுக்கழைப்பான். எல் லோரும் தன்னை நமஸ்காரம் செய்ய ஆசைப் படுவான். தன்னைச் சுற்றித் துதிபாடும் கும்பலைச் சேர்ப்பான். தலைகால் புரியாமல் தான்தோன்றித்தனமாய் நடந்து கொள்ள ஆரம்பிப்பான்.

இவனிலும் சற்று அதிக பலமுள்ள, இதே விதமாய் முன்னேறிய மற்றொருவனை இவன் எதிர்கொள்ளும் போது யார் பெரியவன் என்ற சர்ச்சை எழும். மோடி வைக்கிறேன் எடுத்து விடுவாயா, என்பான் இவன். என் சக்தி உன்னை என்ன செய்கிறது பார், என்பான் அவன்.

இந்தக் கட்டத்திற்காகவே காத்திருக்கும் தேவதைகள். தாம் தற்காலிகமாய் இவர்களிடம் விட்டுவைத்திருந்த ஸித்திகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளும். அவ்வளவு தான். அந்த நிலையில் அவர்களுக்கு ஏற்படும் அடி இருக்கிறதே,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அது இவர்களை வெகு ஆழத்தில் வீழ்த்தித் தள்ளிவிடும். பின் இவர்கள் சொல்லொணு இகழ்ச்சிகளுக்கெல்லாம் ஆளாகி அவலமடைந்து சீர்கெட்டு ஒருஇழிவான முடிவை அடைவர். பின்னர் இவர்கள் தாம் முன்னர் எட்டிப் பிடித்த சாதனை நிலையைத் திரும்ப அடைய எத்தனையோ ஜன்மங்களாகும். இவர்களது அடுத்த ஜன்மம் புழுவோ, பூச்சியோ, பன்றியோ—யார் கண்டது?

இந்த நிகழ்ச்சிகளும், அந்த மாயா நாடக விலாசத்தின் ஒரு ரஸமான பகுதிதான் எனத் தெளியாமல் வேறெவ்வாறு நம் ஆர்வத்தைத் தணித்துக் கொள்வது?

இந்தக் கட்டத்திலே, முன்னம் தஞ்சை மாநிலத்திலே வாழ்ந்த ஸ்ரீவித்யோபாசக சிரேஷ்டரான மகான் ஸ்ரீபாஸ்கரராயர் அவர்களை நினைக்காமலிருக்க முடியவில்லை. இப் பெரியார் ஸ்ரீ வித்யையின் அநேகம் முக்கிய நூல்களுக்கும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்திற்கும் பாஷியம் எழுதி நமக்குப் பேருதவி புரிந்திருக்கிருர்.

இவர் திருவிடைமருதூரில் வசித்த காலத்தில், ஒரு சந்யாசி தம்மை இவர் நமஸ்காரம் செய்யாமல் அலட்சியப் படுத்துகிருர் எனப் பொதுமக்களிடம் குறை கூறிக் கொண்டிருந்தார்.

மகான் பாஸ்கர ராயருக்கோ, நமஸ்காரம் செய்வதில் ஆக்ஷேபணையே இல்லை. அந்த நமஸ்காரத்தின் பின்விளைவை எண்ணித்தான் ஆக்ஷேபணை இருந்தது.

கொஞ்சம் தயக்கத்திற்குப்பின், மகான் பாஸ்கரராயர் அச்சன்யாசியின் ஆசிரமச் சின்னங்களான, தண்டம், கமண்டலம், காஷாய வஸ்திரம், பாதக்குறடு இவைகளைத் தனியே வைக்கச் செய்து அவைகளுக்கு நமஸ்காரம் செய்தார். இவர் நமஸ்காரம் செய்து முழுமையாக எழுமுன் அச்சின்னங்கள் பற்றி எரிந்தன.

அன்றே அந்தச் சந்நியாசி அவ்வூரைவிட்டு வெளியேறி விட்டார், தலைகுனிவு தாளாமல்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இப்படி ஒரு விபத்தை பாஸ்கரராயர் போன்ற மகான் நிகழ்த்த மாட்டார். மகான் பாஸ்கரராயரது சாதனைகளில் சந்தோஷங்கொண்டு அவரைச் சூழ்ந்து நிற்கும் தேவதைகளுக்கு அச்சன்யாசியின் அறியாமை மீது வந்த கோபமே காரணம், அத்தகைய விளைவுக்கு.

திரு மகிமை

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தில் "வீராராத்யா," "தீரஸமர்ச்சிதா" என்னும் நாமங்கள் வருகின்றன.

வீரர்களான ஸாதகர்களுக்கு ஸத்தியம் ஒன்றுதான் நாட்டம். ஸத்தியமற்ற எதையும் கண்டால் வீறு கொண்டெழுந்து உடனே அதை முறியடித்து வீழ்த்தி விடுவார்கள், ஸத்திய தரிசனமே அவர்களது உச்வாச நிச்வாசம். ஸத்தியத்தின் பிரக்ஞையே அவர்களது த்யானம். ஸத்தியத்தின் ஆட்சியே அவர்கள் ரசிக்கும் காட்சி.

தீரர்களான ஸாதகர்களுக்கோ யோகம் ஒன்றிலேதான் நாட்டம். தேவைகளின் முனைப்பை முழுதும் வென்றவர்கள். எப்போதாவது தேவைகள் அவர்களைத் தாக்கும்போது, மலையென நிமிர்ந்து நின்று, அத்தேவைகள் தம்மீது மோதும் போதே சிதறுண்டு போகும்படி செய்யும் ஜிதேந்திரியர்கள்.

இவ்வாறான ஸாதகர்களுக்கு, வெளிவேஷம் என்பதே புரியாத ஒன்று. வேஷமிடுவோரையும் எளிதில் நம்பிவிடுவார்கள். அப்படி வேஷமிடுவோரை, உள்ளிலேயே லயித்திருக்கும் காரணத்தால், இனங்காணாமல் இவர்கள் நம்பி விடும்போது, இவர்களது தேவையை அவ்வப்போது கவனித்துக் கொள்வதற்கெனவே ஆவலோடு சூழ்ந்திருக்கும் தேவதைகள், யாரும் மோசம் செய்துவிடாமல் கண்காணித்துக் கொள்ளும். அதுதான் வீரத்தின் தீரத்தின் மகிமை.

இவர்களுக்குத் தம்மைப் பற்றிய முனைப்பான அபிப்பிராயமே தோன்றாது. தான் எதிலும் பிரதானன் அல்ல

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

என்ற எண்ணத்திலேயே வாழ்வார்கள். யார் எதைச் சொன்னாலும் உண்மையான ஆர்வத்தோடு கேட்பார்கள். பிறர் தம்மை நமஸ்காரம் செய்வதைப் பெருமையாக எண்ண மாட்டார்கள். அதை ஒரு பாரமாகக் கருதி ஏற்றுப் பகவானிடம் அவர்களுக்காக தயையோடு பிரார்த்திப்பார்கள். அந்தப் பிரார்த்தனைகளெல்லாம் அதற்கெனச் சித்தமாய் அங்கு உலவும் தேவதா ஸமூகத்தால் உடனே பூர்த்தி செய்யப்படும்.

இவர்களுக்கு தர்மம் ஒன்றே கவலை, ஸத்யம் ஒன்றே வழி, சாதனை ஒன்றே பொழுதுபோக்கு, நோன்பு ஒன்றே நாட்டம், தேவையாவும் துச்சம், தெய்வம் மட்டுமே மிச்சம் என்ற இடையறு இயக்கம்தான் இவர்களது வாழ்க்கை.

இவர்களிடம் தேவதைகள் தங்கள் ஸித்திகளை அனுப்பி ஏவலுக்குத் தயார் நிலையில் அவைகளை உலவ விடும்போது இம்மகாபுருஷர்கள் அந்த தேவதைகளையும், அதன் ஸித்திகளையும், தங்களது உபாசனா தெய்வத்தின் அந்தஸ்தில் வைத்தே போற்றி, அந்த ஸித்திகளை எந்த விதத்திலும் பயன்படுத்தாமல் நடந்து கொள்வர். இவர்களது இவ்வெளியபோக்கு அத்தேவதைகளை, ஸித்திகளை, சுலபமாய் வெற்றி கொள்ளும். அவைகள், இவர்களது வீரத்தை, தீரத்தை மெச்சி, இவர்களது சாதனைகளுக்குத் துணைபுரிந்து, மேலே செல்ல வழி வகுக்கும்.

இப்படி மேலே போகப்போக இன்னும் பெரிய தேவதைகளும் அரிய ஸித்திகளும் முன்னம் சொன்ன விதத்திலே இவர்களை அண்டி வரும். அப்போதும் இவர்கள் தமது இயல்பான எளிமையை விழிப்புடனே கையாண்டு மயக்கத்தின் வழுக்கல்கள் குறுக்கிடாமல், எச்சரிக்கையுடன் இயங்கி அந்தத் தேவதைகளையும், ஸித்திகளையும் போற்றி மகிழ்வித்து அவைகளது திருப்தி பூர்வமாய்க் கிடைக்கும் துணைக்குப் பாத்திரமாவர்.

பின்னர் இவ்வாறாகவே அந்தந்தக் கட்டங்களில் வந்து அண்டும் தேவதைளுடைய, ஸித்திகளுடைய துணையையும்,

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

தமது சாதனை வலிவையும் கொண்டு மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போவர், பரமபத சோபானப் படத்தில் கட்டம் கட்டமாகத் தாண்டுவது போல். அந்தக் கட்டங்களில் வரும் ஏணிகளைத் தீவிர நோன்புகள் மூலம் சரியாகப் பயன்படுத்துவர். அந்தக் கட்டங்களிலுள்ள பாம்புகளைத் தங்கள் ஜிதேந்திரியத் திண்மையோடு தாண்டிச் செல்வர்.

இப்படிப்பட்டோர்தான் உண்மைப் பெரியோர். அவர்களைத் தேடி இனங்கண்டு வணங்கிப் பயனடைதல் நமது உரிமை.

திருச் சிறப்பு

இறைவனைப் பசுபதி என்றும், கோவிந்தன் என்றும் ஆன்றோர் குறிப்பிட்டுள்ளனர். அப்படிச் சொல்லி இருப்பதால், இறைவன் ஒருவனே மேய்ப்பவன், நாம் யாவரும் மேய்பவர்கள் என்றாகிறது. ஆனால் மேய்வதை விட்டு, மேய்க்க முனைகிறோம், மேய்ப்பது நம் வேலையல்ல, மேய்ப்பவன் சுட்டிக் காட்டுமிடத்தே மேய்வது தான் நம் பாடு என்பதை மறந்து.

கூட்டம் சேர்த்துக் கானல் நீரைக்காட்டித் தாகம் தணித்துக் கொள்ள அழைத்து, தன்னை மேய்ப்பவனாகப் பொய் விளம்பரப்படுத்திக் கொள்ளும் ஆணவம் மலிந்து கொண்டே வரும் காலத்தில் நாம் வாழ்கிறோம்.

உண்மைப் பெரியோர் ஒரு நாளும் தன்னைமேய்ப்பவனாகக் கருதிச் செயல்படவேயில்லை. மேய்ப்பவனைத் தேடித் தரிசனம் செய்தபின், நம்மையும் அழைத்தார்கள், மேய்ப்பவனைத் தரிசனம் செய்து வைக்க. அத்தரிசனத்திற்காகத் தாம் கையாண்ட பயிற்சியைப் போதித்தார்கள், யான் கண்ட இன்பம் இவ்வையம் பெறவே, எனும் பிரார்த்தனையோடு.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

வயிறார மேய்ந்தபின் அசை போட்டு ஜீரணம் செய்வதுபோல், பெரியோர் ஈசுவரனைத் தேடித்தேடிப் பேரின்பத்தை மேய்ந்தபின், அவ்வின்பத்தின் திளைப்பினைக் கடுமையானப் பனிரெண்டு வருட நோன்புகள் மூலம் அசை போட்டு ஜீரணித்து விட்டு, மேய்ப்பவனைத் தரிசித்து நாமும் கடைத்தேற வேண்டும் என்பதற்காக நம்மோடு தொடர்ந்து வாழ்கிறார்கள். நம்மைக்கொண்டு அவர்கள் எதையும் அடைவதில்லை, நாம்தான் அவர்களிடமிருந்து ஆதாயம் அடைகிறோம்.

ஸ்ரீவிடயபுரம் மகான் அவர்கள் யாருக்கும் உபதேசம் செய்யவில்லை. அவரது சீடர் என்று பலர் தம்மை எண்ணிக் கொண்டார்களே தவிர, அவர் யாரையும் சீடனாக ஏற்றுக் கொள்ளவில்லை. தன்னை நாடி வருவோரின் பக்குவமறிந்து தனது பிரார்த்தனாபலத்தாலேயே அவர்கள் செல்லும் பாதை செம்மை பெற ஆசீர்வதித்திருக்கிறார். மிகவும் நெருங்கி உண்மையான ஆன்ம தாகத்தோடு கேட்டவர்களுக்கு உடனே மனதில் தெள்ளத் தெளிய ஆழமாய்ப் பதிந்து நிலைக்கும்படி விளக்கங்கள் மட்டுமே சொல்லிப் பேருதவி செய்திருக்கிறார்.

அவரது துணிபு யாரும் யாருக்கும் ஆசானாகக் கூடாது, வழிகாட்டியாக மட்டுமே நிறுத்திக் கொள்ளவேண்டும் என்பதாகத்தான் தெளிவாகிறது. ஏகலைவனைப் போல், யாரும் ஒரு பெரியாரை அல்லது வழியைத் தானே மனத்தளவில் தேர்ந்தெடுத்துத் தானாகவே உழைத்து முன்னேறும் முயற்சிதான் சரி என எண்ணி இம்மகான் வாழ்ந்திருக்கிறார்.

அவர் அடிக்கடி சொல்வது, 'சாமி, இந்த அடிமையைத் தேடி வராங்களே யொழிய, ஆயியைப் பாக்கணுங்கற தாகமே யாருக்கும் வரமாட்டேங்குதே' என்பதுதான்' அவ்வளவு அடக்கமாய் வாழ்ந்து உதாரண புருஷராய்த் திகழ்ந்திருக்கிறார்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திருவின் உரு

காலம் எதிலுமுள்ளது, எங்குமுள்ளது, என்றுமுள்ளது. ஆகாச தத்துவம் எங்குமுள்ளது, என்றுமுள்ளது; எதிலுமுள்ளது. இருள் என்றுமுள்ளது, எதிலுமுள்ளது, எங்குமுள்ளது.

இம்மூன்றும் ஒரே தத்துவத்தின், ஒரே பொருளின், ஒரே பிரபாவத்தின் வெவ்வேறு பெயர்களே. இம்மூன்றில் எதையும் பார்க்க முடியாது, உணர முடியாது, கணக்கிட முடியாது. இதுதான் மகாமாயாவின் மொத்த உரு.

இந்த அண்டசராசரங்கள் முழுவதும், மூன்று பெயரால் நாம் குறிப்பிடும், அந்த ஒன்றிலே அடக்கம். அதன் ஆதிக்கத்திலேதான், அரவணைப்பிலேதான் எதுவும், யாவும் இயங்குகிறது.

இந்த இருள் இயக்கத்தின்கண் இலங்கும் ஒளிக்கதிர் துணைகொண்டுதான் நாம் எதையும் பார்க்கிறோம், அறிகிறோம், உணர்கிறோம்.

நாம் ஒன்றை அறிகிற அதே சமயத்தில் அதிலே ஊடுருவி நிற்கும் உண்மைத் தத்துவத்தைப் பற்றிய அறியாமையையும் இதே இருள்தான் நம்மில் நிலைக்க வைத்திருக்கிறது.

எப்படி இருட்டில் பழகிய கண்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக, மங்கலாகப் புலப்படத் துவங்குகிறதோ, அதே போல் நமது அறியாமை இருளில் ஊடுருவி நிற்கும் அம் மாயையின் பிரபாவமே, உண்மைத் தத்துவத்தைக் கொஞ்சம், கொஞ்சமாக அறியும் தன்மையையும் நம்முள் வளர்க்கிறது.

எப்படி இருளிலேயே பழகி விட்டவன் சரளமாகத் தடைகளை அடையாளம் கண்டு கொண்டு கவனமாக உலவ முடிகிறதோ, அது போலவே அறியும் தன்மை நம்முள் சரளமாகும்போது, எத்தடைகளிலும் சிக்கி விடாத நோன்புத் தன்மை மலர்கிறது.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அப்படி மலர்ந்த தன்மை நமது முழுமையான இயல்பாக மாறும்போது மகாமாயா விலாசமான இருட்டில் ஊடுருவி நிற்கும் சித்சக்தியொளி தரிசனமாகிறது.

அவ்வொளி தரிசனமான பின் நம்மை நாமே அறிகிறோம் நமக்கு அன்னியமாக எதுவுமில்லையென உணர்கிறோம்—

இயக்கமின்றி இன்பமாய் இருந்த நிலைசிதறி
இயக்கவென்றி ரங்கினாள் இருளெனச் சித்சக்தி
மயக்கினாள் மாயாவிலாச வரங்கமைத்து
வியக்கவே விதமெலாம் விண்டுமறைத்து
மயக்கவே பழய நிலைப் புலனுணர்த்தி
மயக்குமன மழித்து மாற்றிமாறினாள்
சச்சிதானந்தமாய்!

— த்ரிசக்தி பாததூளி —

திருவின் வருகை

விடயபுரம் மகான் அவர்கள் இறுதிக் காலத்தின் சில நாட்கள் முன்னர், மிகவும் நெருங்கிய ஒருவரிடம் சொன்னாராம். "நான் வந்த வேலையில் பதினாறில் ஒரு பங்குதான் முடித்திருக்கிறேன். இன்னும் பதினைந்து பங்கு பாக்கியுள்ளது. அதை எப்படியும் அடிமை பூர்த்தி செய்துதான் ஆகணும். இந்தப் பதினாறில் ஒரு பங்கை நடத்தி வரும் ஆர்வத்தில், சற்று எங்கோ சக்திக்கு மீறி ஈடுபட்டு விட்டேன், இப்படிச் சீக்கிரம் முடிவு வந்து விடும் என்று எண்ணத் தோன்றாமல். பரவாயில்லை; அப்படி நான் எண்ணாமல் இருக்க வேண்டும் என்பதும் ஆயிசித்தம்தான். அப்படி எண்ணிப் பார்த்து விட்டால், நான் இப்போது அடைந்திருக்கும் இக்கட்டான நிலைக்குக் காரணமான சுமையை ஏற்கத்தயங்கி விடுவேனோ என ஆயிஎண்ணியிருக்கலாம்.

"அவளது எண்ண ஓட்டங்கள் சிலவற்றைச் சில சமயங்களில் என் போன்றோரது கண்ணுக்குக்கூட எட்டாமல் ஒளித்து வைத்து அவள் நடந்து கொள்வது, அவள் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட நியதிக்குத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்வதாகும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

"ஆகையால் நடப்பதை முழுமனதோடு வரவேற்போம். இனி மேலே நடக்க வேண்டிய பதினைந்து பங்கு வேலைக்கான முழு ஆர்வம், பூரண ஆற்றல், நிச்சய வெற்றி இவைகளை அவளே தருவாள். நான் திரும்ப வந்து அப்பதினைந்து பங்கினை முடிப்பேன். என்னை நம்பியவர்களை நான் உதறிச் செல்லவே இல்லை" என்று.

அப்படி அவர் திரும்ப வந்து நமக்கெல்லாம் கருணை செய்யத் துவங்கும் கால கட்டம் வெகு அருகே வந்து விட்டது. இதைப் படிக்கும் அன்பர்கள் யாவரும், அவரது கருணை கிடைப்பதற்குக் 'கியூ'விலே முன்னே இடம் பிடிக்கும் முயற்சியாக, உடனே விடயபுரம் சென்று அவரது சமாதியையும், மாரியம்மனையும், ஸ்ரீ மீனாக்ஷி ஸமேத ஸ்ரீ சுந்தரேசுவரரையும் வணங்கி வேண்டியதை வேண்டியபடி பெற்று, வாழ்வாங்கு வாழ்ந்து, நமது பாரம் பர்யத்தின் பெருமையை மறுபடி தளிர்க்கச் செய்யும் புனிதப் பணியினை மேற்கொள்வார்களாக!

விடயபுரம் அடையும்வரை உடையவரம் கிடைத்திடிலே
நெடிய நிலை கடியசுகம் முடிவுவரை காண்பார்காண்
விடயபுரம் உடையவளாம் முக்கண்ணாள் மாரியன்னை
இடையறாத இன்பங்களாய் ஈன்றணைப்பாள் பாரதையே

அரியவளாம் அருள்மாரி உறையுமிடம் விடயபுரம்
பெரியவளாம் அவள் மைந்தன் நிறையுமிடம் அவள்பாதம்
உரியவராய் உவகையுடன் விரைந்தாங்கு சேர்ந்தாலே
எரிந்துவிடும் அவலமெலாம் நிறைந்துவிடும் நல்வாழ்வே.

— திரிசக்தி பாததூளி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

திருப்பணி

ஒரு விந்தை என்னவென்றால், இவ்வளவு அரும்பெரும் ஆற்றலுடன் மக்களின் துயர் துடைத்துத் தரம் சேர்த்து வாழ்ந்த வள்ளலுக்கு இவரது காலத்திற்குப் பின் இவரை அடக்கம் செய்த பூமியில் ஒரு கட்டிடம் எழுப்பி அங்கு தினமும் தீபமேற்றி வைத்து இவருக்குக் கர்ப்பூர தீபா ராதனை செய்து ஆராதிக்கும் வாய்ப்பு இதுவரை நேரவே யில்லை.

ஒரு சமயம் ஸ்ரீ விடயபுரம் மகான் அவர்களே தனக்குச் சற்று ஓய்வு இருக்கட்டும் என எண்ணியிருக்கலாம்.

இவ்வளவு நீண்டகால இடைவெளிக்குப் பின் இப் புத்தகம் வெளிவந்து, நிர்மாணப்பணி மேற்கொள்ளப் படுகிறது எனும் செய்தி பரவலாக அறிய வரும்போது ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகளின் கருணைக்கு, ஏற்கனவே பாத்திரமான பக்தர்கள் மீண்டும் ஆர்வம் கொண்டு தொட்ட பணியை விட்ட இடத்திலிருந்து தொடரும் முயற்சி புத்துயிர் பெறும்.

அப்படி அவர்கள் ஆர்வம் புத்துயிர் பெறும்போது என்ன செய்வது, யாருடன் சேர்ந்து அதைச் செய்வது எனத் திகைக்க வேண்டாமெனும் நோக்கத்திலே இவ்வத்தி யாயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை ஒரு விளம்பரப் பகுதியோ என எண்ணி ஐயுற வேண்டாம்.

சுவாமிகள் காலத்திற்குப்பின் மாரியம்மன் கோயிலும் சிதிலமடைந்து தற்போது அவ்விடத்தில் ஒரு கல்மேடுதான் உள்ளது. திருக்குளமும் வெகுவாகச் சீர்செய்ய வேண்டி யுள்ளது. ஸ்ரீ மாரியம்மன் சிலையை அருகே பிடாரி (எல்லை யம்மன்) கோயிலில் வைத்துள்ளார்கள்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அக்கோயிலைப் புதிதாக நிர்மாணித்து, திருக்குளத்தையும் சீர் செய்து சமாதி மண்டபத்தையும் நல்ல முறையில் எழுப்பப் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஸ்ரீ மீனாக்ஷி சமேத ஸ்ரீ சுந்தரேசுவரர் ஆலயத்தையும் ஜீரணோத்தாரணம் செய்து ராஜகோபுரமும் கட்ட முயற்சி இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இப்புனிதப் பணிகள் இனிதே நிறைவேறப் பெருமளவில் பங்கு கொள்ளுமாறு பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

மேற்கொண்டு விபரங்கள் அறிய இந்நூலின் ஆசிரியரோடு தொடர்பு கொள்ளலாம். திருப்பணிக் கமிட்டி உருவானயுடன் அடுத்த அறிக்கை வெளிவரும்.

பிழைக்கு வருந்துகிறோம்

பக்கம்	தவறு	திருத்தம்
41	குறள்	ஔவை பாடல்
50	நூற்றூண்டுகளிம்	நூற்றூண்டுகளில்
56	திருவிழாக்கு	திருவிழா. வயதுக்கு வந்த

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

அனுபந்தம்

பாததூளிப் பாசறை அறைகூவல்.

மனிதனை நோக்கி விடுக்கும் இவ்வறைகூவல், தெய்வம் நமக்கு நல்கவிருக்கும் ஒரு வரமாகவும் வடிவெடுக்கட்டும்!

இன்றைய ஆரோக்கியமற்ற வாழ்வுமுறை அடியோடு மாற்றி அமைக்கப்பட்டு ஒரு செம்மையான தொகுப்பைக் கொண்ட வழிமுறை அமலாக்கப் படவேண்டும்.

பொய்க் கணக்கெழுத ஒரு படிப்பு, பொய் வழக்காட ஒரு படிப்பு, பொய் புனைய ஒரு படிப்பு, பொய்மைக்கு அலங்காரம் செய்ய ஒரு படிப்பு என்ற நிலைகள் அடியோடு மாற்றப் படவேண்டும்.

பொய்ம்மையொழிந்த, மெய் மட்டுமே சுடர்விட்டு ஒளிரும் கல்வி, வாழ்க்கை முறை, வழக்கில் வந்து, பரந்து, நிறைந்து, நிலைத்து, மனிதனது பாரம்பர்யப் பெருமைகள் நிரந்தரப் படுத்தப்படவேண்டும்.

அதற்கு ஒவ்வோர் தனிமனிதனும் தன்னுணை எடுத்துக் கொள்ளவேண்டும்.

எவ்வளவு பெரிய லாபமோ, இன்பமோ கிடைப்பதா யிருந்தாலும் பொய்மைக்கு ஆதரவு கொடுக்கக்கூடாது.

பொய்மையைக் கண்ட விடத்தெல்லாம் எதிர்த்து வீழ்த்துவதுதான் நம் முழுநேர நோன்பாக வேண்டும்.

உண்மை எங்கெல்லாம் எப்போதெல்லாம் பலவீனப் படுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் வலியச்சென்று தோள் கொடுத்து நிமிர்த்திவைத்து அதற்கு உரமூட்டவேண்டும்.

அநீதி எங்கு முளைவிட முயற்சி செய்தாலும் முளை யிலேயே அதைக் கிள்ளியெறிந்து வேரறுத்து மறுபடி முளை விடாத முடிவை நிரந்தரமாக்க வேண்டும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எவ்விடத்தும் சமாதானம் மட்டுமே நிலவக்கூடிய சூழ்நிலையைக் கண்காணித்துப் போற்றிப் பயிர் செய்ய வேண்டும்.

யாராக இருந்தாலும், யாரும், ஒருவருக்கொருவர் அன்னியரல்ல, நம்மவரே எனும் சமரச நிலை பரவ ஒவ் வொருவரும் தனி முயற்சியோடு இயன்றவரை அடுத்த வருக்கு, ஏதேனும் ஒரு அம்சத்திலாவது, உதவியாக இருந்து பரஸ்பர அன்பைப் பேணி வளர்த்துக் காக்க வேண்டும்.

யாரும் யாரையும் ஏமாற்ற இடங்கொடுக்காமல் கண் காணித்தல் வேண்டும்.

இயன்றவரையில் ஆங்காங்கு சத்சங்கங்கள் நிறுவிப் பொதுப்பணிகளில் பங்கேற்றல் திரும்பவும் அமலுக்கு வர வேண்டும். சத்சங்கம் என்பது அசத்தியத்தின் எதிரிகளைக் கொண்ட பாசறைகளாக ஒளிரவேண்டும்.

பணத்துக்கு முதலிடம் கொடுக்கும் வசூல் பட்டியல் வழக்கம் மாறி, அவரவர் வலிய வந்து செய்யும் உதவியைப் பெற்றுப் படிச்செலவேதும் செய்யாமல் முழுமையாகக் குறிப்பிட்ட பணியினுக்கே செலவு செய்து மீதமிருப்பதை ஊரார் அறிய ஓரிடத்தில் அடுத்த சந்தர்ப்பத்திற்காக இருப்பில் வைக்கவேண்டும்.

கருங்காலிகள் எந்த இடத்திலும் உருவாகாதவாறு கண் காணித்தல் வேண்டும்.

என்ன நிலை மீறினாலும் வன்முறைக்கிடமே கொடுக் காமல் அறிவுத்திறன் கொண்டே அமைதியை நிலைநாட்டும் திண்மையை யாவருள்ளும் வளர்க்கவேண்டும்.

தெய்வத்தின் பெயரால் கூட, தவறு நடப்பதை ஆதரிக்காதப் பகுத்தறிவுத் திண்மை நமது பாங்காக வேண்டும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

எளிமையே வாழ்வின் மூச்சுக்காற்ருகி ஆரோக்கிய வாழ்வு முறையே நமது குறிக்கோளாக வேண்டும். மனைவியைத் தவிர மற்றப் பெண்கள் யாவரும் உடன் பிறப்பே எனும் மரபு நிரந்தரமாகித் தாய்க் குலத்தின் சுதந்திரம் பேணிக்காக்கப்படவேண்டும்.

விளம்பரம் செய்து ஆதரவு தேடித் தலைமை பெறுதல் எனும் வழக்கம் வீழ்ந்து, தரமறிந்து நம்முள் நாமே தேர்ந்தெடுக்கும் நபர் தன்னடக்கத்துடன் தலைமையேற்று அதைப் பெருஞ்சுமையாகக் கருதி எச்சரிக்கையுடன் இயங்கும் சீரிய மனிதராகத் திகழ நமது பூரண ஒத்துழைப்பு காத்து நிற்க வேண்டும்.

உலகில், நாட்டில், ஒவ்வோர் ஊரிலும், ஒரு ஏசு தோன்ற வேண்டும், ஒரு நபி தோன்ற வேண்டும், ஒரு மகாவீரர் தோன்றவேண்டும், ஒரு புத்தர் தோன்ற வேண்டும், ஒரு அசோகர் தோன்றவேண்டும், ஒரு மத்வாசாரியார் தோன்ற வேண்டும், ஒரு இராமானுஜர் தோன்றவேண்டும், ஒரு சங்கரர் தோன்றவேண்டும், ஒரு விவேகானந்தர் தோன்ற வேண்டும்—தப்பித் தவறி ஹிட்லரின் சாயல்கொண்ட ஒரு புழுக்கூடத் தோன்றக் கூடாதென்ற பிரார்த்தனை நம் மனத்தை இடையரு த்யானமாய்ப் பற்றி நிற்க வேண்டும்.

இவ்வளவும் நாம் ஆற்றிக்கொண்டே சென்ருேமாளுல், நம்மை வழி நடத்திச் செல்ல ஆங்காங்கு மகா புருஷர்கள் தோன்றுவர். நம் வாழ்வு தழைக்கும், உலகில் அமைதி நிலவும், நிறையும், நிரந்தரம் பெறும்.

பாததூளிப் பாசறை,

தற்காலிகத் தலைவர் — மகாசக்தி பாததூளி
,, உபதலைவர் — பராசக்தி பாததூளி
,, தளபதி — த்ரிசக்தி பாததூளி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பாததூளிப் பாசறையின் சில எண்ணங்கள்:

I

விலைவாசி விஷமென ஏறுகிறது. இதற்கு ஆளும் கட்சியே பொறுப்பு என அப்போது எதிர்கட்சியாக இருப்போர் குற்றஞ்சாட்டுகின்றனர். பின்னர் இவர்கள் ஆளுங்கட்சியாகுங் காலத்திலும் விலைவாசி அதே ஏறு முகத்தில் தான் வளர்கிறது. முன் ஆளுங் கட்சியாயிருந்து தற்சமயம் எதிர்கட்சியாக இருப்போர் முன்னவர் செய்தது போலவே, மக்களிடம் சென்று விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஆளுங்கட்சி மீது குற்றப்பத்திரிக்கை படிக்கின்றனர். இவர்களின் பேச்சு வன்மையால் மக்கள் குழப்பப்படுகின்றனர், குழம்புகின்றனர்.

இவ்விலைவாசி ஏற்றம் இன்றோ நேற்றோ தொடங்கியதல்ல. இது நமது ஆரோக்கிய வாழ்வு முறை நலிய ஆரம்பித்த உடனேயே முளைவிட ஆரம்பித்து இன்று மாபெரும் விருக்ஷமாகி இலை, கிளை, காய், கனி விழுதுகளுடன் இன்னும் 'பெருகுவோம்' என எக்காளமிட்டு நிற்கிறது.

அடிப்படைகளைச் செம்மையாய் சீர்தூக்கிப்பார்த்து, காரண, காரியங்களை ஆராய்ந்து, சிந்தனைச் செல்வர்களும் சாதனை வீரர்களும், மாற்றங்களை, திருத்தங்களை, அறிமுகப் படுத்திச் செயல்பட்டாலன்றி, எத்தனை நூற்றுண்டுகள் கழிந்தாலும் இந்த விலைவாசி ஏறுமுகம் இறங்குமுகமாகும் வாய்ப்பே நேரப்போவதில்லை. வாய்ச்சொல் வீரர்களின் வசனக் கணைகளுக்கும், வோட்டு வேட்டைக்கு வருவோரின் கனல் மொழிகளுக்கும் அது பணியாது.

தோராயமாக எந்த கட்டத்தில் இந்த நச்சு விதைக்கப் பட்டது என்று ஆரசயும் போது, பணத்தை வட்டிக்கு விட்டு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

பணம் பண்ணுதல் என்ற பழக்கம் ஆரம்பமானது, முதற் கட்டம்.

இரண்டாவது கட்டம், இறக்குமதி செய்யப் பெற்றுப் புகுத்தப்பட்ட, நேரிடை வியாபாரமே நடவாமல், பேச்சு வார்த்தை ஒப்பந்த மூலமாகவே, நடைபெறும் பங்கு வியாபாரங்கள் வேரூன்றி வளர்ந்து விட்ட துர்ப்பாக்கிய நிகழ்ச்சி.

மூன்ருவது கட்டம், தரகர்கள் என்ற வர்க்கம் தோன்றி இயங்க ஆரம்பித்தது.

நான்காவது கட்டமாக விளம்பரச் செலவின் மூலம் உற்பத்திப் பொருளைப் பிரபல மடையச் செய்யும் உத்திகள்.

அவ்விளம்பரப் பணியே ஒரு தனி வர்க்கத்தை உற்பத்தி செய்து, சில பொருள்களுக்கான விளம்பரச் செலவு ஏறத்தாழ உற்பத்திப் பொருளின் அடக்க விலையையொத்த பரிமாணத்தை எட்டும் நிலை மலர்ந்திருப்பது.

பொருளின் உற்பத்திக்கு முன்ேடியாக, அதை யொட்டிய ஆராய்ச்சிக்குழு, திட்டக்கமிஷன். ஆலோசனைக் குழு என்றெல்லாம் அபரிமிதச் செலவினங்கள்.

வட்டிக்கு வாங்கிய பணத்லதக் கொண்டு பெருவாரி யாகப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பண வலுவின் ஆதாரத்தாலேயே செயற்கைமுறை தட்டுப் பாட்டை உண்டாக்கி விலைவாசி ஏற்றத்திற்கு வழிகோலு வது.

உற்பத்தித் திறனும், உழைப்பின் பயனுமே ஊதியத்திற் குரியவை எனும் மரபு மாறி, உறங்கிக் கொண்டிருக்கும்

Funding by IKS-MoE

 CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

உபரிப் பணம் இடம் மாறுவதால் உயர்ந்த விகிதத்தில் பொருளீட்ட முடியும் எனும் ஆரோக்கியமற்ற நிலை உருவான தால்தான் எல்லா மதிப்புள்ள நிலைகளும் தம் அந்தஸ்தை, செல்வாக்கை இழந்து இரண்டாந்தர நிலையை அனுபவிக்க நேர்ந்து பலவீனமடைந்து விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கப் போதிய ஆற்றலின்றி கிடக்கின்றன.

வரி கொடுக்காது ஏமாற்றக் 'கருப்புப்பண' உத்தி கையாளப் பட்டதால் விலைவாசி ஏற்றத்திற்கும், அவசிய மற்ற ஆடம்பரப் பொருட்கள் வாழ்வின் இன்றியமையா அங்கம் வசிக்கவும், வாய்ப்புக்கள் நிரந்தரமாகி விட்டன.

இவ்வாறான வழிமுறைகளால் அநேகம் பொருள்களின் விலையில் ஐம்பது சத விகிதத்திற்கும் மேற்பட்ட அளவு அர்த்தமில்லாத கண்ட வடிகால்கள் வழியாக விரயம் செய்யப்பட்டு, பொருளின் கச்சாச் சரக்கின் மதிப்பு, அதன் ஆக்கத்திற்குரிய ஊதியம், அது உருவாக நின்ற தொழில் நுட்பத்திற்குரிய சன்மானம் ஆகியவை போக, இவை யாவற்றுக்கும் முதலீடாக அமைந்த மூலதனத்திற்குச் சில சமயம் நட்டம் நேர்வதும் நடக்கிறது. லாபமாக நடந்தா லோ, மேலே சொல்லிய எல்லாச் சுமைகளையும், விலைவாசி ஏற்றத்தையும், முழுமையாக நுகர்வோர்தான் ஏற் கின்றனர்.

இந்தக் கோணத்தில், அறிஞர்கள், பொருளாதார வல்லுனர்கள், புரட்சிக் கோணத்தில் நிலைகளை ஆராய் வோர், யாவரும் ஆழ்ந்து சிந்தித்து ஏதேனும் நிவர்த்திக்கு வழி உண்டா எனும் சாத்தியக் கூறுகளை தேடித் தெளிந்து நம் வாழ்நாளிலேயே இதற்குப் பரிகாரம் காணும் வாய்ப்பு நேரப் பிரார்த்திப்போமாக.

அவதார புருஷர் நபி நாயகம் அவர்கள் வட்டி வாங்கும் செய்கையினை ஆதரிக்கவில்லை எனும் பேருண்மையை இவ் விடத்தில் நினைவு கூர்வது பொருத்தமே.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

II

தம் உயிரையே பலிவாங்க நியமித்துள்ள சிலுவையைத் தாமே சுமந்துப் பலிக்களத்திற்குச் சென்ற அவதார புருஷர் ஏசு பிரான் அவர்களின் தியாகம் கூடப் பணப் பேய் பிடித்த மேல்தள வர்க்கத்தின் மனத்தை மாற்ற முடியாதுபோனாலும், அம்மகாபுருஷரின் தியாகத் தீ இன்னும் அணைந்து விடவில்லையாதலால், அத் தீ என்றோ திடீரெனக் காட்டுத் தீயாக மாறி தீமைகளை அறவே பொசுக்கி மக்களுக்கு மறுவாழ்வு நல்கும் எனும் நம்பிக்கை நம்முள் செம்மையாய் வளர்வதாக.

III

மகான்கள்தான் மக்களை வழிநடாத்திச் செல்ல முழுத் தகுதியும் உரிமையும் பெற்றவர்கள். வள்ளுவர் பெருமானின் சான்றோரிலக்கணம் இதற்குச் சான்று. அரசியல் வாதிகள் அல்ல. இந்த உண்மையை இன்றையச் சமுதாயம், குறிப்பாக இளைஞர் சமுதாயம், முழுமையாக உணர வேண்டும்.

சென்ற தலைமுறைகளில் தன்னிகரிலா நேர்மையுள்ள மனிதர்கள் தியாகத் தீயில் தம்மைச் சுட்டுப் புடமிட்டு நாட்டிற்கும் மக்களுக்கும் தொண்டாற்றினர். அத் தொண்டின் எதிரொலியிலேயே கடந்த தலைமுறை வாழ்ந்து முடித்தது. இப்போது துவங்கியுள்ள தலைமுறைக்கு அவ்வாறான தலைவர்களே இல்லாது தத்தளிக்கும் நிலை நேர்ந்துள்ளது. அரசியல் தலைவர்களின் தனிச்சிறப்பு அம்சம் முக்கியமற்ற விஷயமாக ஆக்கப்பட்டு, அரசியல் கட்சிகளின் செல்வாக்கு மட்டும் ஓங்கியுள்ளது. இது நாட்டுக்கோ மக்களுக்கோ ஆரோக்கியமானதல்ல. இன்றைய இளம் இரத்தத்திலிருந்து தியாகச் செம்மல்களான மகா புருஷர்களும், தன்னலம் பேணாத் தன்னிகரற்ற தலைவர்களும் தோன்றட்டும் எனப் பிரார்த்திப்போமாக.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

IV

எந்த மூலேயிலும் தகிடுதத்தம், லஞ்சவஞ்சம், ஏமாற்று வித்தை, சராசரி மக்களின் அமைதியான வாழ்க்கைக்குப் பாதுகாப்பின்மை இவை மலிந்துகொண்டே போகிறது. ஒவ்வொரு பிரஜையும் தான் உண்டு வளர்ந்த தாய்ப் பாலுக்கு மாசு கற்பிக்கும் இழிசெயல் எதிலும் சூழ்நிலே தன்னே ஈர்த்து விடாதவாறு நடந்து, தான் கையொப்ப மிடும் தன் தந்தையின் பெயர்க்குறிஎழுத்திற்குப் பெருமை சேர்க்கும் கண்ணியனுக வாழ்வது என்ற கட்டுப்பாட்டைத் தனக்குத்தானே நிறுவி நடக்கத் தலேப்பட்டால், நம் தலே முறையிலிருந்தே பாலாறு, தேனுறுக் கனவுகளெல்லாம் நனவாகிவிடும். இதற்கான மனவுறுதியை நம் இளேஞர்கள் பெறவேண்டும் என இறையிடம் அடைக்கலம் கொள்வோமாக!

V

வரதக்ஷிணேக் கொடுமையொழிய ஒவ்வொரு இளேஞனும் வீரசபதம் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டம் வந்துள்ளது. தங்கம், வெள்ளி விலே ஏற்றம் பெண்ணேப் பெற்ருேரைப் பதற வைத்துள்ளது. அவர்களது பயம் நீங்க அபயவரம் நல்குவது இன்றைய இளேஞர் பெருமக்களின் பொறுப்பாகியுள்ளதை நினேவுப் படுத்த ஆசைப்படுகிருேம்!

VI

தாய்க்குலத்தின் கவர்ச்சிமிகுத் தோற்றத்தினே மிகைப் படுத்திக் காட்டி மயக்கமூட்டிப் பாலுணர்ச்சிக்கு வெறி யூட்டி வாழ்வுமுறை அலங்கோலத்தை எய்ய உதவும் வழி முறைகளுக்குச் சாவுமணியடிக்க வேண்டும். இதைச் செய்யத் தாய்க்குலத்தின் பூரண ஒத்துழைப்பு தேவை. எந்தச் சகோதரியும் தனது உருவத் தோற்றத்தை இவ்வாறு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ஒரு அலங்கோலச் செயலுக்குப் பயன்படுத்த இடந்தருவ தில்லை எனும் நோன்பை மேற்கொள்ளவேண்டும். பெண்ணி லிருந்தே பிறந்துவிட்டுப் பெண்ணை விலைபொருளாக்க நினைக்கும் அறியாமையிலிருந்து வருங்கால இளைஞர் சமுதாய மேனும் விடுதலை பெற வேண்டும். அதற்கு இன்றே அங்குரார்ப்பணம் நடக்கட்டும், இனிதே நிறைவேட்டும், எனப் பிரார்த்திப்போமாக!

VII

இனப்பெருக்கத்தைக் கண்டு அஞ்சிக் குரலெடுத்துக் கூவுகிறோம், மூலத்தை மறந்து. முன்னெல்லாம் உடலுறவு என்பது புனிதமான ஒன்ருக, எச்சரிக்கையுடன் நேரம் காலம் அறிந்து அனுபவிக்கும் ஒரு இன்பமாக, ஏன் நோன் பாகக்கூட மதிக்கும் அந்தஸ்தோடு இருந்தது.

ஆனல் இன்ரே உடலுறவென்பது, பாலுணர்வையூட்டி வெறியேற்றும் கேளிக்கைச் சாதனங்களால் ஊக்குவிக்கப் பட்டு, நினைத்த போதெல்லாம் இயந்திர கதியில் இயங்குவது எனும் பழக்கமாக நிலைத்ததுதான், மக்கட்தொகை, காளான் என, காட்டாற்று வெள்ளமெனப் பெருகக் காரணம். இந்த விஷயத்தையும் சிந்தித்துப் பரிகாரம் தேடிப் பயனடைவோமாக!

ஸ்ரீ மாத்ரே நம :

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இரைஞ்சுதல்

விளம்பரம் செய்து இந்நூலைப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்த இயலாத நிலை. இந்நூலைப் படித்து மனநிறைவு பெறும் அன்பர்கள் பெரிய மனது வைத்து இந்நூலின் தரத்தினை அடுத்தவர்க்குணர்த்தி அவர்களையும் வாங்குமாறு செய்யும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளும்:

— ஆசிரியன் — பிரசுரிப்பாளர்கள் —

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Funding by IKS-MoE